TIGHT BINDING

UNIVERSAL LIBRARY
OU_208143
UNIVERSAL LIBRARY

OUP—787—13-6-75—10,000.

OSMANIA UNIVERSITY LIBRARY

Call No. Tm 894·8111 R16T Accession No. P.G. Tm 1936

Author Ramalingam Pillai, V.

Title Tamilan Kadda Arasu, 1955.

This book should be returned on or before the date last marked below.

# தமிழன் கண்ட அரசு

நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராய நகரம் :: சென்னை-17

Frist Edition: May, 1955

[ Rights Reserved ]

விலை ரூ. 1—8—0

நவபாரத் பிரஸ், சென்னை—1.

# பதிப்புரை

நாமக்கல் கவிஞர் உயர்திரு இராமலிங்கம் பிள்ளை அவர்களின் அரிய நூல்களிற் சிலவற்றைத் தமிழ் மக்களுக்கு வழங்கி இன்புறும் பேறு எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

தமிழ் இனிமை மிக்கது. அவர்களின் உரைநடை அழகுநயத்தோடு கருத்துக்களுஞ் செறிந்து விளங்குவது இக்கட்டுரைத் தொகுப்பு. 'தமிழன் கண்ட அரசு' என்ற பெயருடன் தமிழ் மக்கள் முன்னர் சமர்ப்பிக்கிறோம்.

தமிழகம் விரும்பி வரவேற்றுக் கற்றுப் பயன்பெறும் என்று நம்புகிறோம்.

**பதிப்பாளர்**

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | காந்தீயப் புலவன் பாரதி | ... | 9 |
| 2 | கவிஞன் | ... | 25 |
| 3 | காந்தி நெறி சத்தியநோக்கு | ... | 34 |
| 4 | நமது குடியரசு | ... | 43 |
| 5 | நாகரீகத்தின் அளவுகோல் | ... | 53 |
| 6 | ஒரு குறள் | ... | 63 |
| 7 | தமிழன் கண்ட அரச நீதி | ... | 82 |
| 8 | வள்ளுவர் வகுத்த இல்லறம் | ... | 88 |
| 9 | காந்தி படம் என் மானத்தைக் காத்தது | ... | 99 |

# காந்தீயப் புலவன் பாரதி

அடிமை இருள் அகன்றுவிட்டது. விடுதலை விடிந்து சுதந்திர சூரியன் தோன்றிவிட்டான். புதுப்புதுக் காட்சிகள் புலப்படுகின்றன. விதம் விதமான எண்ணங்கள் விரிகின்றன. தினுசு தினுசான திட்டங்கள் தென்படுகின்றன. சோற்றுப் பஞ்சத்தின் துன்பங்களையும் மறந்து இந்நாட்டு ஏழை எளியவர்களும் சுதந்திரத் திருநாளை வெகு குதூகலத்தோடு கொண்டாடுகின்றனர்.

சுதந்திர உணர்ச்சியின் மகிழ்ச்சியை எழுத்தாலும் பேச்சாலும் வர்ணித்துவிட முடியாது. அடிமை வாழ்க்கையின் அல்லல்களையும் சுதந்திர வாழ்வின் சுகத்தையும் எண்ணிப் பார்த்தால்தான் அதன் இன்பம் தெரியும். அந்த இன்ப உணர்ச்சியை நாம் இப்போது அனுபவிக்க ஆரம்பித்திருக்கிறோம். இருநூறு வருஷங்களாக நம்மை அழுத்திக்கொண்டிருந்த அன்னிய ஆதிக்கத்தின் பாரம் நீங்கிவிட்ட பரம சந்தோஷத்தால் நமக்குள்ள பல கவலைகளையும் மறந்து சுதந்திர மகிழ்ச்சியில் சொக்குகின்றோம்.

அன்னிய ஆதிக்கத்தின் பாரம் நம்மைவிட்டு எப்படி அகன்றது? இப்போதுள்ள சுதந்திர உணர்ச்சியின் இன்ப நிலைமை நமக்கு எவ்வாறு வந்தது? இந்தச் சுதந்திர இன்பத்தை மீண்டும் இழந்துவிடாமல் இருக்க இதை எப்படிப் பாதுகாக்கவேண்டும்? என்பதையெல்லாம் நாம் இடைவிடாது சிந்தித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

இன்றளவும் உலகம் கண்டறியாத அற்புத அவதார மாகிய காந்தியடிகளின் தலைமையினால் நாம் வெகு சுலப மாக விடுதலையடைந்தோம். கத்தி யெடுக்காமல், ரத்தம் சிந்தாமல், கொலை புரியாமல், கொள்ளை யில்லாமல், நம்மை அடிமைப்படுத்தியிருந்த அன்னியர்கள், தாமாகவே மனமொப்பி, நம்முடைய நாட்டை நமக்கே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அடிமைப்பட்டிருந்த எந்த நாடும் இப்படி விடுதலை அடைந்ததில்லை. இந்த அதிசயம் காந்தியடிகளின் நன்னெறியை நாம் கடைப் பிடித்ததனால் ஏற்பட்ட காட்சியாகும்.

காந்தியடிகள் இந்நாட்டின் விடுதலைக்காக நடத்திய அறப்போரில் தமிழ்மக்கள் தலைசிறந்த பங்கு கொண்டார் கள். காந்தியடிகள் வகுத்த திட்டத்திலுள்ள எல்லாத் துறை களிலும் தமிழ்நாடே முன்னணியில் நின்றது. கதர் இயக் கம், தீண்டாமை தீர்த்தல், ஆலயப் பிரவேசம், மது விலக்கு, சிறைவாசம், சட்டசபைப் பிரவேசம் முதலிய எல்லாவற்றிலும் தமிழ்நாட்டின் பங்கே அதிகம் என்பதைக் கணக்குகளே காட்டும். தமிழ்நாட்டில் காந் தீயம் அவ்வளவு வெற்றி பெற்றதற்குக் காரணம் என்ன என்பதைச் சிறிது நாம் சிந்தித்துப் பார்ப்போமானால்தான், இன்றைக்கு நாம் நினைவுவிழாக் கொண்டாடும் ஸ்ரீ சுப்ர மண்ய பாரதியவர்களின் பெருமையும், இந்த விழாவின், பயனும் நமக்கு விளங்கும்.

மகாத்மா காந்தியவர்கள் அவருடைய அறப்போரை ஆரம்பிப்பதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னா லேயே அதற்காக நம்மைப் பக்குவப்படுத்தி வைத்தது பாரதியின் பாடல்களேயாகும். காந்தியடிகளின் ஸாத் வீகப் போரின் முறையையும் அதன் நுணுக்கங்களையும் இருந்து பார்க்கப் பாரதியார் இல்லாமற்போனார்! ஆனாலும்,

காந்தியடிகளால்தான் இந் நாட்டிற்கு விடுதலை கிடைக்கப் போகிறது என்று தீர்க்கதரிசனம் சொல்லி, நம்மெல்லோரையும் காந்திமார்க்கத்தைக் கடைப்பிடிக்கும்படி கற்பித்துப் போனவர் பாரதியே. இது உண்மை; வெறும் கற்பனை அல்ல. ஆதலால், சுதந்திரம் வந்துவிட்டதென்று நாம் இப்போது அடைந்துள்ள பூரிப்பிற்குப் பெரிதும் காரணமாக இருந்தது பாரதியின் புலமைதான். இந்த உண்மையைப் பின்வரும் விஷயங்கள் நிரூபிக்கும் :-

காந்தியடிகள் மக்களிடத்தில் அன்னிய ஆட்சியின் மேல் அருவருப்பை உண்டாக்குவதையே முதல் வேலையாக ஆரம்பித்தார். சுதந்திர உணர்ச்சியை ஊட்டவென்றே பிறந்த பாரதி அந்த அருவருப்புக்கு நம்மை முன்னாலேயே

**சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே**
**துஞ்சிடோம்—இனி அஞ்சிடோம்**
**எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்**
**ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ ?**

என்று சொல்லிப் பக்குவப்படுத்தி யிருந்தார்.

அன்னிய ஆட்சியில் வெறுப்பை உண்டாக்கி, சுதந்திர ஆர்வத்தைச் சொல்லவந்த காந்தியடிகள், நம்முடைய மனத்தை உடனே கவர்ந்துகொள்ள மிகவும் அனுகூலமாககாந்தி இயக்கத்திற்குப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னாலிருந்தே,

**என்று தணியும்இந்த சுதந்திர தாகம்?**
**என்று மடியும்எங்கள் அடிமையின் மோகம்?**
**என்று எமது அன்னை கைவிலங்குகள் போகும்?**
**என்று எமதுஇன்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?**

என்று நம்மைப் பாடிக்கொண்டிருக்கச் செய்திருந்தார் பாரதியார்.

காந்தியடிகளின் அறப்போருக்கு அத்யாவசியமான அடிப்படை அச்சமற்ற தன்மை. அச்சத்தை ஒழிக்க வேண்டும், அன்பை வளர்க்கவேண்டும், சத்தியத்தைக் காக்கவேண்டும். இந்த மூன்றின் சேர்க்கைதான் சத்யாக்ருஹம்.

காந்தியைப்போல் அச்சத்தை விட்டொழிக்கப் போதித்தவரும், அச்சமற்ற வாழ்க்கையை நடத்திக்காட்டியவரும், இந்த உலகத்தில் வேறு எவருமில்லை. அதைப் போலவே அச்சத்தை அகற்றவேண்டுமென்ற ஒன்றுக்காகவே பல பாடல்களைப் பாடிய புலவர், பாரதியைக் காட்டிலும் வேறு எவருமில்லை. அச்சத்தை நம் மனத்திலிருந்து அகற்றுவதற்கு நாம் பாடிப்பாடிப் பழகியிருந்த பாரதியின் பல பாடல்கள், காந்தியடிகளின் சத்யாக்ருஹத்திற்கு எவ்வளவு உதவியாக இருந்தது என்பதை நாம் மறந்துவிட்டாலும் சரித்திரமும் சத்தியமும் மறந்து விடாது.

**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.**
**உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.**
**இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்றபோதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.**

என்று அச்சத்தை விரட்டியடிக்கின்றார் பாரதியார்,

அச்சத்தைச் சுட்டெரித்துச் சாம்பர் கூட மிச்சமில்லாதபடி நிர்மூலமாக்கி, அன்பை வளர்க்கத் தியாகம் செய்து, தவக்கனலை வளர்ப்போம் என்ற காந்தீய தத்துவத்தைக், காந்தியடிகள் அவருடைய தவத்தை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே, பாரதியார் நமக்குக் கற்பித்தார்.

**தீ வளர்த்திடுவோம்—பெருந்**
**தீ வளர்த்திடுவோம்.**
**ஆவியினுள்ளும் அறிவினிடையிலும்**
**அன்பை வளர்த்திடுவோம்......**
**அச்சத்தைச் சுட்டு,அங்கு சாம்பருமின்றி**
**அழித்திடும் வானவனை—செய்கை**
**ஆற்றும் மதிச்சுடரைத்—தடை**
**அற்ற பெருந்திறலை—எம்முள்**
**இச்சையும் வேட்கையும் ஆசையும்காதலும்**
**ஏற்றதோர் நல்லறமும்—கலந்துஒளி**
**ஏற்றும் தவக்கனலை—பெருந்திரள்**
**எய்திப் பணிந்திடுவோம்**
**தீ வளர்த்திடுவோம்.**

பின்னும் பராசக்தியிடம் வரம் கேட்கும் முறையில்

**ஐயம் தீர்ந்துவிடல் வேண்டும்—புலை**
**அச்சம் போயொழிதல் வேண்டும்.**

என்கிறார்.

**பயம் எனும் பேய்தனை அடித்தோம்—பொய்மைப்**
**பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்**

என்று ஜயபேரிகை கொட்டுகின்றார்.

இப்படியாக, அச்சத்தைப் போக்குவதற்கு மட்டும் பாரதியார் பாடிய பாட்டுக்கள் இன்னும் பல உண்டு. அவற்றை யெல்லாம் சொல்ல இடமும் காலமும் இல்லை.

அச்சம் இல்லாத மனத்தில்தான் உண்மையான தைரியம் உண்டாகிறது என்பதும், அதிலிருந்துதான் ஆன்ம பலம் உதிக்கிறதென்பதும், அந்த ஆன்ம பலத்தைக் கொண்டுதான் மிருகபலத்தாலும் ஆயுதபலத்தாலும் நம்மை அடிமைப்படுத்தியிருந்த அன்னிய ஆட்சியை வெல்ல முடியும் என்பதும்தான் மகாத்மா

காந்தியின் போதனையும்; போர்முறையும். அந்தப் போர் முறைக்குச் சாதகமான பாட்டுக்களையேதான் பாரதியார் பாடித்தந்து நம்மைப் பழக்கி வைத்திருந்தார். அந்த அச்சம் நீங்கிய தைரியத்தை,

**சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்எண்ணம்**
**சாயுமோ—ஜீவன்—ஓயுமோ**
**இதயத் துள்ளே இலங்கும் மகாசக்தி**
**ஏகுமோ—உயிர்—வேகுமோ**

என்ற பாட்டில் பார்க்கிறோம். மிருக பலத்தை வெல்லுதற்கு ஆன்ம பலம் வேண்டும் என்று பாரதியார் பராசக்தியிடம் வரம் கேட்கிறார் :—

**தோளை வலிவுடையதாக்கி—உடல்**
**சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி**
**வாளைக்கொண்டு பிளந்தாலும்—கட்டு**
**மாறு மனஉறுதி தந்து—சுடர்**
**நாளைக்கண்ட மலர்போலே—ஒளி**
**நண்ணித் திகழும் முகம்தந்து—மத**
**வேளை வெல்லும் முறை கூறி—தவ**
**மேன்மை கொடுத்தருளல் வேண்டும்.**

இந்தப் பாட்டு வெகு முக்கியமான பாட்டு. மகாத்மா காந்தியவர்கள் அனுபவ சித்தியாக வாழ்ந்து காட்டிப் பிறருக்கும் உபதேசித்த ஆன்மசக்தி எதுவோ அதை அப்படியே படம்பிடித்துக் காட்டுவது. இந்தப் பாடல் இப்போது கிடைக்கிற அச்சுப் புத்தகங்களில் கொஞ்சம் பேதப்பட்டிருக்கிறது. அந்தப் பேதங்கள் தடித்த எழுத்துக்களால் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 1908-ம் வருஷத்திலிருந்து எனக்குப் பாரதியாரிடத்தில் பக்தியுண்டு. அவரைத் தரிசிக்கவேணும் என்று நான் பிரியப்பட்ட சமயத்தில், அவர் புதுச்சேரியில் புகலடைந்துவிட்டார். பிறகு

1911–ம் ஆண்டில் அவரையும் ஸ்ரீ அரவிந்த கோஷையும், ஸ்ரீ வ. வெ. சு. ஐயரவர்களையும் பார்த்து வருவதற்காக நானும் ஒரு நண்பரும் புதுச்சேரிக்குப் போனோம். அங்கேயும், அவரை இந்திய ரகசியப் போலீசார் கண்காணித்து வந்ததால், அவருடைய வீட்டிற்கு நாங்கள் போனபோதெல்லாம் அவர் அகப்படவில்லை. அரவிந்தரையும் பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. வ. வெ. சு. ஐயரவர்களைமட்டும் பார்த்து விட்டுத் திரும்பிவிட நேர்ந்தது. அப்படி நான்கு நாட்கள் நாங்கள் புதுச்சேரியில் சுற்றிக்கொண்டிருந்த போது, பாரதியின் பக்தர்கள் சிலரைச் சந்தித்தோம். அவர்கள் இந்தப் பாடலையும் இன்னும் சில பாடல்களையும் எங்களுக்குக் காட்டினார்கள். அவற்றின் பிரதிகளை எடுத்துக் கொண்டு வந்தோம். அப்போதே எனக்கு இந்தப் பாட்டு மனப் பாடம். இப்போது அச்சாகியிருக்கிற நூல்களில் இந்தப் பாட்டு பிழையாக இருக்கிறது. இந்தப் பிழையை மாற்றி விடவேண்டும். இப்படி அநேக தப்புக்கள் பாரதியின் பாடல்களில் புகுந்துவிட்டன. அதை அறிந்தவர்கள் திருத்த வேண்டும்.

இந்தப் பாட்டு, அச்சமற்ற தைரியத்தினால் உதிக்கின்ற ஆன்ம பலம், மிருக பலத்தினாலும் ஆயுத பலத்தினாலும் •வருகின்ற ஹிம்சையைப் பொருட்படுத்தாது என்றும், அதுதான் தபோபலம் என்றும், மகாத்மா காந்தி அடிக்கடி சொல்லி வந்ததற்குச் சரியான கருத்துக்கள் அடங்கிய பாட்டு ஆகும்.

காந்தியடிகள் தாம் எந்தவிதமான மரணத்தை விரும்பினார் என்பதை, அவர் மரணமடைவதற்குப் பல வருஷங்களுக்கு முன்னாலேயே தம்முடைய 'எங்இந்தியா' பத்திரிகையில் எழுதியிருந்தார். அதை நான் அப்படியே மொழிபெயர்த்து,

**குத்தீட்டி ஒருபுறத்தில் குத்தவேண்டும்**
**கோடாரி மறுபுறத்தைப் பிளக்கவேண்டும்**
**ரத்தம்வரத் தடியடியால் ரணமுண்டாக்கி**
**நாற்புறமும் பலர்உதைத்து நலியத்திட்ட**
**அத்தனையும் நான்பொறுத்து அஹிம்சைகாத்து**
**அனைவரையும் அதைப்போல நடக்கச்செய்து**
**ஒத்துமுகம் மலர்ந்துஉதட்டில் சிரிப்பினோடும்**
**உயிர்துறந்தால் அதுவேஎன் உயர்ந்தஆசை**

என்ற ஒரு செய்யுளாகச் செய்தேன். இந்தக் கருத்தும் முன் சொன்ன பாரதி பாட்டிலுள்ள கருத்தும் ஒற்றுமை உடையன என்பது எளிதிற் புலப்படும்.

எனவே, காந்தியடிகளின் அறப்போருக்கு மிகவும் அவசியமாக இருந்த அச்சமற்றஆன்ம - பல விருப்பத்தைப் பாரதியார் ஏற்கனவே அரசியல் போராட்டத்துக்காகப் பாடின பாடல்களோடு சேர்த்துப் பாடித்தந்து அந்த தத்துவத்தில் நமக்குப் பயிற்சி யுண்டாக்கியிருந்தார். இதே கருத்துக்கள் நம்முடைய பழைய நூல்களில் பல இடங்களில் மறைந்திருக்கலாம். அதைப்பற்றி இங்கேபேச்சில்லை. ஆனால் நாம் இன்று அடைந்துள்ள விடுதலைக்காக நடந்த போராட்டங்களுக்கென்றே இந்த ஆன்ம தைரியத்தைப் பாட்டாகப் பாடித்தந்தவர் பாரதிதான். அதைக் காரியத்தில் சாதித்தவர் காந்திதான். தமிழ் நாட்டில் காந்தீயத்தின்வெற்றிக்கு முன்னணியாக முழங்கியது பாரதியின் பாட்டுக்களே.

## புதுமையும் புரட்சியும்

மகாத்மாவின் சரித்திரமும் பாரதியாரின் பாட்டுக்களும் புதுமையும் புரட்சிகரமும் உள்ளனவென்று நாம் போற்றுகின்றோம்; அது சரிதான். ஆனாலும் அந்தப் புதுமையிலும் புரட்சிகரத்திலும் மறைந்திருக்கிற பழமையை நாம் மறந்து

விடக்கூடாது. மகாத்மா காந்தி "நான் ஒன்றும் புதிய விஷயத்தைக் கண்டுபிடித்து விடவில்லை. நம்முடைய முன்னோர்கள் நெடுங்காலமாக அனுஷ்டித்து, நன்மை கண்டு நமக்கென்று சொல்லிப்போன உண்மைகளை, நாம் அவமதித்து அடிமைகளாகிவிட்டோம். அவர்கள் சொல்லியிருக்கிற சத்தியநெறியை மறுபடியும் நாம் கடைப்பிடித்தால், வெகு சீக்கிரத்தில் நாம் சுதந்திரம் அடைந்து சுகம் பெறலாம். சத்தியத்துக்குப் புதுமையில்லை, முதுமையும் இல்லை" என்றார்.

நெடுங்காலமாகத் தொடர்புவிட்டுப்போன எதையும், மறுபடியும் புகுத்தினால், அது புதுமையாகவும் புரட்சியாகவுந்தான் தோன்றும்

பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர்கள் சேகரித்து வைத்த மெய்ஞ்ஞான உண்மைகளில் பொய்களைப் புகுத்திப், போலி வேதாந்தம் பேசிக்கொண்டு, கர்ம தர்மங்களின் கஷ்டங்களுக்குப் பின்வாங்கி, சுகபோகங்களை மட்டும் விரும்பிய சோம்பேறிகளாகி, அன்னியர்க்குத் தொண்டு செய்து அடங்கிக்கிடந்த நம்மை, அடித்து இடித்துத் தட்டியெழுப்பித் தைரியமூட்டப் பாரதியார் பாடின பாட்டுகளும், காந்தியார் செய்த காரியங்களும் புரட்சிகரமான புதுமைகள்தான்.

பாரதியார் சோம்பேறி வேதாந்தத்தைத் தூற்றினார். வெறுஞ் சடங்குகளில் முடங்கிவிட்ட சம்பிரதாயப் பழக்க வழக்கங்களைச் சாடினார். ஜீவகாருண்ய ஒழுக்கத்துடன் கூடிய செய்கையில்லாத நம்பிக்கைகளைக் கண்டு சீறினார். இல்வாழ்வானுக்கு வெறும் வேதாந்தம் உதவாதென்று இடித்திடித்துப் பாடினார். வேதாந்தியும் கர்மவீரனாக விளங்க வேண்டுமென்று வீறு பேசினார்.

'உலகம் பொய், காண்பதெல்லாம் மாய்கை, மனைவி, மக்கள், வீடு, வாசல் எல்லாம் வெறும் தோற்றம்' என்று சொல்லிக்கொண்டு சோம்பித் திரிவதை இகழ்ந்து,

**காண்பதெல்லாம் மறையுமென்றால்**
**மறைந்ததெல்லாம் காண்பமன்றோ**
**வீண்படு பொய்யிலே நித்தம்**
**விதிதொடர்ந்திடுமோ**
**காண்பதுவே உறுதி கண்டோம்**
**காண்பதல்லால் உறுதியில்லை**
**காண்பது சத்தியம் இந்த காட்சி நித்தியமாம்**

என்றார். பின்னும் வெறும் சாஸ்திரப் பேச்சுக்களை வைத்துக்கொண்டே முத்தியடையலாம், மோக்ஷமடையலாம் என்ற நம்பிக்கைகளை மறுத்துக் காந்தியடிகள் அடிக்கடி சொல்லிவந்ததைப் போல், 'இந்த பூலோகத்தை நாம் சொர்க்க பூமியாக்கிவிடலாம்' என்றும் பாடினார்.

**செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்**
**சேர்ந்திடலாம் என்றே எண்ணியிருப்பார்**
**பித்த மனிதர்; அவர் சொல்லும் சாத்திரம்**
**பேயுரையாம் என்று இங்கு ஊதேடா சங்கம்**
**இத்தரை மீதினிலே இந்தநாளிலே**
**இப்பொழுதே முத்தி சேர்ந்திட நாடி**
**சுத்த அறிவு நிலையில் களிப்பவர்**
**தூயவராமென்று இங்கு ஊதேடா சங்கம்**

இப்படியெல்லாம் சொல்லிச் சமுதாயத்தைச் சுத்தப்படுத்திக் கர்மவீரத்தைத் தூண்டிக்கொண்டேயிருந்த பாரதியார் வேதாந்த மெய்ஞ்ஞானத்தை மறந்துவிடவில்லை. கர்மவீரம் சிறப்படைவதற்கு, ஆன்ம உணர்ச்சியையும் மனவாக்குக் காயங்களுக் கெட்டாத பரம்பொருளின் நித்தியத்தையும் இடையிடையே நினைப்பூட்டுகிறார். எல்லாப் பொருள்

களும் பரம்பொருளின் வடிவம். அந்தப் பரம்பொருளின் பகுதியே நாம் என்ற அத்வைத ஞானத்தை.

**காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
**நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்கக் களியாட்டம்—என்றும்,**

எல்லா உயிர்களும் கடவுளின் இருப்பிடம் என்றுணர்ந்து ஜீவஹிம்சை செய்யாதிருப்பதே சிறந்த அறமென்று வலியுறுத்த,

**பொன்னார்ந்த திருவடியைப் போற்றி இங்கு**
**புகலுவேன் யானறியும் உண்மையெல்லாம்**
**முன்னோர்கள் எவ்வுயிரும் கடவுள் என்றார்**
**முடிவாக அவ்வுரையே நான் மேற்கொண்டேன்**
**அன்னோர்கள் உரைத்ததன்றிச் செய்கையில்லை**
**அத்வைத நிலைகண்டால் மரணம் உண்டோ**

என்றும் பாடுகின்றார்.

உலகத்தில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் தீமைகள் செய்துகொண்டேதான் இருப்பார்கள். இந்த நாடகம் திருப்பித்திருப்பி நடந்துகொண்டேதான் இருக்கும். அதைக் கண்டு நாம் தளர்ந்துவிடக் கூடாது என்று,

**உலகெலாம் ஓர் பெருங்கனவு; அதனுளே**
**உண்டு, உறங்கி இடர்செய்து செத்திடும்**
**கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கை ஓர்**
**கனவிலும் கனவாகும்; இதற்கு நாம்**
**பல நினைந்து வருந்தி இங்கென் பயன் ?**
**பண்டு போனதை எண்ணி என் ஆவது ?**
**சில தினங்கள் இருந்து மறைவதில்**
**சிந்தை செய்து எவன் செத்திடுவானடா—**

என்கிறார். பின் மனத்திற்குத் தெளிவு சொல்லுகின்றார் :

**இன்னும் ஒருமுறை சொல்வேன் பேதை நெஞ்சே!**
**எதற்கும் இனி உழைவதிலே பயனென்றில்லை;**
**முன்னர் நமதிச்சையினால் பிறந்தோமில்லை;**
**முதல், இறுதி, இடை நம் வசத்திலில்லை;**
**மன்னும் ஒரு தெய்வத்தின் சக்தியாலே**
**வையகத்தில் பொருளெல்லாம் சலித்தல்**
**கண்டாய்;**
**பின்னை ஒரு கவலையும் இங்கில்லை; நாளும்**
**பிரியாமல் விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்**

அப்படிப் "பிரியாமல் விடுதலையைப் பிடித்துக்கொண்டு", அந்த விடுதலையை அடைவதற்குப் பரம்பொருளிடத்தில் மகாகவி வரம் வேண்டுகின்றார். அந்த வரத்தைப் பாரதி தமக்குமட்டும் என்று கேட்கவில்லை; நம் ஒவ்வொருவரும் அந்த வரத்தைப் பெறவேண்டுமென்றே கேட்கிறார்.

**அறிவிலே தெளிவு; நெஞ்சிலே உறுதி**
**அகத்திலே அன்பினோர் வெள்ளம்;**
**பொறிகளின்மீது தனி அரசாணை;**
**பொழுதெலாம் நினது பேரருள்**
**நெறியிலே நாட்டம்: கருமயோகத்தில்**
**நிலைத்திடல்; என்றிவை அருள்வாய்**
**குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்**
**குலவிடும் தனிப்பரம் பொருளே !**

தெளிந்த அறிவு, திடமான சித்தம், எண்ணமெல்லாம் கருணை வெள்ளம், ஐந்து இந்திரிய ஆசைகளையும் அடக்கி ஆளக்கூடிய ஏகாதிபத்தியம், எந்த நேரத்திலும் தெய்வ நம்பிக்கையோடு கூடிய சன்மார்க்கத்திலே குறி, அது மட்டுமா? வெறும் நினைவோடும் பேச்சோடும் நின்று விடாமல் சலிப்பில்லாமல் நிஷ்காமியமாகக் கர்மங்களைச்

செய்துகொண்டே இருத்தல், ஆகிய இவைகள் வேண்டும் என்று கேட்கிறார்.

இதுதான் காந்தீயத்தின் பூரண வடிவம். இந்தப் பாடலைப் பாரதியார் தம்முடைய சுயசரித்திரத்தின் கடைசிப் பாட்டாகப் பாடியிருக்கிறார். பாரதியாரின், வாழ்க்கை லட்சியம் இதுதான். அவருடைய எல்லாப் பாடல்களையும் சேர்த்து வடித்தெடுக்கக்கூடிய 'ரஸமும்' இதுதான்.

இப்படிக் காந்தீயத்தைப் பெயர்சொல்லாமல் முன்னாலேயே வரித்துக்கொண்ட பாரதியார், அப்படிப்பட்ட வடிவமாகிய காந்தி மகாத்மா உண்மையாகவே வந்து விட்டதைக் கண்டார்: துள்ளிக் குதித்து எதிர்கொண்டோடி "வாழ்க நீ எம்மான்" என்று பஞ்சகம் பாடி வரவேற்றார். காந்தி அண்ணலின் பரிசுத்த வாழ்க்கையைப் பார்த்தார். அவர் இந்நாட்டின் விடுதலைக்காக வகுத்திருந்த "ஒத்துழையாமைத்" திட்டத்தின் பெருமையையும் உணர்ந்தார்.

"அண்ணலே! நெடுங்காலமாக அடிமைப்பட்டுப் பரதவிக்கும் இந்தப் பாரதநாட்டை விடுவிக்க நீ வந்துவிட்டாய். இந்த உலகம் இதுவரையிலும் கண்டறியாத மிகவும் புதுமையான, ஆனால் மிகவும் சுலபமானதுமான ஒரு நன்னெறியைக் காட்டிவிட்டாய். இப்படிப்பட்ட அற்புதத்தைச் செய்து எங்கள் துன்பங்களைத் தொலைத்துவிட்ட உன்னை, மூர்ச்சையாகி விழுந்து செயலற்றுக் கிடந்த தசரதகுமாரனை எழுப்பிவிடச் சஞ்சீவியைக் கொண்டுவந்த அநுமான் என்று சொல்லட்டுமா? அல்லது பெரும் மழை இடி மின்னல்களால் அழிந்துபோகும் நிலைமையிலிருந்த உயிர்களைக் காப்பாற்றக் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்த கோபாலன் என்று சொல்லட்டுமா? என்னென்று புகழ்வேன்?

கொலை புரிந்து வெற்றிகூறும் யுத்த முறைகளை இகழ்ந்து தள்ளிவிட்டு அதைக் காட்டிலும் சக்தி வாய்ந்த ஒரு தர்ம மார்க்கத்தைக் காட்டிவிட்டாய். அதுதான் அறிஞர்களும் பக்தர்களும் போற்றவேண்டிய மார்க்கம். நீ வகுத்துத் தந்திருக்கிற "ஒத்துழையாமைத்" திட்டத்தினால் இந்தியாவுக்கு வரப்போகிற நன்மைகளைக் கண்டு இந்த உலகம் முழுவதும் பகைமையையும் யுத்தக் கொடுமைகளையும் விட்டுவிட்டு, அன்புமிகுந்த அறநெறிகளைப் பின் பற்றி வாழ்க" என்று.

**கொடிய வெம் நாகபாசத்தை மாற்ற**
**மூலிகை கொணர்ந்தவன் என்கோ,**
**இடிமின்னல் காக்கும் குடைசெய்தான் என்கோ**
**என்சொலிப் புகழ்வது இங்குஉனையே**
**விடிவிலா துன்பம் செயும் பராதீன**
**வெம்பிணி அகன்றிடும் வண்ணம்**
**படிமிசை புதிதாச் சாலவும் எளிதாம்**
**படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய்.**
**பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்;**
**அதனினும் திறன் பெரிதுடைத்தாம்**
**அருங்கலைவாணர் மெய்த் தொண்டர்தங்கள்**
**அறவழி என்றுநீ கண்டாய்;**
**நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'**
**நெறியினால் இந்தியாவிற்கு**
**வரும்கதி கண்டு பகைத்தொழில் மறந்து**
**வையகம் வாழ்க நல் அறத்தே.**

இந்தப் பாட்டுக்கள் இன்றைக்கு 28 ஆண்டுகளுக்கு முன் பாரதி சொன்ன தீர்க்கதரிசனம். காந்தியடிகளால் இந் நாட்டுக்கு மட்டுமன்றி உலக மக்களுக்கெல்லாம் வரக்கூடிய நன்மைகளை நன்ருகக் கண்டுகொண்ட

உண்மைப் புலவன் பாரதி நமக்கு என்ன சொன்னார்? "உத்தமன் வந்துவிட்டான். அவனால் இந்த நாடு விடுதலை யடையும்; உலகமும் உய்யும். ஆதலால் காந்தியையே பின்பற்றுங்கள்" என்று நமக்குக் கட்டளையாக

**சொல்வது கேளீர் புவிமிசை இன்று**
**மனிதர்க் கெல்லாம் தலைப்படும் மனிதன்**
**தர்மமே உருவாம் மோகன தாஸ**
**கரம் சந்திரகாந்தி என்பது காணீர்**
**அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே**
**தலைவனக் கொண்டு புவிமிசை தருமமே**
**அரசியல் அதனினும் பிறஇயல் அனைத்திலும்**
**வெற்றி தரும்என வேதம் சொல்வதை**
**முற்றும் பேணுதல் முற்பட்டு நின்றால்**
**பாரத மக்கள் இதனால் படைஞர் தம்**
**செருக்கு ஒழிந்து உலகில் அறம்திறம்பாத**
**கற்றோர் தலைப்படக் காண்போம் விரைவிலே'**

என்பதைப் பாடினார். இந்தப் பாட்டில் "காந்தியைப் பின்பற்றினால் அரசியலில் மட்டுமன்றி மனித வாழ்க்கை யின் எல்லாத் துறைகளிலும் தருமமே தலைசிறந்து நிற்கும். அதுமட்டுமா, காந்தியின் தலைமையினால் இந்த உலகத் தில் இப்போது ஆயுத பலத்தைக்கொண்டு மருட்டிவரும் போர் வீரர்களுடைய கர்வத்தை ஒழித்துத் தருமம் தவறாத முறையில் அரசுபுரியும் நல்லவர்கள் தலைவர்களாக வரப் போகிறார்கள்" என்றார். அந்தத் தீர்க்கதரிசனம் எவ்வளவு உண்மை என்பதைக் காந்தியடிகளின் பரம பக்தர்களான ஜவஹர்லால் நேருவும், அவர்களுடைய சகாக்களும் இன்று நமது மத்திய சர்க்காரை நடத்திவரும் முறையும், அதைக்கொண்டு இப்பொது உலகத்தில் இருந்துவரும் யுத்த வெறியைப் போக்கிவிடுவதற்காக அவர்கள் புரிந்து வரும் அரும்பெரும் முயற்சிகளும் காட்டுகின்றன.

கடைசியாக, மகாகவி பாரதியவர்கள் "காந்தி சொன்னபடி கேட்டோம் விடுதலை வந்துவிடும். பின்

இந்த நாட்டில் சுபிக்ஷம் பெருகி ஸ்ரீதேவி தாண்டவம் செய்வாள்'' என்று சொல்லிவிட்டு மறைந்துவிடுகிறார்.

**காந்திசேர் பதுமராகக் கடிமலர் வாழ் ஸ்ரீதேவி**
**போந்துநிற்கின்றாள் இன்று பாரதப் பொன்னாடெங்கும்**
**மாந்தர் எல்லோரும் சோர்வை அச்சத்தை மறந்து**
**விட்டார்**
**காந்திசொல் கேட்டார் காண்பார் விடுதலை**
**கணத்தினுள்ளே.**

பாரதியார் பணித்தபடி காந்திசொல் கேட்டோம். விடுதலை கண்டோம். ஸ்ரீதேவி வந்துவிட்டாள். இனி நாட்டில் எல்லா நலங்களும் பெருகும்.

விடுதலைபெற்று நாம் அடைந்துள்ள இந்த இன்ப நிலைமைக்குக் காரணமாக இருந்த காந்தீயத்தைத் தெய்வீகப் புலமை வாய்ந்த ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி அவர்கள் நமக்கு எப்படி முன்னாலிருந்தே கற்றுக் கொடுத்திருந்தார் என்பதை, இன்று நினைவுகூர்ந்து இனியும் நாம் அவர் சொன்ன நன்னெறியிலேயே நிற்கத் தீர்மானிப்போமாக.

பாரதிப் புலவனுடைய கவிதை முழுவதிலும் காந்தீயம் ஒன்றினைத்தான் காணுகிறோம். இடையிடையே இருக்கிற பல்வேறு பாட்டுக்களெல்லாம் நாம் நமது உணவுகளின் இடையிடையே கலக்கின்ற புளிப்பு, இனிப்பு, காரம், பட்டை, லவங்கம், ஏலம், முந்திரிப்பருப்பு, திராட்சை போன்ற துணைச் சேர்க்கைகளே யன்றி வேறல்ல.

**பாரதியின் நினைவு இந்தப் பரதநாட்டின்**
**மெய்ஞ்ஞானத்தின் நினைவாகும்**
**பாரதியின் நினைவு அந்தத் மெய்ஞ்ஞானத்தை**
**வடித்தெடுத்த தமிழ்த்தாயின் நினைவாகும்**
**பாரதியின் நினைவு அந்தத் தமிழ்த்தாயின்**
**மணிமுடியாகிய காந்தீயத்தின் நினைவாகும்**
**காந்தீயம் ஒன்றுதான் உலகத்திற்குக்**
**கதிமோக்ஷம்**

# கவிஞன்

'கவிஞன்' என்பவன் யார்? அவனுடைய கலை என்பது என்ன? அந்தக் கலைக்கு ஊற்றுக்கண் எது? அந்தக் கலையை வெளிப்படுத்த அவனுக்கு உதவிய உபகரணங்கள் எவை? அதை அவன் வெளிப்படுத்திய முறை எவ்வாறு? என்பனவற்றை விளக்குவதற்கு, முதலில் 'கவி' என்றால் என்ன என்பதைச் சொல்லவேண்டும்.

'கவி' அல்லது 'கவிதை', அல்லது பாட்டு, அல்லது 'செய்யுள்', என்பது — கேட்பதற்கு ஒருவித இன்பம் உண்டாகும்படியாகப் பதங்களை அடுக்குவதே யாகும். கவிதை என்பதற்கு இன்றியமையாத முதல் அடையாளம் இந்தச் சொல்லடுக்கேயாகும். அடுக்கடுக்காக, அலை அலையாக, ஒரு குறிப்பிட்ட முறையில், சாமர்த்தியமாகக் கூட்டியுங் குறைத்தும் நீட்டியுங் குறுக்கியும் வெளிப்படுத்தப்படுகிற வெறும் ஓசைதான் சங்கீதம் என்பதும். இந்த வெறும் ஓசைகள் இன்பம் கொடுப்பதோடுகூட, வேறு குண உணர்ச்சிகளையும் உண்டாக்கும். உதாரணமாகப் '**பட்**டென்று வெடித்தது', '**படபட**வென்று வெடித்தது', '**பளீர்** என்று அடித்தான்', '**பளீர்பளீ**ரென்று அடித்தான்', '**திப்**பென்று குதித்தான்', '**கணீ**ரென்று சொன்னான்', '**வழவழ**வென்று பேசினான்' என்பனபோல. இவற்றை உச்சரிக்கும்போதே ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குண உணர்ச்சியும், நிகழ்ச்சிச் சித்திரமும் நம் நெஞ்சில் தாமாகவே உதிக்கின்றன. அர்த்தமில்லாத ஓசைகள் கூட உணர்ச்சியைத் தட்டியெழுப்புகின்றன

என்றால், அர்த்தமுள்ள வார்த்தைகளை—அடுக்கவேண்டிய தினுசில் அடுக்கத் தெரிந்து அடுக்கினால், ஓசையினால் மட்டும் உண்டாகிற உணர்ச்சி, அர்த்தத்தையும் அறிந்து மேலும் அதிகமாகிறது. அப்படி அடுக்கப்படுகிற வார்த்தைகளுக்கு இசை இயல்பும்—அதாவது சங்கீத இயல்பும் உண்டாகிறது. அதனால்தான் கவிதைக்குப் 'பாட்டு' அல்லது 'பாடல்' என்ற பெயர் வந்தது. வெறும் ஓசையைக் கருத்தோடு கூட்டி இசைய வைத்துக்கொடுப் பதுதான் 'இசை' என்று சொல்லப்படுகிற 'சங்கீதமும்'.

குறிப்பிட்ட உணர்ச்சியை உண்டாக்கத் தகுந்த சொற்களை, அதற்கென்ற ஒரு தனி தினுசாக, அளவோடு அடுக்குவதுதான் 'கவிதை' என்பது. அப்படிப் பதங்களை அடுக்கத் தெரிவதுதான் 'கவித்வம்' என்ற கலை. அதை அறிந்தவன் 'கவிஞன்'. 'கவிஞன்' என்பவன் பாடுகின்ற சங்கீதக்காரன் அல்ல. பாடுவது என்பது ஓசைகளை மட்டும் அடுக்கத் தெரிந்திருப்பது. அது சங்கீதம் என்கிற தனிக் கலை. கவிஞனுடைய வேலை நல்ல கருத்துக்கள் உள்ள பதங்களை அழகாகச், சங்கீதத்துக்கும் சாஹித்ய மாக உதவும்படி அடுக்கி அமைத்துக் கொடுப்பதோடு சரி. கவிஞனே சில சமயம் நன்றாகப் பாடத் தெரிந்தவனாக இருக்கலாம். அல்லது நன்றாகப் பாடத் தெரிந்த ஒருவனே கவிஞனாகக் கூட இருக்கலாம். அது வேறு விஷயம்.

'கவிஞன் என்றால் மேற்சொன்னபடி பதங்களை அடுக்கத் தெரிந்தவன்—அவ்வளவு தான். ஆனால் வார்த்தைகளை அழகாக அடுக்கிவிடத் தெரிந்ததனால் மட்டும் அவனைக் 'கவிஞன்' என்று உலகம் ஒத்துக் கொள்ளாது. வார்த்தைகளை அழகாக அடுக்கத் தெரிவது கவிதைக் கலையின் ஆரம்பம்: அவ்வளவுதான். வார்த்தை களை அடுக்கத் தெரியவேண்டும், அழகாக அடுக்கப் பட்ட வார்த்தைகள் அவசியமான அர்த்தத்தைக்

கொடுக்கவேண்டும்; குறிப்பிட்ட உணர்ச்சிகளை உண்டாக்கவேண்டும்; அந்த உணர்ச்சிகள் உயர்ந்த லக்ஷியங்களை நினைப்பூட்டவேண்டும்; அந்த நினைப்பு செயலைத் தூண்டித் துணைபுரியவேண்டும். அந்தச் செயலும் குற்றமற்றதாக இருக்கவேண்டும். இத்தனையும் சேர்ந்த சொல்லடுக்குத்தான் 'கவிதை'. அதை, அப்படிச் செய்கின்றவனைத்தான் உலகம் 'கவிஞன்' என்கிறது.

'கவி' என்பது எப்படி யிருப்பது என்பதை, உலக—மகா கவிகளுள் மிகச் சிறந்தவன் என்று அறிஞர்கள் போற்றி வணங்குகின்ற கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பன் சொல்லுகிறான் :—

**புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி**
**அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறியளாவி**
**சவியுறத் தெளிந்து, தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்**
**கவிஎனக் கிடந்தகோதா வரியினை வீரர்கண்டார்**

இந்தப் பாட்டில் கம்பன், உயர்ந்த கவிதையை ஒரு நதியோடு ஒப்பிட்டுச் சொல்லுகின்றான் :

1. உலகத்துக்கே அழகு என்று சொல்லக் கூடியதாக, எல்லா நாட்டு மக்களும் கண்டு களிக்கத் தக்கதாக இருக்கும் ஒரு நதி தீரத்தைப்போல, உலகத்திலுள்ள பல நாட்டினர்களும் படித்துப் பாராட்டிப் பொக்கிஷம்போல் போற்றத்தகுந்ததாக இருக்கும் சொல்லடுக்குத்தான் நல்ல கவி.

2. அந் நதி தீரத்தில் மனித வாழ்க்கைக்கு அவசியமான எல்லாப் பொருள்களும்—தானிய தவசங்கள், ஆடு மாடு முதலியன—விளைவதுபோல், மனிதனுடைய நல்லுணர்ச்சிக்கு வேண்டிய எல்லா நல்ல அர்த்தங்களையும்

கருத்துகளையும் காலத்துக்கேற்றபடி தரக்கூடிய சொல்லடுக்குத்தான் சிறந்த கவி.

3. மலை இடுக்குகளிலும், பாறைச் சந்துகளிலும் பாய்ந்து கடலில் கலந்துவிடாமல், சமநிலத்தில் மக்களுக்கு உபயோகமாகும்படி ஓடுகிற நதிதான் 'புண்ணிய நதி' என்பதுபோல்—மர்மமான பொருள்களும் மயக்கமான கருத்துகளும் அமைந்த அடுக்கு வார்த்தைகள்தான் அழகான கவி.

4. மனிதர்கள் இறங்கி, குளித்து, முழுகி, வெப்பம் தணிந்து, உடலையும் சுத்தம் செய்துகொள்ள உதவக்கூடிய துறைகள் உள்ளதுதான் நல்ல நதி தீரம். அதைப்போல உலக துன்பங்களால் உள்ளம் வெதும்புகிற சமயங்களில் மனத்திற்கு அமைதி கொடுத்து, அறிவைச் சுத்தப்படுத்திக் கொள்ளத் தகுந்த அமைப்புக்கள் உள்ள சொல்லடுக்குத் தான் போற்றத்தகுந்த கவி.

5. ஒரு நதியானது ஆரம்பத்திலிருந்து கடைசிவரை பயனற்ற பாலைவனத்தில் ஓடிவிடாமல் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற நானிலங்களிலும் ஓடி உபயோகப்படவேண்டும். அதுபோல ஒரு கவியானது மக்களுடைய வாழ்க்கைக்குப் பிரயோசனமல்லாத வெறும் கற்பனைகளிலோ, அல்லது சிறு சிறு இன்பங்களிலோ மட்டும் நின்றுவிடாமல், நவரசங்களையும் தழுவியதாக இருக்கவேண்டும். அதுதான் மேலான கவி.

6. வெறுங் காட்டாருகக், கலங்கலான நீரும், சேறுமாக இல்லாமல், தெளிந்த தண்ணீருடன் நிதானமாகச் சுழல்களில்லாமல் பொய்மணல்களில்லாமல் ஒழுங்காக ஓடுகிற ஆறுதான் உயர்ந்த நதி. அதைப்போல வெகு வேகமான சொற்றொடர்களில்லாமல், தெளிவான பதங்

களுடன் முன்னுக்குப்பின் முரணில்லாத ஒழுக்கத்துடன் அடுக்கப்பட்ட பாட்டுக்கள் உள்ளதுதான் சான்றோர் களின் கவி எனப்படும்.

மேலே சொல்லப்பட்ட சிறப்புகள் எவ்வளவுக்கெவ் வளவு சேரும்படி ஒருவன் கவிகளை இயற்றுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் சிறந்த 'கவிஞன்'. மேற் சொன்ன சிறப்புக்களில் எல்லாம் இல்லாவிட்டாலும் பாதிக்குப் பாதியாவது இருந்தால்தான், அதைக் 'கவி' என்று கூறலாம்.

இனி, இந்தக் கவிஞனுக்கு ஊற்றுக்கண் எது என்றால் வெறும் உணர்ச்சிதான் என்று கூறலாம். கவிஞன் என்பவன் எந்த விஷயத்தையும் மற்ற சாதாரண மக்களைக் காட்டிலும் அதிக தீவிரமாகவும் ஆழமாகவும் உணர் கிறான். அந்த உணர்ச்சியின் வேகம் சிந்தனையைக் கிளப்புகின்றது. அந்தச் சிந்தனையின் விளைவு, சொல்லாக வெளிப்படுகின்றது. அப்படி வெளிப்படுகின்ற சொற்கள் ஒருவகை அலங்காரத்துடன் அடுக்கடுக்காக அமைந்தால் அதுதான் கவிதை. எனவே உணர்ச்சிதான் கவிதைக்கு ஊற்றுக்கண். இந்த உணர்ச்சி எவ்வளவு தீவிரமாகவும் நல்லதாகவும் இருக்கிறதோ அவ்வளவு சிறந்த கவிதையும் உதிக்கும்.கவி என்பதற்குச் சரியான அடையாளம் என்ன வெனில், எந்த உணர்ச்சியோடு கவிஞன் அதை இயற் றினானோ அதே உணர்ச்சியை அதைப் படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் உண்டாக்க வேண்டும். உணர்ச்சி யில்லாமல் எவ்வளவு அழகான வார்த்தைகளை அடுக் கினாலும், அது 'கவி' ஆகாது. ஏனெனில் அது பிற ரிடத்தில் உணர்ச்சியை உண்டாக்காது. எதுகை, மோனை, கற்பனை எல்லாம் இருந்தாலும் உணர்ச்சியின்றி இயற்றப்பட்ட செய்யுள் 'கவிதை' ஆகாது.

என்னுடைய சொந்த அனுபவத்தில் இப்படிக் 'கவி' அல்லாத செய்யுட்கள் எத்தனையோ செய்து கொடுத்திருக்கிறேன். அவை வெறும் தாட்சண்யத்துக்காகப் பதங்களை—சில சமயம் வெகு பாடுபட்டு—அமைத்துக் கொடுக்கப்பட்ட 'போலிக் கவிகள்' தான்.

உதாரணமாக: மிகவும் அன்புடைய என்னுடைய நண்பர் ஒருவர். தம்முடைய நண்பன் ஒருவனுக்கு, அவனுடைய திருமணத்தில் வாசித்தளிக்க, ஒரு வாழ்த்துப்பா வேண்டும் என்று கேட்பார். அதை மறுக்க முடியாது. ஆகட்டும் என்று ஒத்துக்கொள்வேன். எனக்குப் பாட்டை எழுதச் சொல்லுகிற நண்பரை மட்டுந்தான் தெரியும். விவாகம் செய்துகொள்ளுகிற அவருடைய நண்பரையோ, விவாகம் செய்துகொள்ளப் போகிற மணப் பெண்ணையோ, அவர்களுடைய பெற்றோர்களையோ எனக்குக் கொஞ்சங்கூடத் தெரியாது. மணமகனுடைய தந்தையின் பெயர், அவருடைய ஊரின் பெயர், மணப் பெண்ணுடைய தந்தையின் பெயர், அவருடைய ஊர், தொழில், முதலியவற்றின் பெயர், விவாகம் நடக்கிற இடத்தின் விவரம், நாள், தேதி, நேரம், நட்சத்திரம், லக்னம் முதலிய சகலமும், கடைசியாக இந்த வாழ்த்துப்பாவை வாசித்து வழங்குகிறவர் உடைய பெயரும், அந்தக் 'கவி' ரூபத்தில் இடம்பெற வேண்டும். அது மட்டுமா? ஒருவர் அதை 'வெண்பா' வாக இயற்றச் சொல்வார், இன்னொருவர் 'சந்த விருத்தமாக' இருக்கவேண்டும் என்பார். வேறொருவர் இன்னொரு பாவினத்தைச் சுட்டுவார். அந்த வாழ்த்துப்பாவைச்செய்து தர ஒப்புக்கொண்டு, அத்தனை பேரையும் ஊரையும் அதில் அமைக்க, நான் படுகிறபாடு கொஞ்சமல்ல. கடைசியில் நண்பர் கோரிய பாவினத்தில் ஒரு வாழ்த்துப்பா மிக அழகான சொல்லடுக்களோடு எப்படியோ உருவாகிவிடும். பார்த்தவர்கள் மெச்சுவார்கள். ஆனால் அதில் வெறும்

ஊரும் பேரும் ஓசையுமாக இருக்குமேயன்றி உணர்ச்சி எதுவும் இராது. அதை வாசித்து வழங்கும்போது, அதுவும் அந்தக் கல்யாணச்சடங்கின் சமயத்தில் சொல்லப்பட்ட ஒரு மந்திரத்தைப்போலத்தான் இருக்குமேயல்லாது, கேட்பவர்கள் மனத்தில் எந்தவித உணர்ச்சியும் எழுப்பாது. இவ்வாறு, முக்கி முரண்டித் திக்கித்திணறி அடுக்கும் சொற்கள் கவிதை அல்ல.

இந்த வாழ்த்துப்பாவை வெகு பாடுபட்டு இயற்றிய நானே, உணர்ச்சிவேகத்தில் பாடியுள்ள பலபாட்டுக்களும் எவ்வளவு விரைவாகவும் எளிதாகவும் தாமே என்னிடம் ஓடிவந்தன என்பதை அறிவேன்.

காந்தியடிகளுடைய அறப் போராகிய சுதந்திர இயக்கம் ஆரம்பமான நாள் தொட்டு அதன் பிரசாரத்துக்காக நான் இயற்றிய கவிகள் அநேகமாக எல்லாந் தாமாகவே என் உள்ளத்தில் உதித்துத் துள்ளிக் குதித்து ஓடிவந்த பாட்டுக்கள்,

**'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்'**

என்ற பாட்டு ஆறு கண்ணிகள் அடங்கியது. இந்த ஆறு கண்ணிகளையும் ஐந்து நிமிஷத்துக்குங் குறைவான நேரத்தில் எண்ணி, எழுதி முடித்துவிட்டேன். ஏன்? அந்த உணர்ச்சி அவ்வளவு ஆழமானதாகவும் வேகமானதாகயவும் இருந்தது. அந்த உணர்ச்சி வேகந்தானே ஒரு கவிதை உந்திக் கொண்டு வந்தது!

இந்த உணர்ச்சி வேகம் கவிதையை உண்டாக்குவது மட்டுமன்றி, சில சமயங்களில் தீர்க்கதரிசனமுந் தருகின்றது. இந்தக் கத்தியின்றி என்ற பாட்டு காந்தியடிகளின் உப்பு சத்யாக்ரஹ 'தண்டி—யாத்திரை' என்ற போருக்கு

வழிநடைப் பாட்டாக எழுதப்பட்டது. ஆனல் காந்தி, உப்பு சத்யாக்ரஹம் ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னு லேயே இந்தப் பாட்டு அச்சேறிவிட்டது. இது அச்சான சமயத்தில் 'காந்தி உப்புச் சட்டத்தை உடைக்கத் தண்டிக் குப் புறப்படப்போகிறார்' என்பது யாருக்குந் தெரியாது. அவர் ஒரு போர் தொடுக்கப் போகிறார் என்பது மட்டும் அவர் சொல்லாலும், 'எங் இந்தியா'வில் அவர் எழுதிவந்த எழுத்தாலும் ஊகிக்கப்பட்டது. அந்த 'யங் இந்தியா'வி லிருந்த காந்தியவர்கள் கையெழுத்துடன் எழுதப்பட்ட கடைசிக் கட்டுரையைப் படித்துவிட்டுப் படுத்தேன். காந்தி நடத்தப்போவதாக எழுதப்பட்டிருந்த அறப்போரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு தூக்கம் வராமல் படுத்திருந் தேன். உணர்ச்சி அதிகப்பட்டு வேகமுங் கொண்டது. உடனே 'கத்தியின்றி ரத்தமின்றி ஒரு யுத்தமா? என்ற எண்ணம் உடனே 'கவி' உருக்கொண்டது. உடனே எழுந்தேன். (மண்ணெண்ணெய்) விளக்கை ஏற்றினேன் (அப்போது மின்சாரமில்லை) பாட்டை எழுதினேன், பத்திரி கைக்கு அனுப்பினேன். அச்சாகிவிட்டது. அதற்குப் பிறகு ஒருமாதம் கழித்துத் தண்டியாத்திரை ஆரம்பமாயிற்று. அதற்கும் பலநாள் கழித்து ராஜாஜி திருச்சியிலிருந்து வேதா ரண்யத்துக்கு உப்பெடுக்கப் புறப்பட்டார். அவர் புறப் படும்போது, ஏற்கனவே தொண்டர்கள் பாடஞ்செய்திருந்த அந்தப் பாட்டைப் பாடினர்கள். முதன் முதல் அன்றுதான் அதைக்கேட்ட ராஜாஜியவர்கள், மிகவும் மகிழ்ச்சியடைந்து தஞ்சாவூர் போய், அங்கிருந்து என்னைப் பாராட்டி எழுதி னர். உணர்ச்சி வேகத்தில் உதிப்பதுதான் நல்ல கவி.

நான் தீர்க்கதரிசி அல்ல. இருந்தாலும் நல்ல உணர்ச்சி வேகத்தில் தானுக உதிக்கிற கவியில் என்னை அறியாமலுங் கூடத் தீர்க்கதரிசனம் போன்ற கருத்துகள் அமைகின்றன. அதற்கு இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். 1913-ம்

வருஷத்தில் ஒரு விளம்பரம் வந்தது. அது என்னவெனில் நல்ல தேசாபிமானத்தை ஊட்டக்கூடியதாக எளிய நடையில் பாட்டுக்கள் எழுதி அனுப்பினால், அதில் சிறந்த முதன் மூன்று பாட்டுக்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது என்ற மூன்று பரிசுகள் (10. 6. 4) பவுன் எடையில் தங்க மெடல்கள் தரப்படும் என்பது. அதற்கு நானும் போட்டியிட்டேன், புதுச்சேரியில் அப்போதிருந்த ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரும் அதற்குப் பாட்டனுப்பினார். எங்கள் பாட்டுக்கள் ரொம்ப வேகமாக இருந்தனவென்று எங்கள் இருவருக்கும் பரிசு இல்லை. ஏனென்றால் விளம்பரம் செய்தவர் மிதவாதி—அது கிடக்க. என்னுடைய பாடல் 100 கும்மிகளடங்கியது. முதல் நான்கு பாட்டுக்களில் நான் அரவிந்த கோஷையும், பால கங்காதரதிலகரையும், கோகலேயையும், காந்தியையும் (1913-ல் என்பதை மறந்துவிடக் கூடாது) பிரமனுக்கும், சிவபிரானுக்கும், கிருஷ்ணனுக்கும் கந்தனுக்கும் முறையே ஒப்பிட்டிருந்தேன். அந்த 1913ல் காந்தி தென்னாப்பிரிக்காவில் வரிகொடா சத்யாக்ரஹம் செய்து கொண்டிருந்தார். தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தியைப் பற்றி வருகிற சேதிகளைப் பார்த்து அப்போதே காந்தி ஞானபலமும் ஆத்மசக்தியும் உள்ளவர் என்ற மதிப்பு என் மனதில் உண்டாயிருந்தது. அதனால் காந்தியைக் கந்தனுக்குச் சமானமாக நான் பாடிய பாட்டில், பிரமதேவனுக்கும் ஞானோபதேசம் செய்தவன் கந்தன் என்றும்—காந்தியை வெகு சாந்தன் என்றும் 1913–ல் காந்தியை இந்தியாவில் பெரும்பாலான மக்கள் அறிந்திராத அந்தக் காலத்திலேயே பாடினேன். அந்தப் பாட்டைக் கேளுங்கள்:

**கந்தமலர் ஒரு மேலவர்க்கும் ஞானக்**
**கைப்பலம் காட்டிய கந்தனடி**
**கந்தம் மணக்கின்ற ஜோதியடி புகழ்**
**காந்தியடி வெகு சாந்தனடி.**

இதில், 1913–ல் பாடப்பட்ட பாட்டில் என்னையறியாமலேயே ஒரு தீர்க்கதரிசனம் இசைந்திருக்கிறது. அப்படிப் பாடக்கூடிய உணர்ச்சி வேகம் சுத்தமாக உள்ளதுதான் 'கவி' ஆகும்.

# காந்தி நெறி-சத்திய நோக்கு

உலக மக்களெல்லாம் பின்பற்றத் தக்கதாக மகாத்மா காந்தியடிகள் வாழ்ந்துகாட்டிய சரித்திரத்தில் சத்திய—நோக்கு மிகவும் முக்கியமானது.

காந்திமகான் நடந்துகாட்டிய வாழ்க்கையில் அவர் கடைப்பிடித்த கொள்கைகள் இரண்டு. ஒன்று அஹிம்சை; மற்ருென்று சத்தியம். மனித சமூகத்தின் சமாதான வாழ்விற்கும், நாகரிகத்திற்கும் இந்த அஹிம்சையும் சத்தியமும் இன்றியமையாத சாதனங்கள் தர்மம் என்றும்—அதர்மம் என்றும், புண்ணியம் என்றும்—பாபம் என்றும், அறம் என்றும்—மறம் என்றும், நியாயம் என்றும், அநியாயம் என்றும், சொல்லப்படுகின்ற எல்லாச் செயல்களும் இந்த அஹிம்சை, சத்தியம் என்ற இரண்டையும் போற்றுவதையும், புறக்கணிப்பதையும் பொறுத்தனவே ஆகும்.

சரித்திரக்காரர்களால் உணர முடியாத காலத்திலிருந்தே, இந்திய நாடு இந்த இரண்டு கொள்கைகளையும் இரு கண்களேபோற் கருதிக் காத்து வந்திருக்கிறது. அதனுலேயே இந்திய நாகரிகமும் அதன் மெய்ஞ்ஞானமும் சரித்திரத்துக்கும் எட்டாதனவாக இருந்து வருகின்றன. சரித்திரம் அறிந்த காலமுதல், இந்த உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் இந்தியா ஞான தீபமாக ஒளிபரப்பி, வழிகாட்டி வந்திருக்கிறது. அஹிம்சை, சத்தியம் என்ற இரண்டையுந் தழுவிய நூல்களையே இந்திய மக்கள் தங்களின் இலக்கியப் பொக்கிஷங்களாகப்

பாதுகாத்துப், பாராட்டிப், படித்துப், பயின்று வந்திருக்கிறார்கள்.

சிறப்பாகத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இந்த அஹிம்சை—சத்தியம் என்ற இரண்டையுந்தான் தலை சிறந்த தர்மங்களாகப் போதிக்கின்றன. உலக மகா அற நூல்களுள் இணையற்றதாக எல்லா அறிஞர்களும் ஒருங்கே புகழ்கின்ற "திருக்குறள்",

**"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"**

என்று கூறுகிறது. இக் குறளின் அர்த்தம் என்னவென்றால், மிகச் சிறந்த அறம் கொல்லாமை, (அஹிம்சை), அதற்கு அடுத்தபடியாக நல்லது பொய்யாமை (அதாவது சத்தியம்)...... என்பதாகும்.

கொல்லாமை — பொய்யாமை என்ற இரண்டு கொள்கைகளையுந் தமிழர்கள் தங்கள் குலதர்மங்களாகப் போற்றி வந்ததனாலேயே தமிழ்நாடு இன்றளவும் தெய்வ நம்பிக்கையிலும், தான தர்மங்களிலும், கலை நிறைந்த நாகரிகத்திலும், அமைதியிலும், மிகச் சிறந்த நாடாக விளங்குகின்றது.

மனித வர்க்கத்தின் நல்வாழ்விற்கு அத்யாவசியமான இந்த இரண்டு கொள்கைகளும் குறைந்து போனதனால் அன்றோ, இப்போது உலகம் முழுவதிலும் சமாதானமும் சந்தோஷவாழ்வும் இல்லாமல், மக்கள் தவிக்கின்றார்கள்!

நம்முடைய நாட்டின் சுதர்மங்களாகிய இக் கொல்லாமை, பொய்யாமை ஆகிய இரண்டையும் மீண்டும் கடைப்பிடித்து, அதன் மூலமாக உலக மக்களுக்கெல்லாம் நல்வழிகாட்ட வென்றே, மகாத்மா காந்தியடிகள் நம்மிடையே தோன்றினார்.

நெடுநாளாக வெறும் புத்தகப் பாடமாகவும், புராணப் பொழுது போக்காகவும் இருந்துவிட்ட, அஹிம்சை — சத்தியம் எனும் இரண்டையும் மகாத்மா காந்தியடிகள் உலகங் கண்டறியாத மிகவும் புதுமையான முறையில் விளக்கிக்காட்டி, மனிதவாழ்வின் எல்லாத் துறைகளிலும் அவற்றைப் புகுத்தி, எழுத்து வாசனை அறியாத ஏழை மக்களுங்கூட— வெகு எளிதாகவும் சந்தோஷத்துடனும் அவற்றை மேற்கொண்டு நடக்கும் வண்ணம் வழிகாட்டினர். அதனல் உலகத்திலேயே மிகவும் புதுமை என்று சொல்லக்கூடிய வழியில் நாம் சுதந்திரம் அடைந்தோம்.

மகாத்மா காந்தியடிகளின் அஹிம்சா — சத்திய வாழ்க்கையில், அஹிம்சா தர்மத்தை ஒருபுறம் விட்டு, 'சத்திய — நோக்கை முதலில் ஆராய்வோம்: நாடகமாகவும் கதையாகவும் நாம் நெடுங்காலமாகப் பார்த்தும், படித்தும் வருகிற ஹரிச்சந்திரனுக்குப் பின், சத்தியத்தையே நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்ட வாழ்க்கை மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை ஒன்றுதான். ஹரிச்சந்திரன் இருந்தானே இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனல் அக் கதை ஏற்பட்டதாக எண்ணக்கூடிய நாளிலிருந்து எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் ஹரிச்சந்திரன்—சந்திரமதி — லோகதாசன் கதையை ஊர் ஊராகக், கிராமங் கிராமமாகத் தெருத் தெருவாக நடித்தும், படித்தும், பாடியும் பாராட்டி வந்திருப்பதைப் பார்க்கும் பொழுது, தமிழர்கள் எவ்வளவு சத்தியஆர்வம் உள்ளவர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

சத்தியத்தை, உலக - வாழ்க்கைக்குக்குரிய உயர்ந்த லக்ஷியமாக மட்டுங் கொள்ளாமல், அதையே தன்னுடைய ஆன்ம ஞானமாகவும், உலக வாழ்விற்குப் பின்னல் பெறக் கூடிய கதிமோட்சமாகவும், அந்தக் கதிமோட்சத்தைக்

காட்டிலுங்கூட உயர்ந்த பொருளாகவும் ஹரிச்சந்திரன் கருதினுன்.

ஹரிச்சந்திரன் கதையைத் தமிழில் புராணமாகப் பாடிய புலவர் சொல்லுகின்ருர் :—

**"பதி இழந்தனம் பாலனே இழந்தனம் படைத்த**
**நிதி இழந்தனம் இனிநமக்கு உளதென நினேக்கும்**
**கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலம்" என்ருன்**

என்று. இந்தப் பாடல் ஹரிச்சந்திரன் வாக்காக பாடப் பட்டுள்ளது.

எந்தச் சந்தர்ப்பத்திலென்ருல்; சந்திரமதி காசிராஜனுடைய குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் குற்றஞ் சாட்டப்படுகிருள். அப் பொய்க் குற்றச்சாட்டு ருசுவாகி விட்டதாகத்தீர்ப்புஞ் செய்யப்பட்டு, அவள் தலேயை வெட்டி விடவேண்டுமென்றும் உத்தரவாகின்றது. மயானத்தில் பிணங்களேச் சுடுகிற தோட்டியாகக் காவல் வேலே செய்கிற ஹரிச்சந்திரனே சந்திரமதியை வெட்ட வேண்டுமென்றும் உத்தரவாகிறது. தன் மனேவிக்கு நேர்ந்த கதியையும், அவளேத் தானே வெட்ட வேண்டிவந்த விதியையுங் கண்ட ஹரிச்சந்திரன், தன்னுடைய சத்தியவிரதத்தைக் காக்க அதையும் செய்யத் துணிந்து, வாளே ஓங்குகின்ருன். அந்தச் சமயத்தில், ஹரிச்சந்திரனேப் பொய்யனுக்கு வேனென்ற சபதம் பூண்டு அவ்வளவு துன்பங் களேயுஞ் செய்த விஸ்வாமித்ரன் அவனேப் பார்த்து "இப்போதாவது ஒரு பொய் சொல்லிவிடு. சந்திரமதியை வெட்டுவதை விலக்கி உன்னேயும் விடுவித்து விடுகிறேன்" என்ருன், அதற்கு அரிச்சந்திரன் சொல்லுகிருன். "விஸ்வாமித்திர முனிவரே! பொய் சொல்லக்கூடாது என்பதற்காகத்தான், நானும் என் மனேவியும் இவ்வளவு துன்பங்

களையும் சகித்துக்கொண்டிருக்கிறோம். ராஜ்யத்தை இழந்தோம்; ஒரே ஒரு மகனையும் இழந்தோம்; மற்றும் எல்லாச் செல்வங்களையும் இழந்தோம்; இனி நாங்கள் இழந்துவிடக்கூடிய எந்தப் பொருளும் எங்களிடம் இல்லை. இவ்வுலகத்தில் '**எங்களுடையது**' என்று சொல்ல ஒரே பொருளும் இல்லையென்றாலும் இந்த உலகை விட்டபின் எங்களுக்குக் கிடைக்கும் என்று நினைக்கிற ஒரே பொருள்தான் மிச்சமிருக்கிறது. அதுவே நாங்கள் நம்புகின்ற **நல்லகதி**. அந்த 'நல்லகதி' உண்மையில் உண்டோ இல்லையோ ? ஆனால் அது உண்டு என்பது எங்கள் கருத்து. அதை நம்பியே இவ்வளவு துன்பங்களையும் சகித்துவந்தோம், '**நல்லகதி**'யையும் இழந்துவிடுவதானாலும் நாங்கள் பொய் சொல்லமாட்டோம்'' என்று. மறுபடியும் அந்தப் பாட்டைக் கேளுங்கள் :

**பதி இழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த**
**நிதி இழந்தனம்; இனி நமக்கு உளதென நினைக்கும்**
**கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலம்—என்றான்**

இதனால் ஹரிச்சந்திரன், மோட்ச சாம்ராஜ்யத்தைக் காட்டிலும்உயர்வாகச் சத்தியத்தைப் போற்றுகின்றான் என்பதை நாம் பார்க்கிறோம்.

மகாத்மா காந்தியடிகளுந் தம்முடைய சத்திய நெறியைக் காக்கச் செய்துள்ள தியாகங்களும், சகித்துள்ள துன்பங்களும் ஹரிச்சந்திரன் அனுபவத்திற்குச் சமானமாகச் சொல்லக் கூடியவையே. மேலும், காந்தியடிகளின் சத்திய நோக்கினை ஹரிச்சந்திரன் கதையைக் காட்டிலும் உயர்ந்ததாகச் சொல்லலாம். எப்படியெனில் ஹரிச்சந்திரன், சத்தியத்தைக் காப்பாற்றினால் பின்னர் நல்லகதி கிடைக்கும் என்ற நம்பிக்கையினால் சத்தியத்தைக் காத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. அது சரியான எண்ணங்

தான். மக்களுக்கு ஒரு லக்ஷியத்தைக்காட்ட அது சிறந்த வழிதான். ஆனுல், மகாத்மா காந்தியடிகள், சத்தியத்தை நல்லகதி அடைய ஒரு மார்க்கம் என்ருவது, தெய்வ தரிசனம்பெற உபாயம் என்ருவது மட்டும் எண்ணுமல் சத்தியத்தையே தெய்வமாகவும் சத்தியநோக்குடைய வாழ்வையே மோட்ச வீடாகவும் கருதி வாழ்ந்தார், என்பது அவருடைய சொல்லாலும், எழுத்தாலும், செய லாலும் விளங்குகின்றது.

அதுமட்டுமல்ல. ஹரிச்சந்திரன் கதை முழுதும் அவன் வாயால் ஒரு பொய்யேனும் சொல்லும்படி செய்ய விஸ்வாமித்ரன் முதலானவர்களாலும் முடியவில்லை என்ப தைத்தான் காட்டுகின்றது. ஆனுல், மகாத்மா காந்தியின் சத்திய–நோக்கு, வாயால்மட்டுமல்ல, மனத்தாலும் செய லாலுங்கூடப் பொய்யாமையைக் குறியாகக் கொண்டது. அது எப்படி என்பதைக் கவனிப்போம் :

'சத்திய–நோக்கு' என்ருல்—'சத்தியத்திலே நோக்கம்'' அல்லது 'சத்தியத்திலே குறி', அல்லது 'சத்தியத்திலே திருஷ்டி' என்பது பொருளாகும். சத்தியத்தில் நோக்கம் என்பதை இரண்டுவிதமாகக் கொள்ளலாம். ஒன்று; ஒரு வன் அவன் செய்கிற காரியங்கள் எல்லாம் சத்தியத்துக் குப் பொருத்தமானவையாக இருக்கின்றனவா என்று தன் னைத்தானே சோதித்துக் கொள்வதில் கண்ணுங் கருத்து மாக இருந்து கொண்டே இருப்பது, இன்னென்று; தன்னை விட்டுவெளியிலே தான்பார்க்கிற, அல்லதுகேள்விப்படுகிற அல்லது படிக்கிற, பலவிஷயங்களில் ''எது சத்தியமானது'' 'எது சத்தியமல்லாதது' என்று ஆராய்வதில் நோக்கமாக இருப்பது. இந்த இரண்டும் 'சத்திய–நோக்கு' ஆகும். ஒன்று, ஒழுக்கத்தை சுத்தப்படுத்த உதவுகின்றது. மற்ருென்று, மெய்யுணர்வை உண்டாக்க உதவுகின்றது.

சத்திய–நோக்கு என்பது இதுவானுல்; இனி, சத்தியம் என்பது என்ன? என்பதை கவனிப்போம். சத்தியம் என்ற பதத்திற்கு இங்கிலீஷில் 'ட்ரூத்' என்றும், ஹிந்துஸ்தானியில் 'சஹி' அல்லது 'ஹக்' என்றும், ஒரு பெயர்ச் சொல்லால் பொருள் சொல்லிவிடலாம். ஆனுல் தமிழில் சத்தியம் என்பதை அதற்கு நேரான ஒரு பெயர்ச் சொல்லால் சொல்லிவிட முடியாது. ஏன் என்ருல், தமிழில் இந்த சத்திய சுத்தம், மனம்–வாக்கு–காயம் என்ற மூன்றிலும் இருக்கவேண்டுமென்று, அவற்றிற்கு தனித்தனியே பெயரிட்டிருக்கிருர்கள். உள்ளத்தால் சத்தியத்தையே எண்ணுவதற்கு 'உண்மை' என்றும், வாயால் சத்தியமே பேசுவதற்கு 'வாய்மை' என்றும், மெய்யினுல்–(அதாவது உடலால்) செய்யும் செயல்கள் சத்தியத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பதற்கு 'மெய்ம்மை' என்றும் தனித்தனியே பெயரிட்டிருக்கிருர்கள்.

மனத்தாலும், வாக்காலும், செயலாலும் பொய்யாதிருப்பதே சத்தியம் என்பது தமிழ் மரபு. பொய்யாதிருப்பது என்ருல் என்ன? எதனைப் பொய்யாது ஒழுகவேண்டும்? அதை எப்படி நிர்ணயிப்பது? என்ற கேள்விகள் உதிக்கின்றன. அந்தக் கேள்விகளுக்குத் திருவள்ளுவர் வெகு அருமையான பதிலை வெகு சுருக்கமாகவுந் தெளிவாகவுஞ் சொல்லுகிருர்.

**தன்னெஞ் சறிவது பொய்யற்க, பொய்த்தபின்**
**தன்னெஞ் சேதன்னைச் சுடும்**

ஒருவனுடைய மனச்சாட்சி எதைச் சரியென்று அறிவிக்கிறதோ அது பொய்த்துப் போகாமல் பார்த்துக்கொள்வதே பொய்யாமை, மேலும் பொய்த்தபின் 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்பதில், ஒருதரம் தவறிவிட்டாலும் மீண்டும்

பொய்யாத சத்திய நெறி எது என்பதை நிர்ணயிக்க வழி சொல்லுகிருர். அதாவது, எந்த ஒரு விஷயத்தை நம் மனச் சாட்சி சரி என்று சொல்லியும், நாம் அதைப் பொய்யாகப் போகும்படி விட்டுவிட்டுப் பின் 'ஐயோ இப்படிச் செய்துவிட் டோமே' என்று வருந்துகிருேமோ அந்த விஷயந்தான் சத்தி யத்தைச் சார்ந்தது. எனவே மனச்சாட்சி சரி என்பதே சத்தியம் எனலாம்.

இதைத்தான் மகாத்மா காந்தியடிகள் தம்முடைய 'உள்ளத்தின் ஒளி' என்றும், 'இதயத்தின் ஒலி' என்றும் அடிக்கடி எழுதியும் சொல்லியும் வந்திருக்கிருர்—அதை அவர் ஆங்கிலத்தில் **'The inner light'** என்றும் **'The inner voice'** என்றும் பலதடவைகளில் கூறியுள்ளார்.

இந்த உள்ளொளியைத்தான் திருவள்ளுவர் 'உள்ளத் தின் வாக்கு—வெளிச்சம் .

**'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**—என்கிருர்.

காந்தி மகான், தம்முடைய வாழ்க்கை மு ழுவதிலும் செய்த— சொன்ன—எண்ணிய எல்லா விஷயங்களையும் இந்தப் பொய்யா விளக்காகிய உள்ளொளியின் வெளிச்சத் தைக் கொண்டு சோதித்தே செய்திருக்கிருர். அவர் தம் முடைய சுய சரித்திரத்தைச் 'சத்திய சோதனை' என்றதும், அவர் இந்த நாட்டின் விடுதலைக்காக நடத்திய அறப்போரை 'சத்யாக்ரஹம்' என்று சொன்னதும் அவருடைய **'சத்திய நோக்கிற்கு'** அழியாத சாட்சியங்களாகும்.

உலகத்தின் மிக உயர்ந்த அறிவாளிகள் என்று சொல் லப்படுகிற எல்லாரும் சத்தியத்தைக் காக்கவேண்டும் என்றுதான் எழுதியும் பேசியும் இருக்கிருர்கள். என்ருலும், உலகமறிந்த சரித்திர புருஷர் மகாத்மா காந்தியைப்போல்

மனம்–வாக்கு–காயம் மூன்றினுலும் பரிசுத்தமாகச் சத்தி யத்தைக் காத்தவர் எவரும் இல்லை எனலாம்.

பெரும்பாலும் மக்கள் மனச்சாட்சியையோ சத்தியத் தையோ மதிப்பதில்லை. அதனுல்தான் உலகில் இவ்வளவு அலங்கோலங்கள். சத்தியத்தை நாடுகின்ற வெகு சில மனி தர்களுங்கூட (இப்படித்) திரிகரண சுத்தியாகச் சத்தியத் தைக் கடைப்பிடிப்பதில்லை. பேச்சளவில் சத்தியத்தை விரும்புகின்ற ஒருவன் உள்ளத்தில் சத்தியத்தைக் கருதுவ தில்லை. செயலளவில் சத்யாக்ரஹம் செய்தவர்கள் மனத் தாலும், சொல்லாலும் பொய்யர்களாக இருக்கிருர்கள். காந்திதான் உள்ளத்தில் பொய்யாது, ஒழுக்கமும் காட்டிய உத்தமன்.

**‘உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்’**............

என்றபடி பூதஉடல் மறைந்தும், இன்றும் உலகமக்கள் எல்லாருடைய உள்ளத்திலும் உயர்ந்த ஸ்தானம் பெற்று விளங்குகின்ற காந்தியின் சிறப்பு அவருடைய சத்திய நெறியினுல்தான் ஏற்பட்டது. அந்தச் சத்திய நெறியைப் பின்பற்றினுல்தான் உலகத்தில் இப்போதுள்ள தீமைகள் நீங்கும்.

# நமது குடியரசு

**கா**ந்தி மகானுடைய அருந்தவத்தால் நம்முடைய அடிமைத்தனம் அகன்றது. அன்னிய ஆட்சியின் அந்தகாரம் முடிந்தது. நம்முடைய சுதந்திரம் விடிந்தது. சுதந்திர சூரியன் உதித்த சிறிது காலத்திற்குள் குடியரசு அரும்பியது. இப்போது அக்குடியரசு மலர்ந்தும்விட்டது.

இன்றைக்கு அந்தக் குடியரசு மலரின் நறுமணம் நம்முடைய தாய்த் திருநாட்டின் மூலைமுடுக்கெலாம் கமழ்கின்றது. அதன் பரிமளத்தில் இந்திய மக்கள் பரவசம் அடைந்து மகிழ்கின்றார்கள். உலக மக்களெல்லாம் அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் குடியரசு மலர் மகாத்மா காந்தி உண்மையாகவே தம்முடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் மனமாரத்தத்தஞ்செய்து நமக்காக உற்பத்தி செய்துவிட்டுப் போன ஒப்பற்ற சம்பத்துஆகும். காந்தியடிகளின் திருமேனி இந்த மலரிலே மறைந்து நின்று மணம் வீசுகின்றது. இந்த மலர் சாந்த ஒளி வீசுகின்றது; சத்தியமொழி பேசுகின்றது; சன்மார்க்கம் நிரப்புகின்றது; சமதர்மம் பரப்புகின்றது.

இந்தத் தெய்வத் திருமலர் வாடாதிருக்கக் காந்திமகான் நமக்கு வழியுஞ்சொல்லிப் போயிருக்கிறார். அவ் வழிகளைப் பின்பற்றினால் இம்மலர் என்றென்றும் வாடாது உலகுக்கெல்லாம் வாசனை வழங்கிக்கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பொறுப்புக்களை உணர்ந்து, காந்தியடிகளின் அறநெறிகளைப் பாதுகாக்குந் தர்மகர்த்தாக்களாக நடந்து கொள்ள ஆண்டவன் அருள்புரிய வேண்டும்.

# ராமராஜ்யம்

காந்தியடிகள் இந் நாட்டில் ராமராஜ்ப அரசியலை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிவந்தார். அதற்காகவே நம்மைப் பக்குவப் படுத்திவந்தார். இப்போது நம் குடியரசு ஆட்சிக்குச் சட்டமாகச் செய்யப்பட்டிருக்கிற திட்டம் அந்த ராமராஜ்யத்தை ஏற்படுத்த மிகவும் அனுகூலமான விதத்தில் அமைக்கப்பட் டிருக்கிறது. உலகத்தில் இதுவரையிலும் தோன்றியுள்ள எந்த அரசாட்சியிலும் எழுதப்படாத விதத்தில், இந்தக் குடியரசுச் சட்டம் எழுதப்பட்டிருக்கிறது. அரசியல் நுணுக்கங்களிலும், அவற்றிற்கான அங்கங்களின் விஸ்தாரங்களிலும் இன்றைக்கு அமுலாகி வருகிற இந்தியக் குடியரசுத்திட்டத்துக்கு இணையான சட்டம் எந்த நாட்டிலும் இல்லை என்பது நிபுணர்களின் நிர்ணயம்.

காந்திமகானுடன் நெடுங்காலம் பழகி, அவருடைய அபூர்வ அரசியல் ஞானத்தால் பண்படுத்தப்பட்டவர்களாகிக், காலமெல்லாம் காந்திமகானையே போற்றிக் காரியங்களைச் செய்துவரும் தலைவர்களுடைய கண்காணிப்பில், காந்தீய மனப்பான்மையே அதிகமாக உள்ள அங்கத்தினர்கள் கூடி, ஆலோசித்துத், திருப்பித் திருப்பி ஆராய்ந்து, உருவாக்கிய சட்டம் நம்முடைய குடியரசுச் சட்டம். இதைச் சரியான வழியில் கொண்டு செலுத்தினால் காந்திமகான் கனவுகண்ட ராமராஜ்யத்தை நாம் அனுபவிக்கலாம். ராமராஜ்யம் என்றால் என்னவென்பதைக் கம்பன் பின்வருமாறு விளக்குகின்றான் :—

**வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினன்**
**உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்**
**செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்**
**உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்.**

மிகச் சிறந்த வயிர ஆபரணங்களை அணியும் செல்வச் சிறப்புக்களும், ஆண் சிங்கத்தைப் போன்ற போர்த் திறமையும் உள்ள அந்த நாட்டு மன்னன் உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும், தன்னுடைய உயிரைப்போலவே பாதுகாத்தான். அதனால், அந்த நாட்டிலுள்ள சென்று வாழக்கூடிய ஊர்வன—நடப்பன—பறப்பன — நீந்துவன வாகிய உயிர்களுக்கும், இடம்விட்டுப் பெயராமல் நின்று வாழக்கூடிய செடி, கொடி, மரம் முதலிய உயிர்களுக்கும், அந்த அரசனுடைய உடலே உறைவிடமாக இருந்தது—என்பது பாட்டின் பொருள். அம் மன்னனின் அரசாட்சி மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும் செடி மரம் முதலான ஓரறிவு மட்டுமுள்ள அசேதன உயிர்களுக் குங்கூட ஜீவகாருண்ய உணர்ச்சி குறையாமல் நடத்தப் பட்டது. ஜீவகாருண்யத்தை மதிக்கின்ற ஆட்சியே சிறந்த அரசாட்சி. அந்த ஜீவகாருண்யத்தை மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் செடி கொடி மரங்களுக்குங்கூட சமதர்மமாக அனுஷ்டிக்கவேண்டும் என்பதுதான் ராம ராஜ்யத்தின் முதற் சட்டம். ஜீவகாருண்ய சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட அரசாட்சியில் மற்றச் சட்ட திட்டங்கள் அதற்கேற்றவாறு தாமே அமையும். மேலும்—

**எய்யெனா எழுபகை எங்கும் இன்மையால்**
**மொய்பொரு தினவுடை முழவுத் தோளினன்**
**வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்**
**செய்யெனக் காத்து இனிது அரசு செய்கின்றான்.**

அந்த அரசாட்சியை வீழ்த்தவேண்டுமென்று கிளம்பிப் படையெடுக்க விரும்பும் பகைவர்கள் எங்கும் இல்லாததனால், அந்த மன்னனுடைய தோளாற்றலும் படை பலமும் தோள் தினவுகொள்ளும்படி வேலையில்லாமல் இருந்தன. அதனால் அவனுடைய சக்திகளைச் சண்டை களில் செலவிடவேண்டிய அவசியமே இல்லாமல் அவன்,

கவனம் முழுவதையும் அவனுடைய குடிஜனங்களின் க்ஷேமாபிவிருத்தியிலேயே செலுத்தி, மிகவும் ஏழையான ஒரு குடியானவன் தனக்குள்ள ஒரே ஒரு செய் நிலத்தை எப்படிச் செய்நேர்த்தி பண்ணிக் களைபிடுங்கிக் கண்ணுங் கருத்துமாகப் பயிர்களைக் காப்பாற்றுவானோ அப்படிக் காத்து, மிகநல்ல அரசாட்சி நடத்தினான்—என்பது பாட்டின் பொருள்.

பகைவர்கள் இல்லாத அரசாட்சியே மிகச் சிறந்த ராஜ்யம். படையெடுத்துவரக்கூடிய பகைவர்கள் இல்லையென்றாலும், அப்படி யாரேனும் படையெடுக்க நேர்ந்து விட்டால், அவர்களை விரட்டியடித்து நாட்டைக் காத்துக் கொள்வதற்காகச் சேனாபலம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். வெளிநாட்டோடு சண்டை யில்லாததால், இந்தச் சேனாபலம் வேலையில்லாமல் தினவெடுத்துத்தான் இருக்கும். அந்தத் தினவு நீங்க அதன் சக்தியை உள்நாட்டு நன்மைகளுக்கான வேறுபல துறைகளில் செலவிட்டு, உட்பகையான களைகள் தோன்றினால் அவற்றையுங் களைந்து அரசாட்சியைக் காத்துவரும்.

மேலே சொல்லப்பட்ட இரண்டு பாட்டுக்களில் முதற் பாட்டு நல்ல அரசாட்சிக்கு முதற்சட்டம் ஜீவகாருண்யம் என்றும், அந்த ஜீவகாருண்யத்தை அந்த அரசாட்சிக்கு உட்பட்ட எல்லா ஜீவன்களிடத்திலும் சரிசமமாக அனுஷ்டிக்கவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றது.

இரண்டாவது பாட்டு, அயல்நாடுகளுடன் பகைமை இல்லாத அரசாங்கமே நல்ல ராஜ்யம் என்றும், வெளி நாட்டாருடன் சண்டை இல்லாவிட்டாலும் தற்காப்புக்காக படைபலம் இருந்துகொண்டே இருக்கும் என்றும், யுத்த முயற்சிகள் இல்லாததால் அந்தச்சேனாபலத்தின் சக்திகளை உள்நாட்டு நலங்களை விருத்திசெய்ய உபயோகப்படுத்தி,

நாட்டில் உட்பகை தோன்றவிடாமல் கண்ணுங் கருத்து மாகக் காக்கவேண்டும் என்றுங் கற்பிக்கிறது.

அயல்நாடுகளுடன் பகைமை நேராமல் பார்த்துக் கொள்வது—பகை நேர்ந்துவிட்டால் பாதுகாப்புக்கு வேண்டிய படைபலத்தோடு இருப்பது — வெளிநாடுக ளுடன் சண்டையில்லாததால் அந்தப் படைபலத்தின் சக்திகளை உள்நாட்டு விஷயங்களில் செலவிட்டால், ஓர் ஏழைக் குடியானவன் தன் சிறு வயலை வெகு கவனமாக அடிக்கடி சுற்றிச் சுற்றிப் பார்த்துப் பயிரைக் காப்பதைப் போலக் குடிஜனங்களைக் காக்க முடியும் —ஆகிய நல்ல நோக்கங்களுடன் நடத்தப்பட்ட அரசாட்சிதான், ராமன் பிறந்த திருநாட்டில் இருந்ததாகக் கம்பராமாயணம் காட்டு கின்றது. இதுதான் காந்திமகான் கனவுகண்ட ராமராஜ் யம்: இந்தக் கனவை நனவாக்கவேண்டும் என்றுதான் அவர் வாழ்நாளெல்லாம் நம்மைப் பக்குவப்படுத்தி வந்தார்.

காந்தியடிகளின் பிரதம சிஷ்யர்களான ஜவஹர்லால் நேரு, ஆசாத் முதலியவர்கள் மத்திய அரசாங்கத்தை இப்போது நடத்திவரும் முறையிலும், பேசுகின்ற பேச்சுக் களிலும், செய்கின்ற முயற்சிகளிலும் மேலே சொன்ன கம்பன் பாட்டுக்களிலுள்ள கருத்துக்களே மலிந்திருப்ப தைக் காணலாம்.

அரசியல் நிர்ணய சபை நமக்கு வகுத்துத் தந்திருக்கிற குடியரசுச் சட்டம் காந்தியடிகள் சொன்ன ராமராஜ்யத்தை ஏற்படுத்த மிக நல்ல கருவியாகும். ஆனால், அதை நாம் சரியானபடி பிரயோகப்படுத்த வேண்டும்.

## குடியரசு

குடியரசுமுறை மிகவும் மென்மையான முறை. அது சரியான முறையில், தகுதி வாய்ந்த தலைவர்களால் நடத்தப்

பட்டால் மிக நல்ல அரசாங்கமாக அமையும். ஆனால் அதைத்தவருன முறையில் கையாண்டுவிட்டால் மற்றெல்லா ஆட்சி முறைகளைக் காட்டிலும் குடியரசு முறை அதிகத் தீமையுள்ளதாக ஆகிவிடும்.

ஓர் அரசனோ அல்லது சர்வாதிகாரியோ நடத்துகின்ற அரசாட்சியில் எந்த விஷயத்தையும் உடனுக்குடன் மாற்றியமைக்க முடியும். ஆனால் குடியரசுமுறையில் ஒரு சிறிய பிழையைக்கூட உடனுக்குடன் மாற்றிவிட முடியாது. சர்வாதிகாரி நல்லவனாக அமைந்துவிட்டால், அவன் வெகு குறுகிய காலத்திற்குள் பல நன்மைகளைச் செய்து முடித்துவிடலாம். ஏனென்றால், அவன் விருப்பத்துக்கு மாறான விஷயங்களை நினைத்தமாத்திரத்தில் மாற்றிவிடலாம். ஆனால் குடியரசு முறையில் அப்படி முடியாது. ஒரு குற்றம் நேர்ந்துவிட்டால் அதை மாற்றியமைக்கப் பலநாள் காத்திருக்க வேண்டும்.

சர்வாதிகார ஆட்சியில் பல அரசியல்கட்சிகள் இருக்க முடியாது. ஆனால் குடியரசுமுறையில் எத்தனை கட்சிகள் வேண்டுமானாலும் இருக்கலாம். எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராய பேதங்களையும் வெளியிடலாம். எந்தக் கட்சிவேண்டுமானாலும் அதிகாரங்களைக் கைப்பற்ற முயற்சிக்கலாம். அதனால் மிகவும் விரும்பத்தகாதவர்களும் அதிகார பீடங்களுக்கு வந்துவிடவும் நேரலாம். அப்படி வந்துவிட்டால் குடியரசு முடியரசைக் காட்டிலும் கொடுமையுள்ளதாகவும் நேர்ந்துவிடலாம். ஒரு சர்வாதிகாரியின் ஆட்சியில் மக்களுடைய க்ஷேமத்தையும் நாட்டின் பாதுகாப்பையும் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும், அதற்கு வேண்டிய சக்திகளும் அந்தச் சர்வாதிகாரிக்கும், அவனுடைய உத்யோகஸ்தர்களுக்கும் மட்டுமே இருந்தால் போதும்; ஜனங்கள் கவலையற்றிருக்கலாம். ஆனால், குடியரசு முறையில்

இந்தப் பொறுப்புக்களும் சக்தியும் அவற்றைப் பற்றிய கவலைகளும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இருந்தே ஆக வேண்டும்.

குடியரசு நடந்து வருவதாகச் சொல்லப்படுகிற அநேக நாடுகளில் நிமிஷத்துக்கு ஒரு மந்திரி சபை, நேரத்துக்கு ஒரு தலைவன், அடுத்தடுத்துத் தேர்தல்கள் என்ற பல குழப்பங்கள் நடந்துவருவதைப்பார்க்கிறோம். இதற்குக்காரணம் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சி அங்கே இல்லாததுதான். இங்கிலாந்தில் ஜன நாயக முறை மிகவும் வெற்றிகரமாக நடப்பதற்கு ஒரே ஒரு காரணம் என்னவென்றால், இங்கிலாந்தில் இந்தத் தனி மனிதனின் பொறுப்புணர்ச்சி பெரும்பாலான ஜனங்களிடத்தில் இருந்து வருவதுதான்.

'குடியரசு' என்பதற்கு 'குடி ஜனங்கள் தங்களைத் தாங்களே அடக்கி அரசாண்டு கொள்வது' என்பதுதான் அர்த்தம். குடி ஜனங்கள் தங்களைத் தாங்களே அடக்கி ஆண்டுகொள்வது என்பது, அந்த குடிஜனங்களைச்சேர்ந்த ஒவ்வொரு தனி மனிதனும் (ஆணாயினும் பெண்ணாயினும்) தன்னைத் தானே அடக்கி ஆண்டு கொண்டால்தான் முடியும்.

பெரும்பகுதி மிருகத்தன்மையும், ஓரளவு பகுத்தறிவும் ஒரு சிறு துளி ஆன்ம உணர்ச்சியும் சேர்ந்தது மனிதப் பிறவி. பெரும்பாலும் மனிதர்களிடத்தில் மிருகத்தன்மை தான் அதிகமாக ஆட்சிபுரியும். அந்த மிருகத்தன்மையை அறிவானது அடிக்கடி அடக்கி ஆளவேண்டும். அதுதான் அரசாட்சி. ஒரு நாட்டின் மக்களிடத்தில் இயற்கையாக உள்ள மிருகஉணர்ச்சிகளை அடக்கியாளச் சட்டதிட்டங்களைச் செய்து நடத்தும் அறிவுதான் அந்த நாட்டின் அரசாங்கம்.

மனிதப் பிறவிக்கு இயற்கையாக உள்ள மிருக உணர்ச்சிகளை அடக்கி ஆள்வது அறிவுதான் என்றாலும், அந்த அறிவுங்கூட அடிக்கடி தடுமாறிப்போய் மிருக உணர்ச்சிகளுக்கு ஆளாகி விடுகின்றது. அந்த அறிவை நல்வழிப்படுத்த மனிதனுக்குள் மறைந்து ஒதுங்கியிருக் கும் ஆன்ம உணர்ச்சிதான் அப்போதைக்கப்போது உதவு கின்றது. ஆதலால் வெறும் பகுத்தறிவோடுமட்டும் நில்லா மல் ஆன்ம உணர்ச்சியோடுகூடிய அறிவைக்கொண்டு தன்னைத்தான் அடக்கி ஆள்கின்ற மனிதனே சிறந்த தன்னாட்சி உள்ளவன் ஆவான். அதைப்போலவே வெறும் அறிவினால் மட்டும் அல்லாமல், ஆன்ம உணர்ச்சியோடுங் கூடிய அறிவுடைய அரசாங்கத்தை நேமித்து, அதைக் கண்காணித்து அதனுடன் ஒத்துழைக்கும் குடி ஜனங்கள் இருந்தால் குடியரசும் வெற்றி பெறும்.

## நம் கடமை

நம்முடைய குடியரசு வெற்றி பெற்று நாம் நல்வாழ்வு பெறவேண்டுமானால், வெறும் சட்டதிட்டத்தினால் மட்டும் இயலாது. சட்டம் எவ்வளவு விரிவாகவும், எத்தனை பிரிவாகவும் எழுதப்பட்டிருந்தாலும், மக்களின் நல்லெண் ணமும், ஒத்துழைப்பும் இருந்தாலல்லாமல் பயன்தராது. அந் நல்லெண்ணமும் ஒத்துழைப்புங்கூட தெய்வ நம்பிக் கையும் ஜீவகாருண்யமும் பொருந்தியனவாக இருக்க வேண்டும். மக்களுடைய ஒத்துழைப்பு ஏராளமாக இருந் தும் தெய்வ நம்பிக்கையும் ஜீவகாருண்யமும் இல்லாமல் நடத்தப்பட்ட எத்தனையோ அரசாங்கங்கள் நம்முடைய கண்ணுக்கு முன்னாலேயே அழிந்துபோனதை அறிவோம்.

இப்போது ஆரம்பமான நம்முடைய குடியரசு உலகத் துக்கே ஒரு புதுமையானது. உலகம் எதிர்பார்க்கிறபடி அது

கீர்த்தியடைய வேண்டுமானல் நாம் காந்தியடிகளை மறவாது நடந்துகொள்ள வேண்டும். கடலிற் செல்லும் மாலுமிக்குத் திசைகாட்டுங் கருவியின்மேலேயே கண் இருப்பதுபோல, நம்முடைய நோக்கம் காந்தீயத்தில் இருந்துகொண்டே இருக்கவேண்டும். இல்லையானல், நம்முடைய சுதந்திரக் குடியரசுக்கப்பல் திசைதப்பிப்போகும். அதற்கு, ஜனங்களுக்குள் இடைவிடாமல் காந்தீயத்தை நினைப்பூட்டிக் கொண்டே இருக்க வேண்டும்; தேர்தல்களில் பரம யோக்கியர்களையே தேர்ந்தெடுக்கப் படிப்பிக்கவேண்டும்.

## எச்சரிக்கை

இந்தக் குடியரசுத்திட்டம் நம்முடைய காந்திபக்திக்குச் சரியான சோதனையாகும். இப்போது நம்மிடையே காந்தீய நினைப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இடைவிடாது காந்தீயத்தையே பேசிக்கொண்டிருந்த நாம், இப்போது பேசுகின்ற பேச்சுக்களில் காந்திபக்தி காணப்படுவதில்லை. பேச்சளவிற்கூட காந்தியை மறந்துவிட்ட நாம், நம்முடைய செய்கைகளில் எவ்வளவுதூரம் காந்தீயம் காட்டமுடியும் என்பது நாமே எண்ணிப் பார்க்க வேண்டிய விஷயம். காந்தீயம் என்பது இந்திய நாட்டுக்குமட்டும் அல்ல உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்குமே நன்மை பயக்கக்கூடிய தத்துவம். காந்தீயம் இன்றைக்குமட்டும் அல்ல, என்றென்றும் நினைப்பில் இருக்க வேண்டிய நல்லறிவு. அன்னிய நாடுகளெல்லாம் காந்தீயத்தை வெகு ஆவலோடு ஆராய்ந்து அனுஷ்டிக்க ஆரம்பிக்கிற இந்தத் தருணத்தில், காந்தி காலத்தில் பிறந்து, காந்தியோடு வாழ்ந்து, அவருடைய போதனைகளை அவரிடத்திலிருந்தே நேராகக் கற்றுக் கொண்ட நாம், இவ்வளவு சீக்கிரத்தில் காந்தீய பக்தியில் இப்படிக் குறைந்துவிடலாமா ?

இதுவரையிலும் உலகத்தில் வேறு எந்த மனிதனுக்கும் நடக்காதவிதமாக, அவ்வளவு வரிசைகளுடன் வரவேற்று ஜவஹர்லால் நேருவுக்கு அமெரிக்கா ராஜோபசாரம் நடத்தியது, அவருடைய அபூர்வ அரசியல் ஞானத்துக்காகவும், மற்றத் திறமைகளுக்காகவும் மட்டும் அல்ல. ஜவஹர்லால் காந்திமஹானுடைய நேரான வாரிசுஎன்றும், அவர் பேசுகின்ற பேச்சுக்களிலும்,செய்கின்ற காரியங்களிலும் காந்தீயத்தையே கடைப்பிடித்து உலக சமாதானம் ஒன்றுக்காகவே உழைக்கிருர் என்றுந்தான் அமெரிக்கா அவருக்கு அவ்வளவு மரியாதை செய்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இப்போது நமக்குள்ள தலைவர்கள் காந்தீயக் கலாசாலையில் காந்தியடிகளிடத்திலேயே நேராகப் பாடங் கற்றுக் கொண்டவர்கள். காந்தீயத்தைக் காக்கவே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிற உயர்ந்த சீலர்கள். இணையற்ற அரசியல் அறிவாளிகள். இவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று சொல்லத்தகுந்த தலைவர்கள் உலகத்தில் இப்போது எங்குமில்லை என்றேகூறலாம்.

இந்தத் தலைவர்களும், இவர்களுக்கு இணங்கி ஒத்துழைக்கும் யோக்யர்களுமே அதிகார பீடங்களுக்கு வரும்படியாகத் தேர்தல்களில் நாம் நமக்குள்ள வாக்குரிமைகளைப் பிரயோகப்படுத்திஞல், நம்முடைய குடியரசு உலகம் வியக்கத்தகுந்த சமாதானமும் சமதர்மமும் சந்தோஷமும் நிறைந்த சாம்ராஜ்யமாக விளங்கும்.

# நாகரிகத்தின் அளவுகோல்

மனிதனுடைய வாழ்க்கைக்கு இன்பம் ஊட்டுவது கலை. 'கலை' யென்றால் 'வித்தை' என்பது பொருள். மனிதனுடைய புலன்களுக்கு இன்பம் தருவதற்கே செய்யப்படுகிற எல்லாக் காரியங்களும் கலை இனத்தைச் சேர்ந்தவை. அவைகள், வாழ்க்கைக்கு அவசியமான, சாதாரண மற்றெல்லாக் காரியங்களைக்காட்டிலும் அதிக மான புத்திக்கூர்மையோடும், சாதுர்யத்தோடும் அப்பி யாசத்தோடும் செய்யப்படுவதால்தான் அவற்றை 'வித்தைகள்' என்கிறோம்.

இன்பங்களை நாடுவதே சரீரத்தின் இயல்பு. இடை யிடையே எத்தனை துன்பங்கள் நேரிட்டாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல் மீண்டும் மீண்டும் தான் கோரிய இன்பத்தையேதான் மனம் நாடுகின்றது. மேலும் நாம் தேடிய ஒரு இன்பம் நுகரக் கிடைத்துவிட்ட பின்னும் அந்த ஒரே இன்பத்தை வெவ்வேறு விதமாக அநுபவிக்கவே அது ஆசைப்படுகிறது. உதாரணமாகச் சர்க்கரை நம்முடைய நாக்கிற்குத் 'தித்திப்பு' என்ற சுவையைத் தருகிற ஒரு நல்ல பொருள். ஆனால், இந்தச் சர்க்கரையை வெறும் சர்க்கரை வடிவத்திலோ அல்லது சுவையிலோ மட்டும் அநுபவித்து விடுவதில் நமக்குத் திருப்தி உண்டாவ தில்லை. அந்தச் சர்க்கரையை வேறு என்னென்னவோ உருவங்களுக்கு மாற்றி, வேறு எத்தனையோ பொருள் களுடன் வெவ்வேறு தினுசிலும் அளவிலும் கலந்து, 'சர்க்கரைக்கு எத்தனையோ விதமான தித்திப்பு இருக் கிறது' என்று நினைக்கும்படி அத்தனை வெவ்வேறு விதங்

களில் அநுபவிக்க ஆசை உண்டாகிறது. அந்தச் சர்க்கரை என்ற ஓரே பொருள் எத்தனை வேறுவேறு ரூபத்திலும் வேறுவேறு ருசியிலும் அமைத்து நமக்குத் தரப்படுகிறதோ அத்தனை வேலைகளும் அத்தனை கலைகள்.

இதைப்போலவே மற்றப் புலன்கள் விரும்புகின்ற இன்பங்களையும் எத்தனை வேறுவேறு தினுசுகளில் அநுபவிக்க முடிகின்றதோ அத்தனை விதக் 'கலை' வேறு பாடுகளும் இருக்கின்றன.

ஒவ்வொருவிதக் கலைக்கும் ஒவ்வொரு விதமான தனிச் சாமர்த்தியமும், தனிப்பழக்கமும் வேண்டியிருக்கும். அத்தனைவிதமான தனிப்பட்ட கலையறிவுகளையும், மனித வர்க்கம் அறிவறிந்த நாள்தொட்டுப் பாராட்டிப் பாதுகாத்து அநுபவிக்க ஆசைப்பட்டிருப்பதை அறிகிறோம். காலப் போக்குகளுக்கும் மாறுதல்களுக்கும் ஏற்றவாறு கலைகளும் வெளித்தோற்றங்களில் மாறினாலும் கோரிக்கையிலும் குறிகளிலும் மாறினதாகத் தெரியவில்லை.

இந்தக் கலை ஆசையும், அதன் ரசனையும் அறிவின் அளவுக்குத் தக்கபடியே அதிகமாகவோ கம்மியாகவோ இருக்கிறது. அறிவு குறைந்த இடத்தில் கலை உணர்ச்சியோ கலை வளர்ச்சியோ காணமுடியாது. இதை வெகு எளிதாக அறியலாம். எப்படியெனில் மனிதனுக்கு மட்டும் என்று சொல்ல முடியாதபடி -கண், மூக்கு, நாக்கு, காது, உடல் உணர்ச்சி என்ற இந்த ஐம்புல ஆசைகளும் எல்லா விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இருக்கின்றன. அந்த ஆசைகளைப் பூர்த்திசெய்துகொள்ள மனிதன் அலைவதைப் போல்தான் அவைகளும் தேடித் திரிகின்றன. ஆனால் ஓரே இன்பத்தைப் பல ரூபத்தில் அநுபவிக்கவேண்டும் என்று மனிதன் முயற்சிப்பதைப்போல் மற்ற ஜீவராசிகள் முயல்வதில்லை.

ஒரு பசுவோ அல்லது குதிரையோ அதற்கு ஆகாரமாக வைக்கப்படுகிற புல், தவிடு, கொள்ளு அல்லது வேறு எதையும் அப்படியே மென்று சுவைத்து அப்பொருள்களில் இயற்கையாக அமைந்திருக்கிற ருசியை ரசித்து அத்துடன் திருப்தி யடைகின்றன.

ஆனால், இந்த மனிதன் ஒருவன்தான் எந்தத் தின்பண்டம் சிக்கினாலும் அதில் இயல்பாக இருக்கிற சுவையை விட்டுவிட்டு, அதில் இல்லாத சுவையை அதில் சேர்க்க விரும்புகின்றான். கரும்பு இனிப்பான சாறுள்ள பொருள். அதைக் கடித்து மென்று சப்பினால் கரும்பின் ருசியை அநுபவிக்கிறோம். ஆனால், கரும்பின் ருசியை அப்படி மென்று சுவைப்பதோடு நாம் விட்டுவிடுவதில்லை. அதே கரும்பை ஆலையில் நசுக்கிச் சாறுபிழிந்து அந்தக் கருப்பஞ்சாற்றைத் தண்ணீரைப்போற் குடித்து ருசிக்கிறோம். அதிலும் திருப்தி ஏற்படாமல் அக்கருப்பஞ் சாற்றில் கொஞ்சம் தேங்காயின் இளநீரைக் கலந்து உண்டு பார்க்கிறோம். அதையும்விட்டு, ஆலைச்சாற்றில் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசத்தைக் கலந்து சாப்பிட்டுப் பார்க்கிறோம். பிறகு அதில் கொஞ்சம் ஏலக்காய்ப்பொடி தூவி அந்த வாசனையோடு கூடிய கருப்பஞ் சாற்றின் சிறப்பைக் கவனிக்கிறோம். அதோடு விடுவோமா. கருப்பஞ்சாற்றில் தனித்தனியே இளநீரையும் எலுமிச்சம்பழ ரசத்தையும், ஏலக்காய் வாசனை முதலியவைகளையும் கலந்து பார்த்தது போதாதென்று இவை எல்லாவற்றையும் ஏககாலத்தில்கருப்பஞ்சாற்றிற் கலந்து இன்னும்-கிடைக்குமானால் - நல்ல கொம்புத்தேன், உயர்ந்த பன்னீர் இவற்றையுங்கூட அந்தக் கருப்பஞ்சாற்றில் கொட்டிக் கலந்து உலகத்திலில்லாத ஒரு நூதனமான சுவையை உண்டாக்க ஆசைப்படுகிறோம்.

இது மனித இயல்பு. ஆனால், மிருகங்களும் மற்ற ஜந்துக்களும்கூட, கிடைக்கிற இன்பங்களைக் கிடைக்கிற

படியே அநுபவித்து ஆசை தீர்ந்து நிம்மதியடைகின்றபோது, இந்த மனிதன்மட்டும் எது எவ்வளவு கிடைத்தாலும் அதில் திருப்தி அடைந்து விடாமல் மேலும் மேலும் வெவ்வேறு இன்பங்களில் விருப்பம் கொண்டு' அலைந்து திரிந்து, அல்லற்பட்டும் அலுத்துவிடாமல் புதுப்புது இன்பங்களைத் தேடிப் புகைந்து கொண்டே யிருக்கிருனே ! - என்ற அவமதிப்பும் அடிக்கடி தோன்றுகின்றது. இந்த அவமதிப்பு மனப்பான்மை வருகிறபோதெல்லாம் மனிதப் பிறவி மற்றப் பிறவிகளைவிட மிகவும் மட்டமானது என்றுகூட ஏளனம் செய்ய நாம் கூசுவதில்லை.

ஆனால், உண்மையில் மனிதன் மற்றப் பிறவிகளைக் காட்டிலும் எல்லாவிதத்திலும் ஏற்றமுள்ளவன். மிருகங்களுக்கும் மனிதனுக்கும் பொதுவாக உள்ள பஞ்சேந்திரிய ஆசைகளைமட்டும் வைத்துக்கொண்டு மனிதனையும் மிருகத்தையும் ஒத்திட்டுப் பார்க்கக்கூடாது. மனிதனைத் தவிர மற்ற எல்லாப் பிராணிகளுக்கும் பஞ்சேந்திரிய உணர்ச்சிகளைப் பற்றிய ஐந்து அறிவுகள்தான் உண்டு. மனிதனுக்குத் தான் இந்த ஐந்து இந்திரிய உணர்ச்சிகளுக்கும் அப்பாற்பட்ட ஆருவது அறிவு என்று சொல்லப்படுகிற பகுத்தறிவு உண்டு. தக்கது - தகாதது, நல்லது - கெட்டது, உயர்வு - தாழ்வு என்று பகுத்துப் பார்த்து எதையும் சீர்தூக்க முயலுகின்ற இயல்பு இந்தப் பகுத்தறிவைச் சேர்ந்ததே.

மற்றப் பிராணிகளிடத்தில் இல்லாமல் மனிதனிடத்தில் மட்டும் இருக்கிற இந்தப் பகுத்தறிவுதான் இன்பங்களைத் தேடி அலைவது. ஒரே இன்பத்தை வெவ்வேறு விதமாக அநுபவிக்க விரும்புவதும் இந்தப் பகுத்தறிவுதான். மனிதன் அநுபவிக்கக்கூடிய ஐவகை இன்பங்களை ஐயாயிர வகை இன்பங்கள்போல எண்ணிக்கொள்ளப் பரபரத்து அலைவது மட்டும் அல்லாமல் இந்த ஐந்து புலன்களுக்கும் அப்பாற்

பட்டதாக ஏதேனும் புது இன்பம் இருக்கிறதா என்று ஏங்குவதும் இந்தப் பகுத்தறிவுதான்.

நம்முடைய புலன்களுக்குத் தட்டுப்படாமல் மறைந்து கிடக்கிற சக்திகளைக் கண்டுபிடித்து, அந்தச் சக்திகளைக் கொண்டு வேறு புதிய இன்பங்களையோ, அல்லது இப்போதுள்ள இன்பங்களையேயானாலும் வேறு புது தினுசாக அநுபவிக்கும் முறைகளையோ அறிவதற்குத் துடிப்பதும் இந்தப் பகுத்தறிவுதான். அதற்காகப் புதுப்புது சக்திகளைக் கண்டுபிடிக்க விடாமுயற்சியோடு வேலை செய்கிறபோது, எதிர்பாராத பலவித நூதன எந்திர தந்திர சாதனங்களையும் கண்டுபிடித்துவிட நேர்வதும்கூட இந்தப் பகுத்தறிவின் இன்ப வேட்டையின் விளைவேயாகும்.

இன்றளவும் மனிதன் கண்டுபிடித்துள்ள எல்லாவிதமான எந்திர தந்திர விஞ்ஞான விருத்திகளும், இன்பத்தை நாடி, சுகபோக சாதனங்களைத் தேடி, மனிதனுடைய பகுத்தறிவு பட்ட பாடுகளின் இடையில், இரண்டாம் பக்ஷமாகச் சல்லிவேர்கள் போல் கிடைத்த சரக்குகளேயாகும். மனித வர்க்கத்தின் இன்பத்தை எண்ணிச் செய்த முயற்சிகளின் இடையே கிடைத்த இந்த எந்திர தந்திர விஞ்ஞானவித்தைகள் (இப்போதுள்ள சூழ்நிலையில்) அடிக்கடி மனித வர்க்கத்துக்குத் துன்பம் செய்யவே உபயோகப்படுகின்றன என்பது வேறு விஷயம். அதைப் பற்றி இப்போது ஆராய்ச்சி யில்லை. கொலைக்கருவியாக உபயோகப் படுத்தப்படுகின்ற ஒரு துப்பாக்கியும்கூட, அதை வைத்திருக்கிறவன் அவனுடைய மனைவிமக்கள், பந்துமித்திரர், முதலானவர்களோடு அநுபவித்து வருகிற இன்பத்தைக் கெடுத்துவிடக்கூடிய அன்னிய காரணங்கள்

ஏற்பட்டால், அந்தக் காரணங்களைத் தொலைத்து அவனுடைய இன்ப வாழ்க்கையைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்கு உதவியாகவே யன்றி, வெறும் கொலைக்கென்று மட்டும் கொண்டதல்ல.

மனிதன் கண்டுபிடித்துள்ள எல்லாக் கருவிகளும் பகுத்தறிவு தேடுகின்ற இன்ப வாழ்வைக் கோரியே ஏற்பட்டவை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆதலால் அவைகளும் 'கலை'களின் கணக்கில் சேர்ந்தனவேயாகும். எனவே, மனிதனுடைய இன்ப நுகர்ச்சிக்குத் துணைபுரிகின்ற எல்லாச் செயல்களும் கருவிகளும் கலையறிவைச் சேர்வன.

புலன்களின் இன்பநுகர்ச்சிக்கு உதவுகின்ற எல்லா வித்தைகளும் கலைகள் என்பது உண்மையானாலும் எல்லாக் கலைகளும் ஒரே தரத்தைச் சேர்ந்தவை அல்ல. எல்லாக் கலைகளும் ஒரேவிதமான பலனைக் கொடுக்கக் கூடியனவும் அல்ல.

மொத்தமாக இந்தக் கலைகளை இரண்டு இனங்களாகப் பிரிக்கலாம். ஒன்று, புலன்களுக்கு இன்பம் உண்டாக்குவதோடு நின்றுவிடும். இன்னொன்று, புலன்களுக்கு இன்பம் ஊட்டுவதை ஆரம்பமாக வைத்துக்கொண்டு, புத்தியைக் கிளரச் செய்து, செயலைத் தூண்டும்; அமைதியையும் அளிக்கும். முதலில் சொல்லப்பட்ட 'கலை' அறிவிற் கலக்காது; இரண்டாவது சொல்லப்பட்ட 'கலை' அறிவிற் கலந்து சிந்தையைக் கிளப்பிச் செயலைப் பண்படுத்தும்.

வெறும் இன்ப நுகர்ச்சியைமட்டும் நாடிப் பல கலைகளைக்கண்ட,பகுத்தறிவானது,பண்புகள்நிறைந்துபக்குவம் முதிர முதிர, அந்த இன்பங்களை நிறுத்துப் பார்க்கக்கூடிய சுத்த அறிவாகத் தெளிவடைகின்றது. அந்த முதிர்ந்து

தெளிந்த அறிவு, எந்த இன்பம் எப்படிப்பட்டது? என்று ஆராய ஆரம்பிக்கிறது. அப்படி ஆராயப் புகுந்தபின் அந்த அறிவு, தான் அதுவரை அனுபவித்த எண்ணிறந்த கலை வித்தியாசங்களில், எந்தக் கலை நெடுநேரம் அனுபவிக்கக்கூடிய உயர்ந்த இன்பத்தைத் தரவல்லது? என்று தேடுகின்றது. அப்படித் தேடுகிறபோது, தான் இதுவரை அனுபவித்து வந்த எந்தக் கலை இன்பமும், தன் அறிவு இப்போது நாடுகின்ற உயர்ந்த நுகர்ச்சியைத் தரத்தக்கதாக இல்லாதிருப்பதைக் கண்டு, இந்தக் கலைகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து ஒதுக்கித் தள்ளிவிட்டு, இவைகளுக்கு எட்டாத வேறு இன்பத்தை விரும்புகின்றது. அந்தப் புதுஇன்பம் எது என்று இந்த அறிவுக்குங்கூடச் சொல்ல முடிவதில்லை. தான் தேடுகின்ற புது இன்பம் இதுவரையில் தான் அநுபவித்த எந்தக் கலையிலும் இல்லையென்பது மட்டுந்தான் தெரிகிறதேயல்லாமல், அந்தப் புது இன்பம் எப்படிப்பட்டது, எங்கே கிடைக்கும் என்று சொல்ல முடிவதில்லை.

இதை ஒரு நல்ல சரித்திர உதாரணத்தால் விளக்குவது பயனுடையதாகும்.

அமெரிக்காவில் 'ராக்வெல்லர்' என்ற ஒரு மாபெரும் பணக்காரர் இருந்ததை நாம் அறிவோம். அவர் உண்மையாகவே கணக்குக்கு எட்டாத அளவு செல்வம் சம்பாதித்தவர். உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் இன்றைக்கும் அவர் பேரால் பலவிதமான தான தர்ம நிலையங்கள் நடந்து வருவதை. அறிவோம். அவர் பணம் சம்பாதிக்க என்னென்ன வழிகளைக் கையாண்டார் என்று எவராலும் சொல்லமுடியாதென்று, அவரைப்பற்றிச் சரித்திரம் எழுதின எல்லாரும் சொல்லுகிறார்கள். புகழத் தக்கதோ இகழத் தக்கதோ எந்த வழியிலாயினும் சரி, பொருள் சம்பாதிப்பது ஒன்றேதான் அவர் நோக்கமாம்.

இப்படி எல்லை காணமுடியாதபடி ஏராளமான குபேர சம்பத்தைக் குவித்து, மூப்படைந்தபின் அவர் அத்தனை பணத்தையும் என்ன செய்வதென்று தெரியாமல், அதைப் பற்றிப் பல நண்பர்களிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டு, வயது முதிர்ந்து தளர்ச்சியும் தள்ளாமையும் மேலிட்டுத் தம்முடைய கடைசிக் காலத்தைப் பலவித சிந்தனைகளில் களித்துக்கொண்டு ஓய்ந்திருந்தார்.

ஒரு நாள் அவருக்கே ஏதோ ஒரு எண்ணம் தோன்றி என்றும் இல்லாத மாதிரி கிறிஸ்துவ வேதமாகிய 'பைபிள்' என்ற புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு, ஏகாந்தத்தில் அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்,

அந்தச் சமயத்தில் அவருக்கு மிகவும் ஆப்தரான ஒரு நண்பர் அவ்ரைப் பார்க்க வந்தார். மிகவும் நெருங்கிய நண்பரானதால் **'ராக்வெல்லரைத்'** தேடிக்கொண்டு அவருடைய ஏகாந்த அறைக்கே வந்தார். **ராக்வெல்லர்** தலையைக் கவிழ்ந்தபடியே பைபிளைப் பார்த்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து, நண்பர் வந்ததையும் கவனிக்கவில்லை. வந்த நண்பர் அசைவற்று நின்று ராக்வெல்லர் எந்தப் புத்தகத்தை வைத்துககொண்டு அவ்வளவு மெய்ம்மறந்து இருக்கிறார் என்பதைக் கவனித்தார். கையிலிருக்கும் புத்தகம் பைபிள் என்பதைக் கண்டார். அது அவரை அதிசயத்தில் மூழ்கடித்து விட்டதாம். அது வரையிலும் 'பைபிள்' போன்ற புத்தகங்களை 'வேலையற்ற வீணர்கள் வாசிக்கும் புத்தகம்' என்று, வெறுத்துப்பேசி வந்த ராக்வெல்லர், அதை விரித்து வைத்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் மெய்ம் மறந்திருப்பதைக் கண்ட நண்பர் அதிசயத்தில் அழுந்திவிட்டது ஆச்சரியமல்ல !

நெடுநேரம் சென்றபின் ராக்வெல்லர் தாமாகவே தலையை நிமிர்ந்தபோது எதிரே நண்பர் நிற்பதைக்கண்டு,

வழக்கம் போல வரவேற்ருர். வரவேற்பு முடிந்தபின் வந்த நண்பர்

"அதென்ன பைபிளா?" என்ருர்.

"ஆம்" என்ருர் ராக்வெல்லர்.

"ஏது வெகு புதுமையாக இருக்கிறதே? பைபிளில் அவ்வளவு ஆழ்ந்த சிந்தனையோடு என்ன பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?" என்ருர் நண்பர்.

அதற்கு ராக்வெல்லர் புன்னகை செய்துவிட்டு "இவ்வளவு செல்வத்தைச் சேகரித்தும் இந்தச் செல்வத்திஞல் கிடைக்காமற்போன நிம்மதி இந்தப் புத்தகத்திலாவது இருக்குமா என்று பார்த்தேன்" என்ருராம்.

அதைப்போல, எல்வளவோ கலைகளை அனுபவித்து இன்பம் நுகர்ந்த அறிவு, அவற்றையெல்லாம் ஒவ்வொன்ருக உதறிவிட்டு, நிலையான இன்பத்தைத் தரக்கூடிய கலை ஏதேனும் உண்டா என்று நினைக்கக் கூடிய நிலைமையையும் அடைகின்றது

அந்த நிலையில், மனத்துக்கு ஓர் ஆறுதலைக் கொடுக்கக்கூடிய கலைதான் அறிவை இன்புறுத்தும் கலை. இந்தக் கலைதான் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட அறிவிற் கலந்து அறிவிற்கு இன்ப மூட்டுவது. முதலிற் சொல்லப்பட்ட கலை புலன்களுக்கு மட்டும் இன்பமூட்டும் சாதாரண வித்தையேயாகும்.

உலகத்தில் கலைகள்தான் நாகரிகத்தின் அளவுகோல், எல்லாக் கலைகளும் நாகரிகத்தைக் காட்டுவனவே. ஆனுலும், அறிவிற்கு இன்பமளிக்கும் கலைதான் நாகரிகத்தின் சிகரம்.

தமிழர்கள் கலைகளிற் சிறந்தவர்கள் என்பது, சரித்திர உணமை. தமிழர்கள் நெடுங்காலமாகப் போற்றி வளர்த்து

உலகுக்கு உதவியிருக்கின்ற எல்லாக் கலைகளும் அறிவுக்கு ஆக்கமும் அமைதியும் தரக்கூடியவை என்பதில் தடையில்லை. கலைகளைத் தெய்வத்துக்குச் சமானமாக எண்ணிக் கோயில்களில் வைத்துக் கூடக்கும்பிட்டவர்கள் தமிழர்கள். தமிழ்நாட்டிலுள்ள கோயில்களை யெல்லாம் கவனித்தால், அவற்றில் அறிவுக்கு நிம்மதியளிக்கும் எல்லாக் கவின் கலைகளும் (**fine arts**) இன்னும் போற்றப் பட்டு வருவதைக் காணலாம். சிற்பம், சித்திரம், நடனம், நாட்டியம், சங்கீதம், இசைக் கருவிகளின் இனங்கள் முதலிய எல்லாக் கலைகளும் இந்தக் கோயில்களில் இன்றும் வரிசை பெற்று வாழ்ந்து வருவதைக் கண்டால், தமிழர் நாகரிகத்தின் சிறப்பையும், இவ்வளவு சீர்குலைந் துழலும் உலகப்போக்கிலும், அந்த நாகரிகத்தின் பலனாகவே தமிழ்நாடு அமைதியிலும் அன்பிலும் சமரச சன்மார்க்க உணர்ச்சியிலும் இன்றும் தலைசிறந்து விளங்குகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆதலால் கலைகளின் முக்கிய நோக்கம் இன்பத்தை ஊட்டி, அத்துடன் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, அறிவைத் துலக்கி, சிந்தனையைச் சுத்தப்படுத்தி, அன்பைப் பெருக்கி, அமைதிக்கு வழிகாட்டுவதாகும் அப்படிப்பட்ட கலைகளே சமாதானமுள்ள சமுதாயத்தை உண்டாக்கிச் சச்சரவுகளைக் குறைத்து, மக்களின் இன்பத்தை வளர்க்கும். ஆகையினால்,

**கலை என்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்,**
**களிப்பூட்டி அறிவினைப்போய்க் கவ்வவேண்டும்**
**நிலைகொள்ளாச் சிந்தனையை நிற்கச் செய்து**
**நீதிநெறி தெய்வநினைப் பூட்ட வேண்டும்**

அதுதான் கலை. அந்தக் கலைதான் நாகரிகத்தின் சரியான அளவுகோல்.

# ஒரு குறள்

"சிவ சிவா! அப்பனே, ராமலிங்கம்! இந்த வார்த்தை நீ சொல்லக் கூடாது; அது பாவம்" என்று சற்றே கடுத்த குரலில் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார் திரு. ஆனையப்ப முதலியார்.

திரு. ஆனையப்ப முதலியார் அவர்கள் எனக்குத் தமிழ் ஆசான். நான் நெடுநாட்களுக்கு முன்னால் வெளியிட்ட என் 'தேசீயப் பாட்டுகள்' என்ற சிறு புத்தகத்தில், விநாய கர் துதியோடு ஆசானுக்கு வணக்கம் காட்டவே,

'மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
ஆனை யப்பன் அடிமலர் போற்றுவோம்'

என்று பாடினேன். அவ்வளவு வணங்கத் தகுந்தவர் எனக்கு ஆனையப்ப முதலியார். நான் திரு. ஆனையப்ப முதலியாரை வணங்கத் தகுந்தவரெனக் கொண்டது, அவர் எழுத்தறிவித்த ஆசான் என்பதற்காக மட்டும் அல்ல. அவர் தமிழ்மொழியின் தண்மையே வடிவான குணவான். தீயவற்றை வழுக்கியும் வாயாற் சொல்லாத ஒழுக்கமுடையவர். சைவ சமயத்தின் உயர்ந்த பண்புகளுக்கெல்லாம் உறைவிடமானவர். பொய் சொல்லத் தெரியாத புனிதர். அன்பற்ற காரியம் எதையும் செய்யமாட்டார். எப்போதும் சிரித்த முகத்தோடு இனிய வார்த்தைகளையே பேசுவார். நாமக்கல் உயர்நிலைப் பள்ளியில் அவர் தலைமைத் தமிழாசிரியர். பள்ளிக்கூட நேரத்தில் தமிழ் வகுப்பு நடக்கிற பகுதிதான் மாணவர்களுக்குக் கட்டவிழ்த்து விட்டதாக இருக்கும். சில சமயங்களில் அவர்கள் கொட்டமடிக்கிற

கூச்சலைக் கேட்டுப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் அங்கே வந்து பையன்களைத் தண்டித்துத் தமிழ் ஆசானை யுங் கண்டிப்பார். அதையும் புன்முறுவலோடு பொறுத் துக் கொள்வார் ஆனையப்ப முதலியார்.

ஆனையப்ப முதலியாரவர்களின் சுபாவத்தை விளக்க 1905-ஆம் ஆண்டில் எங்கள் வகுப்பில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை இங்கே குறிப்பிடுவது பொருந்தும். தமிழ்ப் பாடம் நடப்பதற்கென்று ஒரு தனி அறை ஒதுக்கப்பட் டிருந்தது. ஐந்தாம் படிவத்து மாணவர்கள் தமிழ்ப் பாடத் துக்காக அந்த அறைக்குப் போனோம். தமிழாசான் அங்கு வரத் தாமதமாயிற்று. ஆனையப்ப முதலியார் கருப்பு நிற மானவர். சில குறும்புக்காரப் பையன்கள் அவரைக் 'கருப்பு ஆனை' என்று சொல்லி, '**black elephant**' என்று ஆங்கிலத்தில் சுட்டுவார்கள். மிகவும் குறும்புக் காரனை குப்புசாமி என்பவன் "கருப்பு ஆனையப்ப முதலி யார் இன்னும் வரவில்லை" என்பதை ஆங்கிலத்தில் பதம் பதமாகப பிரித்து மொழி பெயர்த்து, கருப்பு + ஆனை + அப் பன் + முதலை + யார் - இன்னும் வரவில்லை — **Black + + elephant + father + crocodile + who. – not yet come** - என்று எழுதித். தான எழுதியிருக்கிற சமார்த்தியத்தைப் பக்கத்திலிருந்த பையன்களிடத்தில் காட்டி மகிழ்ந்து கொண்டிருந்தான்.

ஆனையப்ப முதலியார் வந்துவிட்டார், அந்தக் காகி தத்தைக் கடைசியாகப் பார்த்துக் கொண்டிருந்த பையன் ஆசான் வந்துவிட்டதைக் கண்டு அதைத் தன் முதுகுக்குப் பின்னால் மறைத்தான். அவனுக்கு அடுத்தாற் போல் இருந்த வெங்கடேசன் என்ற பையன் அதை வெடுக் கென்று பிடுங்கிக்கொண்டு போய் ஆனையப்ப முதலியாரி

டம் கொடுத்து விட்டான். ஆனையப்ப முதலியாருக்கு ஆங்கிலமும் எழுதப் படிக்கத் தெரியும். அந்த வாசகத்தைப் பார்த்தார்; புரிந்து கொண்டார். தம்மைக் கருப்பு ஆனை' என்று சில மாணவர்கள் சொல்வதை அவர் அறிந்தவர். ஆனால் புதுமாதிரியாகப் பெயரைப் பதம் பிரித்து மொழி பெயர்த்திருப்பது அவருக்கே வேடிக்கையாகத் தோன்றியது. அதைப் பார்த்துப் பலமாகச் சிரித்து விட்டு, "இதை யார் அப்பனே எழுதியது?" என்றார்.

எழுதினவனைச் சொல்ல மற்றவர்கள் தயங்கினார்கள். ஆனால், குப்புசாமி "நான் சார்" என்று எழுந்து நின்றான்.

"நீதானா? பேஷ்! வெகு நன்றாக மொழி பெயர்த்திருக்கிறாய். அத்துடன் எழுதினது 'நான்தான்' என்று எழுந்து நின்றாயே. உண்மையைச் சொன்ன உன் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும்" என்று சொல்லிவிட்டுத், தம் சட்டைப் பையில் கைவிட்டு இரண்டு அணவை எடுத்து வெங்கடேசனிடம் தந்து, "போய்ச் சர்க்கரை வாங்கிக் கொண்டு வா" என்றார். ஆசான் விளையாட்டாகச் சொல்லுகிறாரோ என்று வேங்கடேசன் சிரித்துக்கொண்டே தயங்கி நின்றான்.

"உண்மையாகத்தான் அப்பனே; உடனே ஓடிச் சர்க்கரை வாங்கிக்கொண்டு வா" என்று அவனை முடுக்கினார்.

வெங்கடேசன் ஓடிப்போய்ச் சர்க்கரை வாங்கி வந்தான். அந்த நாளில் சர்க்கரை மிகவும் மலிவு. வெங்கடேசன் கொண்டுவந்த பொட்டலத்தை அவிழ்த்து, அதில் ஒரு பிடி சர்க்கரையைக் கையில் எடுத்துக்கொண்டு ஆசிரியர் குப்புசாமியைத் தம் அருகில் வரும்படி அழைத்தார். ஆனால், குப்புசாமி போகவில்லை. நின்ற இடத்திலேயே பிரமை பிடித்தவன்போல், இமை கொட்டாமல் விழித்துக்

கொண்டு நின்றான். எங்கள் வகுப்பில் மிகவும் துடுக்கானவன் குப்புசாமி. தலைமை ஆசிரியரிடத்திற்கூட அச்சமற்றவன் அவன் அப்படிச் செயலற்று நின்றது எங்களுக்கெல்லாம் அதிசயமாகவே இருந்தது.

ஆசிரியர் தாமே குப்புசாமியின் அருகில் வந்து, "அப்பனே, வாயைத் திற" என்றார்.

என்ன ஆச்சரியம்! குப்புசாமியின் உடல் நடுங்க ஆரம்பித்தது. "இல்லை சார், இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் சார்!" என்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டே சொன்னான். அதைக் கேட்ட ஆசிரியர் தம் இடக் கையால் குப்புசாமியின் முதுகைத் தட்டிக்கொடுத்து, "அப்பனே, நீ ஒரு குற்றமும் செய்துவிடவில்லை. உன்னைத் தண்டிப்பதற்காக நான் வந்தவன் அல்ல. நீ உண்மையைத்தான் சொன்னாய். நான் கருப்பு நிறந்தான். அது உண்மை. நான் 'ஆனையப்பன்தான்.' அது உண்மை. அதற்குமேல் 'இதை எழுதினது நான்தான் என்று ஒப்புக்கொண்டாய். அது மிகச்சிறந்த குணம். அதற்காக நான் மன மகிழ்ந்து உண்மை பேசிய உன் வாய்க்குச் சர்க்கரை போட்டுப் பாராட்டுகிறேன். அதற்காக அழுவானேன்? பயப்படாதே, வாயைத் திற" என்றார்.

"வேண்டாம் சார் எனக்கு வெட்கமாய் இருக்கிறது சார்" என்று சொல்லி வாயைத் திறக்க மறுத்துவிட்டான்.

"அப்படியானால் வேண்டாம். வாயில் போடவில்லை. கையிலாவது வாங்கிக்கொள்" என்று பலமுறை சொன்ன பின் கையில்மட்டும் சிறிதளவு வாங்கிக் கொண்டான். மிகுந்துள்ள சர்க்கரையை மற்ற மாணவர்களுக்குப் ஆசிரியர் பகிர்ந்து கொடுத்துவிட்டார்.

அன்று முதல் குப்புசாமியின் குறும்புத் தனங்கள் குறைந்துவிட்டன. ஆனையப்ப முதலியார் சர்க்கரை வாங்கி வரச்சொன்னது உண்மையிலேயே குப்புசாமியின் வாய்மையை பாராட்டத்தான்; பரிகசிக்க அல்ல. ஆயினும், அது தண்டனை கொடுத்துத் திருத்துவதைக் காட்டிலும் நல்ல பலனைத் தந்துவிட்டது.

ஆனையப்ப முதலியார் தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த படிப்பும் பற்றும் உடையவர். நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களிடத்தில் பரம பக்தி உள்ளவர். நான் கல்லூரிப் படிப்பை விட்டபிறகும் பல ஆண்டுகள் அவரிடத்தில் பாடங் கேட்டுக் கொண்டவன். பொதுவாகச் சங்க நூல்களிலும் சைவ நூல்களிலும், சிறப்பாகத் திருக்குறளிலும் என் அறிவை விளக்கி வைத்தவர் அவர். என்னிடத்தில் தாய் போன்ற அன்பு கொண்டவர். அப்படிப்பட்ட அவர் இப்படி, "சிவ சிவா! அப்பனே ராமலிங்கம், இந்த வார்த்தை நீ சொல்லக் கூடாது. அது பாவம்" என்று கடுகடுத்தது என்னைத் திடுக்கிடச் செய்துவிட்டது.

**1932**-ஆம் ஆண்டில், மகாத்மா காந்தியவர்கள் நடத்திய சத்தியாக்கிரகச் சட்ட மறுப்பில் ஈடுபட்டு நான் ஒரு வருடச் சிறைத் தண்டனை அடைந்து முதலில் 'ஸி' வகுப்புக் கைதியாகக் கோயம்புத்தூர் சிறைக்குக் கொண்டுபோகப் பட்டேன். இரண்டு வாரத்துக்குள் 'பி' வகுப்புக் கொடுக்கப்பெற்று வேலூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டேன். அங்கே, ஸ்ரீ ராஜாஜி முதற்கொண்டு தமிழ் நாட்டின் பல தலைவர்களும், ஸ்ரீ பிரகாசம் முதற்கொண்டு ஆந்திர நாட்டின் பல தலைவர்களும் 'ஏ' வகுப்புக் கைதிகளாகவும் 'பி' வகுப்புக் கைதிகளாகவும் இருந்தார்கள். 'ஏ' வகுப்புக் கைதிகளுக்

கும் 'பி' வகுப்புக் கைதிகளுக்கும் பல வசதிகள் செய்து கொடுத்துச், சர்க்கார் அவர்களை மிகவும்கண்ணியமாகவே நடத்தினர்கள். படிக்கவோ, எழுதவோ, பாடவோ, ஆசனம் பழகவோ, தியானம் பண்ணவோ எந்தவிதமான இடையூறும் இல்லாமல் ஏகாந்தமாக இருந்ததால் அந்தச் சிறைச்சாலை ஒரு தவச்சாலையாகவே இருந்தது. என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய சிந்தனை சக்திகளைச் சீர் திருத்தி, அறிவைத் துலக்கி ஆன்ம உணர்ச்சிகளில் ஆசை யுண்டாக்கி, என் உள்ளத்தை மிகவும் தூய்மைப் படுத்தியது அந்தச் சிறைவாசந்தான். அதற்கு முன்னல் நான் படித்திருந்த இலக்கியங்களின் பெருமைகளை நான் அனுபவிக்க முடிந்தது அங்கேதான். மகாத்மா காந்தியின் சுதந்திரப் போராட்டத்தின் அடிப்படைத் தத்துவங்களான 'அஹிம்சை', 'சத்தியம்' என்ற இரண்டையும் 'கொல் லாமை', 'பொய்யாமை' என்று இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னுலேயே திருவள்ளுவப் பெருமான்,

> ''ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
> பின்சாரப் பொய்யாமை நன்று''

என்று சொல்லியிருப்பதன் உட்கருத்தை அங்கேதான் உணர்ந்தேன். மேலும், தலை சிறந்த தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் இந்தக் கொல்லாமை, பொய்யாமை இரண்டுமே சிறப்பிடம் பெற்றிருப்பதைச் சிந்தித்துப் பார்க் கப் போதுமான அவகாசம் அங்கேதான் கிடைத்தது. அந்தச் சிறைவாச காலத்தை இப்போது நினைத்தாலும், 'இன்னெரு முறை சத்தியாக்கிரகம் நடக்காதா? நானும் இன்னெரு முறை அப்படிச் சிறைவாசம் செய்யமாட்டேனு?' என்ற ஆசை அடிக்கடி உதிக் கின்றது.

அந்தச் சிறைவாசத்தில் திருக்குறள், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களை அடிக்கடி நான் படித்துப் பாடி அர்த்தம் சொல்லுவேன். பலர் அதைக் கேட்பார்கள். சிலர் தனித்தனியே என் சிறையறைக்கு வந்து திருக் குறளிலும் கம்பராமாயணத்திலும் புரியாத இடங்களுக்கு விளக்கம் கேட்பார்கள். நான் எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் சந்தேகங்களைத் தெளியவைப்பேன். அப்படிப் பட்டவர்களுக்குள் திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மிக வும் முக்யமானவர். அவர் திருக்குறளை ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலும் நான் முறையே படித்துப் பொருள் விளக்கவேண்டும் என்று விரும்பினுர். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாங்கள் இருவரும் சேர்ந்து திருக்குறளைப் படிக்கலானேம். அப்படிப் படிக்கிறபோது 'பரிமேலழகர்' எழுதியிருக்கிற உரை எளிதில் புரிந்துகொள்ள முடியாம லிருப்பதோடு பல இடங்களில் முரணுடையதாக இருக்கிற தென்றும், அறிவுக்குப் பொருந்தாததாக இருக்கிறதென் றும் ரெட்டியார் குறை கூறினுர். எனக்குத் திரு. ஆனையப்ப முதலியார் பாடம் சொன்ன பரிமேலழகர் உரைதான் தெரியும். அதனுல் ராமசாமி ரெட்டியார் எழுப்பிய சில நியாயமான ஆட்சேபங்களுக்குச் சரியான சமாதானம் சொல்ல என்னுல் முடியவில்லை. எனக்கு அது மிகவும் வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது. திருக்குறளை நன்ருக அறிந்திருப்பதாக எண்ணியிருந்த பெருமிதம் இடிப் புண்டது.

நாங்கள் இருவரும் சேர்ந்து திருக்குறள் படிப்பது முடிந்தபின் ஒருநாள் இரவு எனக்குத் தூக்கமே வர வில்லை. ராமசாமி ரெட்டியார் குறிப்பிட்ட பல குறைகள் என் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன. அவற்றிற்குச் சமாதானம் சொல்ல என்ன என்ன விதமாகவோ எண்

ணிப் பார்த்தேன் முடியவில்லை; ரெட்டியார் சொன்ன ஆட்சேபங்கள் மிகவும் நியாயமானவைகளாகத் தெரிந்தன. பரிமேலழகர் உரை சில இடங்களில் அறிவுக்குப் பொருந்தாமலிருப்பதையும் உணர்ந்தேன். ஆனால் அப்படிப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான உரைகள் எவை? அவற்றை எப்படிக் கண்டுபிடிப்பது? என்பவை போன்ற கேள்விகள் எழுந்தன. கடைசியில் அதுவரையிலும் நான் அறிந்திருந்த உரைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, முற்றும் புதிய முறையில் திருக்குறளை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று உறுதி கொண்டேன்.

மறுநாளே அந்த ஆராய்ச்சிக்கு உதவும் என்று கருதப்பட்ட பல புத்தகங்களையும் தமிழ்ப் பேரகராதியையும் வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்புக் கைதிகள் ஆட்சேபத்துக்கு இடமில்லாத புத்தகங்களை வேண்டிய மட்டும் சொந்தச் செலவில் வாங்கிக் கொள்ளலாம்.

திருக்குறளுக்குத் 'தெளிவுரை' என்றும், 'விளக்க உரை' என்றும், 'விரிவுரை' என்றும் பல பேர் வெளியிட்டிருந்த பல புத்தகங்களையும் வாங்கி வரச் செய்தேன். ஆனால் அந்த உரைகள் அனைத்தும் பரிமேலழகர் உரையையே தழுவி எழுதப்பட்டிருந்தன. அதனால் அவைகள் ஒரு சிறிதும் உதவவில்லை. பிறகு அகராதியை மட்டும் துணைகொண்டு சொந்த யுக்தியையும் அனுபவத்தையும் சேர்த்துப் பார்த்து ஒவ்வொரு குறளுக்கும் புதுப் பொருள் காண முயன்றேன். அப்படிப் பார்த்துக்கொண்டே வரும்போது, அது வரையிலும் மிகவும் இருண்டு கிடந்த சில இடங்களில் ஒளிகண்டு மாற்று உரைக்கு வழியும் தோன்றியது.

இப்படியாகச் சிறைச்சாலைக் குள்ளேயே சுமார் ஏழு மாதம் இரவுபகலாகச் சிந்தித்துப் பொருந்தாதவை என்று எண்ணப்பட்ட உரைகளுக்குள் பெரும் பகுதிக்கும் மாற்றுரைகளை எழுதி முடித்தேன். சிறை நீங்கியபின் மேலும் மேலும் ஆராய்ந்து திருக்குறள் முழுவதற்கும் 'புது உரை' ஒன்று எழுதி முடித்தேன். (அந்த உரை இப்போது அச்சாகிவிட்டது.) சிறை நீங்கிய பின் எழுதப்பட்ட முழு உரையும் உருவாவதற்கு முன்னால் இப்படி நான் திருக்குறளுக்கு முற்றும் புதிய முறையில் உரை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை என்னுடைய ஆசான் திரு. ஆனையப்ப முதலியாரிடம் சொல்லி அவருடைய ஆசியைப் பெறவேண்டு மென்ற ஆசை உதித்தது.

நான் சிறை புகுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே திரு. ஆனையப்ப முதலியார் தமது உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு, தமது சொந்த ஊராகிய மதுரைக்குப் போய்விட்டார். தமது கடைசிக் காலத்தைச் சிவ தரிசனத்துக்கு வசதியுள்ள ஒரு சிவதலத்திலேயே கழிக்க வேண்டுமென்று கருதித், தமது சொந்த ஊரையும் விட்டு மேலைச் சிதம்பரமாகிய பேரூரிலேயே குடி புகுந்து விட்டார்.

நான் அவரைத் தேடிக்கொண்டு பேரூருக்குப் போனேன். நான் போனநேரம் பகல் பதினொரு மணி இருக்கும். அப்போது அவர் உச்சிக்கால தரிசனத்துக்காக கோயிலுக்குப் போயிருந்தார். கோயிலுக்குப் போனால் ஒவ்வொரு சந்நிதியிலும் நின்று கண்களை மூடிக்கொண்டு மெய்மறந்து தோத்திரம் செய்வது வழக்கம். அதனால் கோயிலில் அவரைச் சந்தித்து அவருடைய வழிபாட்டுக்கு இடையூறு செய்யக் கூடாதென்று, நான் அவர் குடியிருந்த வீட்டிலேயே காத்துக் கொண்டிருந்தேன். வெகு நேரம்

சென்றபின் அவர் வந்தார். திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்த நான் அவர் வருவதைக் கண்டு எழுந்து அவருக்கு முன்னால் சென்று நின்று வணங்கினேன். என்னைப் பார்த்ததும் அவர் தாவிக்கொண்டு வந்து, "யார்? ராமலிங்கமா? அப்பனே வா, வா, வா. எப்போது வந்தாய்?" என்று தம்முடைய கையிலிருந்த புஷ்பம், குங்குமம், விபூதி, பழங்கள் முதலிய கோயில்பிரசாதங்களை என்னிடம் தந்து, என்னைத் தம்முடலோடு அணைத்துவிட்டுத் திண்ணையில் அமரச் செய்து நெடுநேரம்வரை என்னுடைய சேமலாபங்களையும், நான் சிறைபுகுந்ததையும நாமக்கல்லிலுள்ள தம்முடைய பல நண்பர்களையும் பற்றி விசாரித்தார். அது முடிந்ததும் "அப்பனே, கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனம் செய்துவிட்டு வா, சாப்பிடலாம்'' என்றார். எனக்குப் பக்தி இருந்ததோ இல்லையோ, அவர் பணித்ததற்காக உடனே கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு வந்தேன். நான் திரும்பி வருவதற்குள் அவர் தமக்காக ஆக்கப்பட்டிருந்த சாதாரண ஆகாரத்தோடு, பக்கத்திலிருந்த கடைகளிலிருந்து பலவித பட்சணங்களையும் பழங்களையும் வாங்கி எனக்கு விருந்து தயார்செய்திருந்தார். அந்த விருந்தைத் தயார் செய்யக் காலம் வேண்டுமென்பதற்காகத்தான் என்னைக் கோயிலுக்குப் போய்வரச் சொன்னாரோ என்றுகூட எண்ணும்படி இருந்தது.

உணவருந்திவிட்டு மீண்டும் திண்ணைக்கு வந்து அமர்ந்தோம்.

"அப்பனே, அலுப்புத் தீரக் கொஞ்சம் உறங்குகிறாயா?'' என்றார்.

"எனக்கு அலுப்பு ஒன்றுமில்லை. தங்களைத் தரிசித்துத் தங்களுடைய ஆசி பெற்றுக்கொண்டு உடனே திரும்பிவிட எண்ணித்தான் வந்தேன்.'' என்றேன்.

"நீ எங்கிருந்தாலும் எதைச் செய்தாலும் என்னுடைய ஆசிகள் உனக்கு எப்போதும் உண்டு. அதைக் கேட்கவும் வேண்டுமா?" என்றார்.

"அது எனக்குத் தெரியும். நான் இப்போது ஒரு புது முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். அதற்குத் தங்களுடைய ஆசியைப் பெறவே இங்கே வந்தேன்" என்றேன்.

"அந்தப் புது முயற்சி என்ன?" என்றார்.

"திருக் குறளுக்கு ஒரு புது உரை எழுதி யிருக்கிறேன்."

"திருக்குறளுக்குப் புது உரையா? ரொம்பச் சந்தோஷம். புது உரை என்றால், எப்படி?" என்று மகிழ்ச்சியோடு கேட்டார்.

"திருக்குறளுக்குச் சரியான உரையே இப்போது இல்லை. அதனால் முற்றும் புதிய முறையில் ஓர் உரை எழுதியிருக்கிறேன்" என்றேன்.

"திருக்குறளுக்குச் சரியான உரை இல்லையா? என்ன அப்பனே, ஏன், பரிமேலழகர் உரைக்கு என்ன?" என்றார்.

"பரிமேலழகர் உரை பல இடங்களில் அறிவுக்குப் பொருந்துவதாக இல்லையே!" என்றேன்.

உடனே, சிரித்துக்கொண்டிருந்த அவர் முகம் சிறுத்து விட்டது.

"பரிமேலழகர் உரை அறிவுக்குப் பொருந்தினதல்லவா! சிவ சிவா! அப்பனே, ராமலிங்கம்! இந்த வார்த்தை நீ சொல்லக்கூடாது 'அது பாவம்" என்று சற்றே கடுத்த குரலில் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக்

கொண்டார், நான் திடுக்கிட்டுப் போனேன். ஆனையப்ப முதலியாருக்குக் கோபம் வருவது மிகவும் அபூர்வம். அப்படி எப்போதாவது வந்துவிட்டால் உடனே பேச்சை நிறுத்தி விட்டுச் சற்று நேரம் தலையைக் கவிழ்த்துக் கொண்டு மௌனம் சாதிப்பார். அது சினத்தை அடக்கு வதற்கு அவர் கையாண்ட உபாயம்.

அப்படிச் சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு மெது வாக என் பக்கம் திரும்பி, "அப்பனே, அவசரப்பட்டு உன் னைக் கடிந்துவிட்டேன். பொறுத்துக்கொள். ஆனால் பரி மேலழகர் உரை அறிவுக்குப் பொருந்தாதது என்று உன் வாயில் வரக்கூடாது. நீ மிக நல்ல பிள்ளை. உனக்கு வேண்டாம் அந்தப் பாவம். பரிமேலழகர் நம்முடைய வணக்கத்திற்குரிய மிகமிகப் பெரியவர். நெடுங்காலமாகத் தமிழில் தலைசிறந்த அறிஞர்கள் அனைவரும் சிரமேற் கொண்டு பாராட்டிவரும் அவருடைய உரைக்குப் பழுது சொல்லுதல் பாவம், அப்பனே !" என்றார்.

அதற்குச் சரியான பதில் சொல்லச் சிறிது நேரம் ஆலோசனை செய்துவிட்டு, "ஐயா, பரிமேலழகர் வணங்கத் தகுந்த மிக மிகப் பெரியவரே. மற்றெல்லா உரைகளிலும் அவருடைய உரைதான் மிகவும் சிறந்தது. அவரை அவ மதிக்க வேண்டுமென்ற அகந்தை கொண்டு நான் அப் படிச் சொல்லவில்லை. ஆனால் மிகச் சிறந்த உரையாசிரிய ரானபரிமேலழகருங்கூடத்திருவள்ளுவருடைய கருத்தைக் கண்டறிய முடியாமல் சில இடங்களில் மிகவும் தவறான உரை செய்திருக்கிறார் என்பது என் தீர்மானம்" என்றேன்.

"அப்பனே, அவசரப்பட்டு அப்படித் தீர்மானம் செய்து விடக் கூடாது. அவர் கண்டறிய முடியாத திருவள்ளுவ ருடைய கருத்தை நாம் என்ன கண்டுவிட்டோம்?" என்றார்.

"ஆம், ஐயா; அதைத் தான் நான் சொல்லுகிறேன். அவர் கண்டறியாத ஒன்றை நான் காணக்கொடுத்து வைத்தேன். அதனால்தான் இந்தத் தீர்மானத்துக்கு வந்தேன்" என்றேன்.

"அவர் காணாத எதை நீ கண்டுவிட்டாய்?" என்றார்'

"மகாத்மா காந்தியடிகள் நடத்துகிற சத்தியாக்கிரகத்தை" என்றேன்.

"அபபனே, இது என்ன பேச்சு? மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகத்துக்கும் பரிமேலழகர் உரைக்கும் என்ன சம்பந்தம்?" என்றார்.

"மகாத்மா காந்தி இப்போது நடத்துகிற சத்தியாக்கிரகத்தையும், அவரைப்போன்ற சுத்த சத்தியாக்கிரகியின் பெருமையையும் துளிக்கூட வித்தியாசமில்லாமல் அப்படியே சொல்லி யிருக்கிறார் வள்ளுவப் பெருமான். பரிமேலழகர் காந்தியைப்போன்ற ஒரு சத்தியாக்கிரகியைக் காணப் பெறாதவராதலால் அந்தக் குறள்களுக்குச் சரியான பொருள் சொல்ல முடியாமற் போய்விட்டது" என்றேன்.

இதைக் கேட்ட ஆசான் தம்முடைய கண்களைச் சுருக்கி ஆலோசனையில் ஆழ்ந்துவிட்டார், ஆனையப்ப முதலியார் மிகத் தீவிரமான காந்தி பக்தர். கதர் இயக்கம் ஆரம்பித்தது முதல் கதரைத் தவிர வேறு ஆடை கட்டுவதில்லை. காந்தியைப் பற்றியும் சத்தியாக்கிரகத்தைப் பற்றியும் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னதைக் கேட்டுத் திகைத்தார், திருக்குறளில் எந்த இடத்தில் சத்தியாக்கிரகத்தைப் பிணைத்துச் சொல்ல முடியும் என்பதைத் தமக்குள்ளேயே எண்ணிப் பார்ப்பவர் போலத் தமது வலக்கையின் ஆள் காட்டி விரலை நெற்றியில் அழுத்திக்கொண்டு சிறிது நேரம் சும்மா இருந்தார். பிறகு என்னைப் பார்த்துச் சிரித்தார்,

"அப்பனே, திருக்குறளில் சொல்லப்பட் டிருக்கிற உயர்ந்த பண்புகளுக்கு மகாத்மா காந்தியை உதாரணமாகச் சொல்லுவது ஒக்கும். ஆனால் மகாத்மா இப்போது நடத்துகிற சத்தியாக்கரத்தைத்தான் வள்ளுவர் சொல்லியிருக்கிறார் என்று சொல்வது மிகை. அது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதைப் போல் இருக்கிறது" என்றார்.

"இல்லை ஐயா; இப்போது மகாத்மா நடத்துகிற சத்தியாக்கிரகத்தைப் பற்றியேதான் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்" என்றேன்.

"அப்படியா! திருக்குறளில் எந்த அதிகாரத்தில் சத்தியாக்கிரகத்தைப் பற்றிச் சொல்லப் படுகிறது? சொல்" என்றார்.

" 'சத்தியாக்கிரகம்' என்ற பதம் திருக்குறளில் இல்லைதான்; இருக்கமுடியாது. அது மகாத்மா காந்தி உண்டாக்கிய ஒரு புதுச்சொல். அதுவும் வடமொழிச் சொல். ஆனாலும் அந்தச் "சத்தியாக்கிரகம்" என்ற பதத்துக்கு நேரான ஒரு தமிழ்ப் பதத்தால் குறிப்பிட்டு, ஓர் அதிகாரம் முழுதும் இப்போது காந்தி மகான் நடத்துகிற சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தையே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதாவது: நல்ல காரியத்தைச் செய்து முடிக்க மன உறுதி வேண்டும் என்றும், அப்படி உறுதியோடு செய்யும்போது தாம் பிறருக்கு ஒரு தீங்கும் செய்யாமலிருக்க வேண்டும் என்றும் தமக்குப் பிறர் செய்தால் அதற்குத் தளர்ந்துவிடாமல் தீமையை எதிர்த்துப் போராட வேண்டும் என்றும், வெற்றிபெறும வரை அந்த நல்ல காரியத்தையும் கொண்ட கொள்கைகளையும் விடாப்பிடியுடன் செய்ய வேண்டுமெனறும், அப்படிப்பட்ட மன உறுதியுடைய பெரியோர்கள் எண்ணிய நல்ல காரியத்தை எண்ணியபடியே செய்து

முடிப்பார்கள் என்றும், அப்படிப்பட்ட மகான்கள் உருவத்தில் சிறியவர்களாகவும் கவர்ச்சியற்ற வடிவமுள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்றும், ஆனால் அவர்கள் தாம் உலக தர்மங்கள் அடங்கிய தேருக்குக் கடையாணி போன்றவர்கள் என்றும், நிச்சயமான நல்ல காரியம் என்று தாம் மேற்கொண்ட பணியை ஓய்ந்து விடாமல் செய்வார்கள் என்றும், எத்துணை துன்பம் வந்தாலும் சகித்துக் கொண்டு நல்ல காரியத்தைச் சாதிப்பார்களென்றும், எல்லாவற்றிற்கும் மேலாக அத்தகைய பெரியார்கள் தம்முடைய நல்ல காரியத்தைச் செய்து முடிக்க அரசனையும் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவார்கள் என்றும் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத்தான் மகாத்மா செய்கிறார். மேலும்......" என்று சொல்லி முடிக்குமுன் என்னுடைய ஆசான், 'அப்பனே! உன் பேச்சு அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் இதெல்லாம் திருக்குறளில் எங்கே சொல்லப்பட்டிருக்கிறது? மற்றதெல்லாம் இருந்தாலும் 'அரசனையும் எதிர்த்துப் போராடுவார்கள்' என்று ஒரு குறளிலும் சொல்லப்படவில்லையே!" என்றார்.

"ஐயா, அதைத்தான் சொல்ல வந்தேன். அரசனையும் எதிர்த்து அவனால் ஏற்படும் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு நல்ல காரியத்தைச் சாதித்தவர்கள் உண்டு. அப்படிப்பட்ட மன உறுதியுள்ளவர்கள் போற்றத் தகுந்தவர்கள் என்று சொல்லவே வள்ளுவப் பெருமான் ஒரு குறள் சொல்லுகிறார். அதைச் சரியானபடி பொருள் செய்துகொள்ள......"

"சரி சரி, அந்த ஒரு குறளை மட்டும் சொல்லு" என்று இடைமறித்தார்.

"சொல்லுகிறேன். நான் இதுவரைக்கும் சொன்னதெல்லாம் 'வினைத்திட்பம்' என்ற அதிகாரத்தின் கருத்

துரை. அரசனையும் எதிர்த்து அவனால் ஏற்படும் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு தம்முடைய கொள்கையில் வெற்றி காண்பார்கள் என்ற பொருள்கொண்ட அந்த ஒரு குறளும் அந்த அதிகாரத்தில் உள்ளதே. அந்தக் குறளாவது :

**வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி யுள்ளப் படும்'**

என்பது, இந்தக் குறளுக்கு என்ன உரை செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்'' என்று நான் கொண்டு போயிருந்த திருக்குறள் பரிமேலழகர் உரையுடனிருந்த புத்தகத்தை ஆசானிடம் நீட்டினேன்.

அவர், ''நீயே சொல்லு'' என்றார்

''இந்தக் குறளுக்குப் பரிமேலழகர், 'எண்ணத்தாற் சிறப்பெய்திப் பிற இலக்கணங்களாலும் மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத் திட்பம், வேந்தன்கண்ணே உறுதலையெய்தலான், எல்லாராலும் நன்கு மதிக்கப்படும்' என்று பொருள் செய்திருக்கிறார். 'வினைத் திட்பம்' என்பது மேற்கொண்ட காரியத்தில் உறுதி' என்ற பொருளில், சொல்லப்பட்டது. இந்த அதிகாரத்தின் நோக்கத்திற்கும் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிற மற்றக் கருத்துகளுக்கும் இந்த உரை துளியாவது பொருந்துகிறதா என்பதைப் பாருங்கள். அது மட்டுமல்ல; இந்தக் குறளில் உள்ள பதங்கள் இப்படி உரை கொள்ள இடம் தருகின்றனவா என்பதையும் சிந்தியுங்கள். இதிலுள்ள, வேந்தன்கண் ஊறெய்தி' என்ற சொற்றொடருக்கு, 'வேந்தன் கண் உறுதலையெய்தலான்' என்று பொருள் செய்து, 'உறுதலை' என்பதற்கு விளக்கமாக, 'செல்வமும் புகழும் அடைதல்' என்று பொருள் செய்கிறார். ஐயா, 'ஊறு

என்ற பதத்திற்கு எப்படியெல்லாம் முயன்ருலும் 'செல்வம்' 'புகழ்' அல்லது 'ஊதியம்', 'வெகுமதி' என்பன போன்ற பொருள் கொள்ள முடியுமா?'' 'ஊறு என்பதற்கு 'இடையூறு' துன்பம், நோய், உடலில் உறுத்தல்,' என்பனவற்றைத் தவிர வேறு பொருள் கொள்ளவே முடியாது ஆகையினுல் வேந்தன்கண் ஊறு எய்தி' என்பதற்கு, 'வேந்தனிடத்தில், துன்பம் அடைந்து' என்றுதான் பொருள் கிடைக்கிறது, 'அரசனிடத்தில் துன்பம் அடைந்து' என்பதை தாம் கலங்காது நல்ல காரியம் என்று கண்ட சுதந்தர முயற்சியை முறியடிக்க முயலும் ஆங்கிலேய அரசாங்கத்தால் பல துன்பங்களை அடைந்தும் விடாப்பிடியுடன் வினைத்திட்பம் காட்டுகின்ற மகாத்மா காந்தியைப் போன்ற 'உருள் பெருந்தேர்க் கச்சாணி யன்னுரை'க் காணுத பரிமேலழகர் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனுல்தான் 'ஊறு' என்ற பதத்துக்கு இல்லாத அர்த்தத்தைக் கற்பித்து உரையை ஒப்பேற்ற வேண்டியிருந்தது'' என்றேன்.

கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்த ஆசான் சற்றே புன்முறுவல் காட்டி விருப்பும் வியப்பும் கலந்தமாதிரி என்னை உற்றுப் பார்த்துவிட்டு, மறுபடியும் தமக்குள்ளே சிந்தனை செய்வதுபோலச் சிறிதுநேரம் கண்களை மூடிக்கொண்டிருந்துவிட்டுத் திருக்குறள் புத்தகத்தை விரித்து, 'வினைத் திட்பம்' என்ற அதிகாரத்திலுள்ள குறிப்பிட்ட இந்தக் குறளையும் அதற்குச் சொல்லப்பட்டிருக்கிற பொருளையும் பலமுறை படித்துப் பார்த்துவிட்டு. ''சரி, இதற்கு நீ எப்படிப் பொருள் செய்திருக்கிருய்?'' என்ருர்.

''சொல்லுகிறேன். இந்த 'வினைத் திட்பம்' என்ற அதிகாரம், நல்ல காரியத்தை விடாப் பிடியுடன் செய்து முடிப்பதற்கு வேண்டிய மன உறுதியையும், அப்படிப்பட்ட மன உறுதியுடன் காரியத்தைக்கொண்டு செலுத்தும்

பெரியவர்களையும் பற்றித்தான் சொல்லுகிறது. இங்கே 'அமைச்சர்' என்ற பதத்துக்கு வேலையில்லை. ஏனெனில் அமைச்சர்கள்' என்பவர்கள் 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்ற சொற்றொடருக்கும் உரியவர்கள் அல்ல. 'உருள் பெருந்தேர்க் கச்சாணி' என்னத் தகுந்தவரும் அல்லர். இந்த அடைமொழிகள், 'எண்ணியது எண்ணி யாங் கெய்தும் திண்ணியரை'த்தான் சேரும். அப்படிப் பட்ட திண்ணியர் எவ்வளவு துன்பம் நேரிட்டாலும் தளர்ந்துவிடாமல் துன்பங்களை எதிர்த்து வெல்லுவார்கள். சாதாரண மனிதர்கள் செய்யக்கூடிய துன்பங்களைவிட ஓர் அரசன் தன்னுடைய அதிகார பலங்களோடு செய்யும் துன்பங்கள் பொறுக்கத் தகாதனவாகவும் இருக்கும். அப்படி ஓர் அரசன் செய்யக்கூடிய துன்பங்களையும் வென்று சிறப்படையும் மகான்கள் உண்டு. அவர்களுடைய வினைத் திட்பம் என்றென்றும் மக்களால் போற்றப்படும் என்பதுதான் இந்தக் குறளின் பொருள்."

"அது சரி; அதற்கு நீ எப்படிப் பதங்களைப் பிரித்துப் பொருள் சொல்லுகிறாய்?" என்றார்.

"அதைச் சொல்லுகிறேன், 'வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க ணூறெய்தி யுள்ளப்படும்' என்பதை, 'வேந்தன் கண்ஊறு எய்தி வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் உள்ளப்படும்' என்று கொண்டு பொருள் செய்தால் சரியான பொருள் கிடைக்கிறது. அதாவது அரசனிடத்தில் (அவன் தன் அரச பலத்தைக்கொண்டு செய்கிற) துன்பத்தை(யும்) அடைந்து வெற்றிபெற்று மாட்சிமை யடைந்தவர்களுடைய வினைத்திட்பம் (உலக மக்களால்) போற்றப்படும்" என்றேன்.

உடனே கலகலவென்று சிரித்துவிட்டு, "அப்பனே, வெகு சாமர்த்தியமாகச் சித்திரிக்கிறாய்" என்றார்.

"ஐயா! இது நான் சித்திரிப்பதல்ல. இது வள்ளுவரின் சித்தம். அவர் இந்தப் பொருளைத்தான் எண்ணியிருக்க வேண்டும்" என்றேன்.

"நீ சொல்லுகிற உரை பொருத்தமாகத்தான் இருக்கிறது. இப்படிப் பொருள் கொள்வதிலும் குற்றமில்லை" என்றார்.

"குற்றமில்லை என்பதற்காக இதைக் கொள்வதில் பயனில்லை. இதைத் தவிர வேறு உரை செய்வது குற்றமுள்ளதாக முடிகிறது என்பதைக் கருத வேண்டாமா?" என்றேன்.

"ஆமாம்...... ஆனால்...... திருவள்ளுவர் கருத்து இதுதானா என்பதை ஆராயவேண்டும்" என்றார்.

"திருவள்ளுவர் கருதியது இதுதான் என்பதை அந்த அதிகாரத்திலுள்ள மற்றக் குறள்கள் வலியுறுத்துகின்றன. அது எப்படி இருந்தாலும் பரிமேலழகர் செய்திருக்கிற உரை ஒரு சிறிதும் பொருந்தாது" என்றேன்.

"சரி, இப்படி மாற்றி உரை செய்திருக்கிற வேறு குறள்களும் உண்டா?"

"பல இருக்கின்றன" என்று நான் எழுதிய பது உரைக் குறிப்புப் பிரதியைக் காட்டினேன். அவற்றில் சிலவற்றைச் சொல்லச் சொன்னார். நான் சொன்னேன். (அவற்றிற் சில ஏற்கனவே வெளியாகியுள்ளன.) அவற்றையும் கேட்டபின் என்னை மிகவும் பாராட்டினார். மாலை சிற்றுண்டி அருந்தச் செய்து வாழ்த்தி வழியனுப்பினார்.

# தமிழன் கண்ட அரச நீதி

அரச நீதியைப்பற்றித் திருவள்ளுவர் அரசியல் பகுதியில் செங்கோன்மை', கொடுங்கோன்மை' 'வெருவந்த செய்யாமை' என்ற மூன்று அதிகாரங்களில் மிகவும் தெளிவாகச் சொல்லுகிருர். இந்த மூன்று அதிகாரங்களிலும் உள்ள முப்பது குறள்களேயும் அவற்றிலுள்ள பதப் பிரயோகங்களேயும் அவற்றின் அமைப்பையும் சாதாரண அறிவு கொண்டு பார்த்தாலும் திருவள்ளுவர் சொல்லுகின்ற 'தண்டம்' என்ற அரச நீதி எவ்வளவு மனிதப் பண்பும் ஜீவகாருண்யமும் நிறைந்ததாக இருக்கிறதென்பது விளங்கும். அத்துடன் அரசநீதியிலும் தாட்சணியம் காட்ட வேண்டுமென்று நினைப்பூட்ட 'கண்ணோட்டம்' என்ற அதிகாரத்தை அடுத்ததாக அமைத்திருக்கிருர். இப்படி, அரச நீதி கருணையும் கண்ணோட்டமும் உள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே முப்பது குறள்கள் சொல்லப்பட்டிருக்கிற திருக்குறளில் 'செங்கோன்மை' என்ற அதிகாரத்திலேயே மிகவும் 'கடுங்கோன்மை'க்கான உரைகளேப் பரிமேலழகர் சொல்லுகிருர். அது திருவள்ளுவர் கருதுகின்ற தமிழ் மரபுக்கு எவ்வளவு ஒவ்வாததாக இருக்கிறது பாருங்கள்.

**குடிபுறங் காத்தோம்பி குற்றங் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்**

என்பது 'செங்கோன்மை' என்ற அதிகாரத்தின் ஒன்பதாவது குறள். இந்தக் குறளின் கருத்து ; குடிமக்களேக் காப்பதற்காக அவர்களுக்குத் தீங்கு செய்யும் குற்றவாளிகளே அரசன் தண்டிப்பது குற்றமல்ல. அது அவன் செய்ய

வேண்டிய வேலை—என்பது. இந்தக் குறள் குற்றவாளி களை அரசன் தண்டிக்கவேண்டும் என்பதை மட்டும்தான் சொல்லுகிறது. இதற்குப் பரிமேலழகர் சரியான உரை தான் சொல்லுகிறார். அத்துடன் 'அரசனுக்கு அவரை அக் குற்றத்தின் நீக்கித் தூயராக்குதலும சாதி தருமம் என்றார்' என்று குற்றவாளிக்குக் கருணையும் காட்டுகிறார் பரிமேலழகர். இந்தக் குறளுக்கு இப்படி உரைதந்த பரி மேலழகர் இதற்கடுத்த குறளில் வடமொழி சம்பிர தாயத்தை மனதிற்கொண்டு திருவள்ளுவர் கருத்துக்கு ஒருசிறிதும் ஒவ்வாத தண்டனைகளைச் சொல்லுகிறார். இதற்கடுத்த குறள் :

**கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்.**

என்பது. இந்தக் குறளிலுள்ள பதங்களின் அமைப்பை மாற்றாமல் 'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனோடு நேர்' என்ற சொற்றொடரை அப்படியே பொருள் செய்தால் 'கொலை செய்யும் கொடி யவர்களை வேந்தன் தண்டிப்பது பயிர்களிடையிலிருந்து களைகளை எடுப்பது போன்றது' என்றுதான் அர்த்தமா கிறது. 'ஒறுத்தல்' என்பதற்கு 'தண்டித்தல்', 'ஒடுக்குதல் 'வருத்துதல்' 'அழித்தல்' 'நீக்குதல்' என்ற பல பொருள் கள் உண்டு. இங்கே எந்தப் பொருளைக் கூட்டினாலும் பொருந்தும். கடைசி தண்டனையான 'கொன்றுவிடுதல்' என்பதைக் கூட்டினாலும் பொருந்தும். ஏனெனில் கொலை செய்தவனைக் கொன்றுவிடுவதில் குற்றமில்லை யென்பதும் அரச நீதிக்கு ஒத்ததுதான். ஆனால் கொலை செய்தவனை யும் கொல்லாமல் வேறு தண்டனை தரவேண்டிய சந்தர்ப் பங்களும் உண்டு என்பது உலக அனுபவம். அதனால் திருவள்ளுவர் கொலைசெய்த கொடியவனைக் கொல்லத்

தான்வேண்டும் என்றே பொருள் கொண்டுவிட இடமில் லாதபடி 'ஒறுத்தல்' என்ற பதத்தை அமைத்திருக்கிருர் அத்துடன் 'களையெடுப்பதைப் போன்றது' என்ற உப மானத்தால் களையைப் பயிர்களிடையேயிருந்து அப்புறப் படுத்துவது முக்கிய காரியமேயல்லாமல் அதைப் பிடுங் கின உடன் அதை அழித்துக்கொண்டிருப்பது காரியமல்ல பிடுங்கி எறியப்பட்ட களை பயிரில்லாத வேறு இடத்தில் விழுந்து உயிரோடிருந்து விட்டாலும் அதைப்பற்றி உழவன் கவலைப்படமாட்டான். அதனுல் 'ஒறுத்தல்' என்ற பதத் தாலும் 'களையெடுத்தல்' என்ற உபமானத்தாலும் இந்தக் குறளில் திருவள்ளுவர் 'கொலை செய்த கொடியாரைக் கொன்றுவிடத்தான் வேண்டும்' எனச் சொல்லவில்லை என்று ஊகிக்கவும் வாதிக்கவும் இடமிருக்கிறது. அந்த ஊகத்தை ஒப்புக்கொள்ளா விட்டாலும் இந்தக் குறளுக்கு "கொலைபாதகம் செய்த கொடியவரை அரசன் கொன்று விடுவது பயிர்களின் இடையேயுள்ள களையைப் பிடுங்கி விடுவதைப் போன்ற சரியான காரியம்தான்" என்றே பொருள் கொண்டாலும் அதற்கும் இடமிருக்கிறது. ஆனுல் அப்படியுங்கூடச் சொல்லாமல் பரிமேலழகர் இந்தக் குற ளுக்குச் சொல்லுகின்ற உரை மிகவும் விபரீதமாகவும் திருவள்ளுவர் அரச நீதியில் கருணையும் தாட்சண்யமும் இருக்கவேண்டும் என்பதற்காகவே மூன்று அதிகாரங் களில் சொல்லியிருக்கிற முப்பது குறள்களின் பயனை அழித்துவிடக் கூடியதாகவும் அமைந்திருக்கிறது. அவர் தரும் பதஉரையும் விசேட உரையும் பின்வருமாறு :

'வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்—அர சன் கொடியாரைக் கொலையின் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல்; பைங்கூழ் களைகட்டதனோடு நேர்—உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்ததனோடொக்கும்' —இது பத உரை. மேலும்.

'கொடியவரென்றது தீக்கொளுவார், நஞ்சிடுவார், கருவியிற்கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவார் என்று இவர் முதலாயினாரை. இவரை வடநூலார் அததாயிகள் என்ப. இப்பெற்றியோரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்களுககு அஞ்சாநின்ற பைங்கூழ் போன்று நலிவுபலவெய்தி உலகு இடர் படுதலின், கோறலும் அரசற்குச் சாதி தருமம் என்பதாயிற்று'— இது விசேட உரை.

குறள் மூலத்தின் 'கொலையின் கொடியாரை வேந்து ஒறுத்தல் என்ற சொற்றொடரை 'வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்' என்று மாற்றி அடுக்கிக் கொண்டது இந்தக் குறளின் இயல்புக்கும் இந்த அதிகாரத்தின் நோக்கத்துக்கும் முற்றிலும் விரோதமான விபரீதம். பின்னால் விசேட உரையில் சொல்லப்போகிற வடமொழி சம்பிரதாயத்தைத் திருக்குறளில் திணிப்பதற்காகவே இப்படிப் பதங்களை மாற்றி அடுக்கிக் கொண்டதாக எண்ணுவது மிகையல்ல.

விசேட உரையிற சொல்லுகிறபடி :—நெருப்பு வைப்பவர்கள், விஷம் கொடுப்பவர்கள், ஆயுதத்தால் கொலை செய்தவர்கள், திருடுகிறவர்கள், வழிபறிப்பவர்கள், கொள்ளையடிப்பவர்கள், பிறர் மனைவியின்மேல் ஆசை கொண்டவர்கள் என்ற இவர் முதலாயினாரைக் கருணை காட்டாமல் கொன்றுவிட வேண்டும் என்பது வடநூல் மரபாக இருக்கலாம். ஆனால் அதைத் தமிழ்நூல் மரபு ஒத்துக்கொள்ளாது. அதிலும் தமிழ் மரபுக்குத் தலைசிறந்த இலக்கியமாகிய திருக்குறள் அதைச் சிந்தையாலும் தீண்டாது. கொலை செய்தவனைக் கொன்றுவிட வேண்டும் என்று சொல்லவும் கூசுகின்ற திருவள்ளுவர் திருடிவிட்டவனையும் பிறன் மனைவிமீது ஆசைகொண்டு விட்டவனையும்

கூடத் தாட்சண்யம் காட்டாமல் கொன்று விடத்தான் வேண்டும் என்று சொல்லியிருப்பதாக எண்ணச் செய்வது மிகவும் அநியாயம். நெருப்பு வைப்பது, விஷம் கொடுப்பது, கொலைக் கருவியால் கொல்லுவது, திருடுவது, வழிபறிப்பது, கொள்ளையடிப்பது, இன்னொருவன் மனைவியை இச்சிப்பது என்ற இந்த ஏழு குற்றங்களுள் மனிதன் செய்யக்கூடிய பெரும்பாலும் குற்றங்கள் அடங்கிவிடுகின்றன. மேலும் பரிமேலழகர் சொல்லுகிற 'இவர் முதலாயினாரை' என்ற சொற்களால் மற்ற குற்றங்களும் இவற்றோடு சேர்க்கப்படுகின்றன. அதனால் மனிதன் செய்யக்கூடிய எல்லாக் குற்றங்களுக்கும் கொலைத் தண்டனைதான் அரசன் செய்ய வேண்டிய நீதியாகி விடுகிறது. இது, வடநூல் மரபும் வருந்தத் தக்கது இந்த 'அததாயிகள் என்பவரைப்பற்றி வடநூல் மரபு எப்படியிருந்தாலும் :

**துளியின்மை ஞாலத்திற்கு எற்று அற்றே வேந்தன்**
**அளியின்மை வாழும் உயிர்க்கு .**

மழையில்லாமை உலகத்துக்கு எப்படியோ அப்படித்தான் அரசன் கருணையில்லாதிருப்பது அவன்கீழ் வாழும் கீழ் மக்களுக்கு என்றும்,

**ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணும் கண்ணோடிப்**
**பொறுத்தாற்றும் பண்பே தலை**

(தண்டிக்க வேண்டிய குற்றம் செய்தவர்களிடத்திலும் கூடப் பொறுமை காட்டிச் செயல் புரியும் குணமே மிகவும் சிறந்தது)—என்றும், இன்னும் இவைபோன்ற பல நீதிகளும் அரசனுக்கு அமையவேண்டும் என்று சொல்லுகின்ற திருவள்ளுவர் மேலே சொல்லப்பட்ட குற்றவாளிகளையெல்லாம் கொன்றுவிட வேண்டியதுதான் அரச நீதியென்று சொல்லியிருப்பாரா ?

எவ்வளவு பெரிய குற்றம் செய்திருந்தாலும் அக குற்றத்தைச் செய்யநேர்ந்த சூழ்நிலைகளில், குற்றவாளிக் குத் தாட்சணியம் காட்டவேண்டிய காரணங்கள் இருக் கின்றனவா என்று தீர ஆராய்ந்த பின்பே தண்டனை விதிக்க வேண்டும் என்பதுதான் நாகரிகமான அரசநீதி. அப்படி ஆராயவேண்டு மென்பதற்காகத் தான் திருவள்ளுவர் அரச தண்டனையைப்பற்றி முப்பது குறள்கள் தந்திருக் கிறார். அப்படி ஆராயாமல் பசிக்கொடுமையினால் திருடி விட்டவனையும் காமக் கொடுமையினால் பிறன் மனைவி மேல் ஆசைகொண்டு விட்டவனையும்கூடக் கொன்று விடத்தான் வேண்டுமென்பது மிகவும் அநாகரிகமானது.

# வள்ளுவர் வகுத்த இல்லறம்

'வள்ளுவர் வகுத்த இல்லறம்' என்றால், மற்றவர்கள் வகுத்த இல்லற முறைகள் இருப்பது போலவும் அவற்றிற்கு வேறுபட்டதாகத் திருவள்ளுவர் வகுத்த இல்லற முறை ஒன்றைப்பற்றி இங்கே சொல்லப்படுவது போலவும் தோன்றலாம். அல்லது வள்ளுவர், அவருடைய திருக்குறளில் சொல்லியிருக்கிற மற்றப் பகுதிகளை விட்டு அவர் வகுத்துள்ள இல்லறப் பகுதியைப் பற்றி மட்டும் சொல்லுவதற்காக 'வள்ளுவர் வகுத்த இல்லறம்' என்று இக்கட்டுரைக்குப் பெயரிடப்பட்டிருப்பதாகவும் தோன்றலாம். ஆனால் இந்தக் கட்டுரையின் நோக்கம் இந்த இரண்டுமல்ல. பின்னென்னவெனில் வள்ளுவர் தான் இல்லறம் வகுத்தார் என்பதையும், இல்லறம் ஒன்றைத்தான் வள்ளுவர் வகுத்தார் என்பதையும் காட்டுவதே இக்கட்டுரையின் நோககம்.

வள்ளுவர்தான் இல்லறம் வகுத்தார் என்பது எப்படியெனில் : இல்லறத்தானுக்கு வேண்டிய எல்லா நல்லறிவுகளையும் தொகுத்துச் சொல்லுகிற நூல் திருக்குறள் ஒன்றுதான். இதை விளக்குவோம் : குடும்பத்துக்கும், சமுதாயத்துக்கும், ஊர்ப் பொதுவுக்கும், நாட்டுக்கும் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களிலும் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு மனிதரும்–(ஆணும் பெண்ணும்)–இல்லறம் நடத்துகிறவர். உலக வாழ்க்கைக்கான எல்லாத் துறைகளும்

இல்லறத்தைச் சேர்ந்தவை. மக்கள் உற்பத்தியாவது இல்லறத்தால்; சமுதாயம் நடப்பது இல்லறத்தால்; விவசாயம் நடப்பது இல்லறத்தால்; வியாபாரம் நடப்பது இல்லறத்தால்; ஊரின் பொதுநலம் இல்லறத்தால்; நாடு நாடாக இருப்பது இல்லறத்தால்; நாட்டைக் காப்பதும் இல்லறமே; அரசு நடப்பது அதற்கென்றே. மனித வாழ்க்கைக்கான இத்தனைத் துறைகளிலும் இருக்க வேண்டிய எல்லா நல்லறிவையும் திரட்டித் தெளிவாக வடித்துக் கொடுத்தவர் வள்ளுவர் ஒருவரே. திருக்குறளிலுள்ள எல்லா அறிவுகளையும் தனித்தனியே அங்கங்கே வெவ்வேறு இதர நூல்களிலும் காணலாம். ஆனால் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா நல்லறிவுகளையும் ஒரே நூலில் மற்றெவரும் சொல்லாத முறையில் வகுத்துக் கொடுத்தவர் வள்ளுவர் தான். தமிழில் மட்டுமல்ல; உலகிலுள்ள எந்த மொழியிலும் இதற்கு இணையான நூல் இல்லை யென்பது, ஆராய்ந்த அறிஞர்கள் அனைவரும் ஒரே முகமாகச் சொல்லும் உண்மை.

இனி 'இல்லறம் ஒன்றைத்தான் வள்ளுவர் வகுத்தார்' என்பது என்னவெனில், திருக்குறள் எழுதப் பட்டதே இல்லறத்துக்காகத்தான். மனிதன் கடைப்பிடிக்க வேண்டுமென்ற உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படுகிற நான்கும் என்பது நூல்களின் துணிபு. அறம் என்பது வாழ்க்கைக்கான நல்ல காரியங்களைச் செய்யவேண்டிய கடமை. பொருள் என்பது வாழ்க்கைக்கு அத்யாவசியமான பொருள்களைத் தரக்கூடிய செல்வம். இன்பம் என்றது ஆணும் பெண்ணும் கலந்து அனுபவிக்கும் காம இன்பம். வீடு என்பது உலக வாழ்க்கை முடிந்து, உயிர் (ஆன்மா) உடலை விட்டுப் பிரிந்தபின் போய்ச் சேரவேண்டும் என்று விரும்

படுகிற மோக்ஷம். 'வீடு' என்ற சொல்லுக்கு 'விடு தலை' என்பது பொருள் அதாவது, மனிதனுடைய உடலில் சிறைப்பட்டு உலகத் துன்பங்களில் உழன்றுகொண்டிருந்த ஆன்மா அதனின்றும் விடுதலையடைந்து மறுபடியும் உடலிற் சிக்கிக் கொள்ளாத ஒரு நிலையைச் சேரவேண்டும் என்று நம்பப்படுகிற குறிக்கோள். ஆம், முக்தி, மோட்சம், பேரின்பம் என்று பல பெயர்களால் சொல்லப்படுகிற இந்த 'வீடு' என்பது வெறும் நம்பிக்கைதான். புலன் களுக்கு ஒரு சிறிதும் எட்டாததாகி வெறும் அறிவுக்கு மட்டும் தட்டுப்படுகிற இந்த 'வீடு' என்ற நம்பிக்கை சொல்லாலும் எழுத்தாலும் நிரூபிக்க முடியாதது. அதை இல்லையென்று வாதிக்கின்றவர்களுக்குச் சமாதானம் சொல்வதும் எளிதான காரியமல்ல. மேலும் இந்த 'வீடு என்ற முக்தி நிலையைப் பற்றி வெவ்வேறு மதங்கள் வெவ் வேறு விதமாகச் சொல்லுகின்றன. ஆதலால், விளக்க முடியாததும் விவாதத்துக்கு இடமுள்ளதுமான 'வீடு' என்பதை விட்டுவிட்டு அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டும் திருவள்ளுவர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

விளக்க முடியாத விஷயமானதால் 'வீடு' என்பதைப் பற்றிய நம்பிக்கையை அவர் விட்டு விடவில்லை. நெடுங் காலமாகத் தமிழர்கள் போற்றிவரும் மெய்ஞ்ஞான நோக்கத்தையும் வீடு பெறும் நம்பிக்கையையும் அடிப் படையாகக் கொண்ட அறங்களை வகுத்திருக்கிறார். 'வீடு' என்ற நம்பிக்கையோடு நடத்தப்படுகிற வாழ்க்கையில் இரண்டுவித அற்புதங்கள் உண்டு. ஒன்று இல்லறம்; மற்றொன்று துறவறம். இல்லறம் என்பது மனைவி மக்க ளோடு வாழ்ந்து தெய்வ நம்பிக்கையோடும் கடமை உணர்ச்சியோடும் காரியங்களைச் செய்து, சமுதாயத்துக்குப்

பயன்படக் குடித்தனம் நடத்துவது. இல்லற வாழ்க்கையை முறையோடு நடத்தினுல், அது தானுகவே 'வீடு' என்று சொல்லப்படுகிற பேரின்ப நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

துறவறம் என்பது மனைவி மக்கள் ஆசையை விட்டொழித்து, ஆகாரங்களைச் குறைத்து, ஐந்து புலன்களையும் அடக்கி, உலக விவகாரங்களில் ஈடுபடாமல் எந்நேரமும் ஆன்ம சிந்தனையோடு தவம் செய்து, மீண்டும் பிறவியில்லாமலிருக்கும் நோக்கத்தோடு ஆசைகளில்லாமல் செய்து கொள்வது.

இந்த இரண்டு வழிகளில் இல்லறம் உலக நடையோடு ஒட்டி நடப்பது. துறவறம் உலக நடையினின்றும் விலகி நடப்பது. இல்லறம் மனிதப் பிறவியின் இயல்போடு சேர்ந்தது; துறவறம் மனித இயல்புக்கு மாறுபட்டது. இல்லறம் இல்லாவிட்டால் உலகத்தில் மனித சமுதாயம் இல்லை. துறவறமும் தோன்ருது. உலகத்தில் மிகப் பெரும்பகுதியான மனிதர்கள் மனைவி மக்களோடும் குடும்ப வாழ்க்கை நடத்துவதையே விரும்புகிறவர்கள். மிகச் சிறு பகுதியினரே மனைவி மக்கள் ஆசையை விட்டுவிடக் கூடியவர்கள்.

அதனுல் மனிதன் மேற்கொள்ள வேண்டியது இல்லறமே என்பது வள்ளுவருடைய வாக்கு. ஆனுலும் துறவறம் என்பது உண்மை, அதனை அவமதிக்கக்கூடாது என்பதும் வள்ளுவருடைய போதனை. ஆனுல் திருவள்ளுவர் இல்லறத்துக்குத்தான் முதன்மை தந்திருககிருர். துறவறத்துக்கு வேண்டிய முக்கியமான கொள்கைகளை 130 குறள்களில் சொல்லி முடித்துவிட்டு, மீதி 1200 குறள்களிலும் இல்லறத்துக்குத் தொடர்புடைய விஷயங்களையே சொல்லியிருப்பதிலிருந்து வள்ளுவர் இல்லறத்தைக் கருதித்தான்

தமது திருக்குறளை வகுத்திருக்கிறார் என்பது தெளிவாகிறது. வள்ளுவர் இல்லறத்துக்குத் தந்துள்ள சிறப்பைக் கீழுள்ள குறள் ஐயம் திரிபுகளுக்கிடமில்லாமல் காட்டுகின்றது.

**அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை: 'இருவகை அறத்தினும் நூல்களால் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; ஏனைத் துறவறமோவெனின், அதுவும் பிறனால் பழிக்கப்படுவதில்லையாயின், அவ்வில் வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று' என்பது.

இந்த உரை திருவள்ளுவருடைய கருத்தைச் சரியாகச் சொல்லுவதாக இல்லை. இக்குறளிலுள்ள 'அஃதும்' என்பதற்கு 'ஏனையத் துறவறமோவெனின் அதுவும்' என்பது, இயல்பான பொருளல்ல. வலிந்துகொண்ட பொருளாகிறது. 'பிறன் பழிப்பதில்லாயின் நன்று' என்பது துறவறத்துக்குமட்டும் தானா? இல்லறம் 'பிறன் பழிப்பதில்லாமல்' இருக்கவேண்டாமா? மேலும் 'பிறன்' என்பது யார்? என்ற கேள்விகளுக்கு இடமுண்டாகிறது?

'அஃதும்' என்பதற்கு 'அதுவும்'—அல்லது 'அதுவானாலும்'—என்பதுதான் நேரான பொருள். இந்தச் சொல்லில் துறவறத்தானைச் சேர்ப்பது சரியல்ல. இல்லறத்தானைச் சொல்லிவிட்டு அடுத்தாற்போல் 'பிறன்' ஆகிய துறவறந்தான் என்று பொருள் கொள்வதுதான் சரியானது. அதனால் இந்தக் குறளுக்குச் சரியான பொருள் என்னவென்றால்:

அறன் என்று சொல்லப்படுவதே இல்வாழ்க்கைதான்; ஆனாலும் பிற அறத்தானாகிய துறவறத்தானை

இகழ்ந்து விடாமல் இருப்பது நல்லது என்பதே. அதாவது மனிதருக்கு அறம் என்று சொல்லப்படுவதே இல்லறம் தான்; ஆனாலும் துறவறமும் உண்டு. அதைக் குறை வாக எண்ணிவிடக்கூடாது. 'ஆனாலும் என்ற வார்த்தை போட்டு முன்சொல்லப்பட்டதன் வேகத்தைக் குறைக் கிறார். முன்னால் சொன்னது 'அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை' என்பது. 'ஏ' காரத்தால் 'இல்வாழ்க்கைதான் அறம்' அறம் என்பது வேறொன்றுமில்லை; என்பதுபோலச் சொல்லிவிட்டதால் உடனே துறவறத்தை நினைப்பூட்டி அதை இல்லறத்தான் குறைவாக எண்ணிவிடக்கூடாது என்று எச்சரிக்கிறார்.

துறவறம் மேற்கொள்ளுவது, பிறவிப் பிணியினின்றும் விடுதலையடைந்து இறைவனாகிய தெய்வத்துடன் கலந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடுதான். உலக இன்பங்களையெல்லாம் வெறுத்து, உடலை வாட்டி, ஐம் புலன்களை அடக்குவதற்குப் பலவிதத் துன்பங்களைச் சகித் துக் கொண்டு, தெய்வத்தோடு கலந்துகொள்ளவென்று முயலவேண்டிய கஷ்டங்கள் இல்லாமலேயே பேரின் பத்தை அடையலாம் என்று அடுத்த குறளில் அழுத்த மாகச் சொல்லுகிறார்:

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர், திருவள்ளுவரின் கருத் துக்கு ஒவ்வாத உரை செய்திருக்கிறார்.

இதற்குப் பரிமேலழகர் தரும் உரை: இல்லறத்தோடு கூடி வாழுமியல்பினால் வையத்தின்கண் வாழ்பவன், வையத்தானேயெனினும் வானின்கண் உறையும் தேவ ருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்'—என்பது.

இந்தக் குறளின் கருத்து இதுவல்ல. 'தெய்வம் என்ற பதம் கடவுள் ஒருவனைத்தான் குறிக்கும். தேவர்கள் தெய்வமல்ல. மனிதர்களைவிட தெய்வத்தன்மை அதிகம் உள்ளவர்கள் என்று கருதப்படுவதால் தேவர்களுக்கு அப்பெயர் சொல்லப்படுகிறது ஆதலால் 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்பதற்கு 'தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்' என்பது பொருளல்ல. 'நன்கு மதிக்கப்படும்' என்றால் யாரால் நன்கு மதிக்கப்படுவது? மனிதர்களாலா, தேவர்களாலா? எப்படியாயினும் வள்ளுவர் கருத்து இதுவல்ல என்பது இந்த அதிகாரத்திலுள்ள மற்றக் குறள்களால் தெரியக் கிடக்கின்றது.

இந்தக் குறளுக்கு வள்ளுவர் கருதும் பொருள் என்னவெனில்; உலகத்தில் வாழவேண்டிய முறையில் வாழ்கின்றவன் வானத்திலுள்ள தெய்வத்தோடு சேர்க்கப்படுவான்—என்பதே. அதாவது இல்லறத்தைச் சரியான முறையில் நடத்துகின்றவன் அதற்கென்று வேறு முயற்சியில்லாமலேயே, பேரின்ப நிலையை அடைவான். அவனுடைய இல்லற ஒழுக்கமே அவனை அங்கே கொண்டு போய்ச் சேர்க்கும்—என்பதுதான் இத்தக் குறளின் கருத்து.

இந்தக் குறளுக்கு இதுதான் கருத்து என்பதை இதற்கு முன்னுள்ள

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவது எவன்**

என்ற குறள் உறுதிப்படுத்துகின்றது. இந்தக் குறளுக்குப் பரிமேலழகரின் உரைப்படியே: 'ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவானாயின் அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன்யாது?-

என்பது. அதாவது ஒருவன் இல்லறத்தைச் சரியான முறையில் நடத்திஞல் துறவறத்துக்குப் போய் அடையக் கூடிய பயன் ஒன்றுமில்லை யென்பது. துறவறத்துக்குப் போகிற நோக்கம் எதுவோ அந்தப் பயனை இல்லறத்தைச் சரியாக நடத்துவதனாலேயே அடையலாம் என்பது கருத்து. இந்தக் கருத்தைப் பரிமேலழகரும் தமது விசேட உரையில் மிகவும் அழுத்தமாகச் சொல்கிருர். அந்த விசேட உரையில்: "புறத்தாறு—இல்லை விட்டு வனத்துச் செல்லுதல், அந்நிலையின் இது பயனுடைத்தென்பார். 'போஒய்ப் பெறுவதெவன்' என்ருர்" என்று துறவறத்துக்குப் போவதைவிட ஒழுங்கான முறையில் இல்லறம் நடத்துவதே பயனுடையது என்கிருர்.

துறவறத்துக்குப் போவதன் நோக்கம் இறைவனேடு சேரும் பேரின்ப நிலையைப் பெறுவது என்பதுதான். ஆகவே, 'இல்லறத்தைச் சரியாக நடத்திஞல் துறவறத்துக்குப் போகாமலேயே இறைவனேடு சேர்ந்துவிடும் பேறு பெற முடியும்' என்பதுதான் இந்தக் குறளின் கருத்து.

இந்தக் குறளில் இப்படிச் சொல்லிய திருவள்ளுவர் இதற்குப் பின்ஞல் வருகிற

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

என்ற குறளில் 'இல்லறத்தைச் சரியாக நடத்தி உலகத்தில் வாழவேண்டிய முறையில் வாழ்கின்றவன் வானத்திலுள்ள தேவர்களில் ஒருவஞக வைத்து நன்கு மதிக்கப்படும்' என்ற கருத்தைச் சொல்லியிருக்க முடியுமா? மேலும்,

**'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவது எவன்'**

என்ற குறளுக்கு அடுத்த குறள்:

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாரு ளெல்லாம் தலை**

என்பது. இதன் பொருள்: முறைப்படி இல்வாழ்க்கை நடத்துகின்றவன் என்பவன் நல்ல கதி அடையவேண்டுமென்று முயற்சி செய்கின்ற தவசிகளுள் சிறந்தவன் என்பது.

அத்துடன், இல்லறம் சுலபமானதென்று நினைப்பதோ சொல்லுவதோ சரியல்லவென்று கண்டித்துத் துறவறத்தைக் காட்டிலும் இல்லறத்துக்குத்தான் பொறுப்பும் சகிப்புத் தன்மையும் அதிகமாக உண்டு என்பதை அடுத்த குறளில் சொல்லுகிறார் :

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து**

இந்தக் குறள் மிகவும் முக்கியமானது. இதற்குப் பரிமேலழகருடைய உரை என்னவெனில் : தவஞ் செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப்பண்ணித் தானும் தன்னறத்தில் தவறாத இல்வாழ்க்கை, அத்தவஞ் செய்வார் நிலையிலும் பொறையுடைத்து—என்பது.

இதில் 'ஆற்றின் ஒழுக்கி' என்பதற்கு 'தவஞ்செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப்பண்ணி' என்று பொருள் எப்படிப் பொருந்தும் ? தவஞ் செய்கிறவர்களுக்கு உணவு, உறைவிடம் முதலிய உதவிகள் செய்து உபசரிப்பது இல்லறத்தான் செய்ய முடியும், செய்யவேண்டியது. ஆனால் தவஞ்செய்யும் துறவிகளை 'அவர்களுடைய நெறியில் ஒழுகப்பண்ணுவது' எப்படி முடியும் ? அப்படி இல்லறத்தானால் நெறி கற்பிக்கப்படுகிற தவசி என்ன தவம் செய்யத் தகுந்தவன் ? இல்லறத்தான் துறவறம் பூண்ட தவசிக்கு நெறி புகட்டுவது எப்படி முறையாகும் ?

ஆதலால் 'ஆற்றின் ஒழுக்கி' என்பதற்கு இது பொருளல்ல. பின் அதன் பொருள் என்னவெனில் இல்லறத்தானுக்கு முன்னால் சொல்லப்பட்டிருக்கிற 'ஆற்றின்படி நடத்தி' என்பதுதான். இல்லறத்தானுக்கு முன்னால் சொல்லப்பட்ட 'ஆறு' என்னவெனில் :

**தென்புலத்தார் தெய்வம்**
**விருந்துஒக்கல் தான்என்றாங்கு**
**ஐம்புலத்து 'ஆறு' ஓம்பல் தலை**

என்றபடி : முன்னோர்கள், தெய்வம், விருந்தினர், குடும்பத்திலுள்ள தன்னோடு சேர்ந்தவர்கள், தான் என்ற வரிசைக் கிரமத்தில் செய்யவேண்டிய கடமைகளை முறையாக நடத்தக் கவனித்துக் கொள்வது இல்லறத்தின் தலை சிறந்த நெறியாகும். அதாவது தனது முன்னோர்களைக் கருதிச் செய்யவேண்டிய காரியங்களை முதலில் கவனித்து அதன் பிறகு தெய்வ வழிபாட்டுக்கானவற்றை கவனித்து அதன் பின் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினர்களை உபசரிப்பதைக் கவனித்து, அதற்கடுத்துத் தன் மனையிலுள்ள மற்ற சுற்றத்தாரைக் கவனித்துவிட்டுக் கடைசியாக தன் சுகத்தைக் கவனிப்பது என்ற முறையில், இந்த ஐந்து பகுதிகளான கடமைகளைச் செய்வது என்ற கொள்கையைக் கடைப் பிடிப்பது இல்லறத்தின் தலைசிறந்த நெறியாகும்— என்பது இதன் கருத்து. இந்த 'ஐம்புலத்து ஆறு' என்பது தான் 'ஆற்றின் ஒழுக்கி' என்பதிலுள்ள 'ஆறு'. எனவே,

**ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து**

என்ற குறளுக்குச் சரியான பொருள் என்னவெனில்: முன்னால் சொல்லப்பட்ட ஐம்புலத்து ஆற்றின்படி (முறையின்படி) நடத்தி, தர்மங்களில் தவறாத இல்வாழ்க்கையானது துறவறத்தான் மேற்கொள்ளும் தவத்தைவிட

அதிகமான பொறுப்பும் சகிப்புத் தன்மையும் உடையது—என்பதாம்.

எனவே, மனிதன் இல்வாழ்க்கை நடத்துவதுதான் இயற்கையோடு ஒட்டினதென்றும், இல்லறத்தைச்சரியான முறையில் நடத்தி வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்தைச் சேரலாம் என்பதையும் சொல்லவே திருவள்ளுவர் திருக்குறளை வகுத்தார். அப்படிப்பட்ட இல்லறத்துக்குத் துணைபுரியும் அறிவே பொருட்பாலிலும் காமத்துப்பாலிலும் சொல்லப்பட்டவை. ஆகையால் வள்ளுவர் வகுத்தது இல்லறம்தான்; இல்லறத்தை வகுத்தை வகுத்தவர் வள்ளுவர்தாம்

# காந்தி படம்

## என் மானத்தைக் காத்தது

சரித்திரக்காரர்கள் கண்டறிய முடியாத காலத்திலிருந்து இந்த இந்திய நாட்டில் வளர்ந்து வந்துள்ள மெய்ஞ்ஞானத்தின் வடிவமே காந்தி மகாத்மாவாகக் காட்சியளித்தது.

அன்னியர்களின் படையெடுப்புகளாலும், அரசியல் மாறுதல்களாலும், சமுதாய சச்சரவுகளாலும், இடையிடையே மங்கிக்கிடந்தது என்ருலும் இந்த மெய்ஞ்ஞான உணர்ச்சி, இந்திய மக்களின் இதயத் துடிப்பில் எப்போதும் இருந்து கொண்டே யிருப்பது. ஆனால் உலக வாழ்க்கையுடன் ஒரு சிறிதும் சேராத முக்தி, பக்தி, மோட்சம் என்ற சொற்களோடு மட்டும் தொடர்பு கொண்டிருந்தது. ஆலயங்களிலும், குகைகளிலும், ஆச்சிரமங்களிலும் மட்டும் ஒதுங்கி நின்றுகொண்டிருந்த இந்த மெய்ஞ்ஞான உணர்ச்சியை, ஊருக்குள் இழுத்துவந்து வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் புகுத்தி சமுதாயத்தைப் புனிதப் படுத்திய பெருமை மகாத்மா காந்தி ஒருவருக்கே உரியது.

அவருடைய தலைமையின்கீழ் இந்திய மக்கள் தேர்ச்சி பெற்ற சத்திய சாந்த சன்மார்க்க அறிவுதான் இன்று சுதந்தர மடைந்த இந்திய அரசாங்கத்தின் அயல்நாட்டுறவுகளின் கொள்கையாகிய, உலக சமாதானத்துக்கு உறு துணையாக நிற்பது. காந்தி மகானை மனதில் வைத்துக் கொண்டேகாரியங்களைச் செய்வதால்தான் ஸ்ரீஜவஹர்லால்

நேருவின் அரசியல் நேர்மையும் தூய்மையும் நிறைந்ததாக இருக்கிறது. காந்தியடிகளின் நினைவு எப்போதும் மனதில் இருந்து வருவது எல்லாருக்கும் நல்லது. அந்த நினைவு இந்த நாட்டின் மூல மந்திரமாகிய 'ஒன்றாக நல்லது கொல் லாமை மற்று அதன்பின் சாரப் பொய்யாமை நன்று' என்ற வள்ளுவர் வாக்கை மறவாதிருக்கச் செய்யும். இந்திய நாட்டிற்குச் சுதந்தரம் வந்தது மகாத்மா காந்தியினால்தான் என்றாலும் நாம் அவரை மறவாதிருக்க வேண்டுமென்பது அதற்காகமட்டுமல்ல. அவர் நடத்திய சுதந்தரப் போராட்டம். அவருடைய சத்திய சாந்த சன்மார்க்கத்தைக் கொண்டு செலுத்த மிகச் சிறந்த ஒரு கருவியாக வாய்த்ததேயன்றி வேறல்ல என்பதை அவரே பல முறை எழுதியும் பேசியும் இருக்கிறார். ஆதலால் சுதந்தரம் கிடைக்கச் செய்த மகத் தான காரியத்தைவிட, இந்த நாட்டின் மெய்ஞ்ஞான நோக் கத்தின் பெருமையை ருசுப்படுத்திய சாதனையே அண்ணல் காந்தியின் அருமை. அதற்காகவே நாம் அவருடைய ஞாபகச் சின்னங்களை எழுப்பி அவருடைய படத்திற்கும் சிலைக்கும் மாலை சூட்டி பக்தி செலுத்த வேண்டும். அப் படிச் செய்வது நம்முடைய குற்றங்களைக் குறைத்துக் குணங்களை அதிகப்படுத்த உதவுமென்பதில் ஐயமில்லை.

பெரும் பணத்தைக் கண்டு மயங்கி, ஒரு கண்ணியக் குறைவான காரியத்தைச் செய்துவிடும்படி, எனக்கிருந்த சூழ்நிலைகள் தூண்டிவிடும்போல் இருந்த ஒரு சமயத்தில், என் மேஜையின் மீதிருந்த காந்தி படம் என் மானத்தைக் காப்பாற்றியது. காந்திமகானை நினைவுறுத்திக் கொள்ள வேண்டிய இந்த 'சுதந்தர தினத்தில்' அதைச் சொல்லுவது எனக்கும் கூட ஆன்மசுத்தியாகும்.

மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவில் வரிகொடா இயக்கம் நடத்திய விவரங்களைப் பத்திரிகைகளில் அப்

போதைத் கப்போது படித்துவந்தபோதே அவர் ஒரு மிக அபூர்வமான மனிதர் என்பதை உணர்ந்து, அவரிடத்தில் எனக்கு அளவற்ற பக்தி உண்டாயிற்று. தென்னுப்பிரிக்கா வில் காந்தி நடத்திய சாத்வீகப் போராட்டத்தை ஆதரித்து. அப்போது வக்கீல் தொழில் செய்துகொண்டிருந்த சேலம் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் 'தென்னுப்ரிக்கா சகாய நிதி' என்ற பெயரில் பணம் வசூலித்துத் தென்னுப்பி ரிக்காவுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அந்த வசூலுக்கு நானும் பல நண்பர்களுடன் சுற்றுப் பிரயாணம் செய்து சுமார் ஆயிரம் ரூபாய் வரையில் சேகரித்து அனுப்பினேம்.

அப்போது நான் ஒரு சித்திர வித்வானுகத் தொழில் நடத்திக் கொண்டிருந்தேன். . அந்த முறையில் அப்போது பத்திரிக்கைகளில் வெளியாகை 'பாரிஸ்டர்' உடையோடு கூடிய காந்தியின் படத்தை என் கையால் பெரிதாக வரைந்து அதற்கு 'ஆத்மா' என்று பொருள்பட ஆங்கிலத் திய் 'Soul' என்று பெயரிட்டு அழகு பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் வக்கீல் தொழில் முறையாகவும் 'தென்னுப்பிரிக்கா நிதி' விஷயமாகவும் நாமக்கல்லுக்கு வந்திருந்த ராஜகோபாலாச்சார்யாரை நானும் சில நண்பர்களும் சந்திக்கப் போனேம். போகும் போது நான் வரைந்த காந்தி படத்தையும் ஆச்சாரியாருக் குக் காட்டக் கொண்டுபோனேன். அந்தப் படம் கருப்பு-வெள்ளையில் 'புரோமைட் என்லார்ஜமென்ட்' போலக் கருப்புச் சாக்கட்டியால் வரையப்பட்டது. அதை வெகு நேரம் பார்த்தபின் ஆச்சாரியார் 'இது கையால் வரையப் பட்டதா ?' என்ருர். உடனே நான், கண்ணுடி போடப் படாமலிருந்த அப்படத்தின் ஒரு மூலையில் விரலை வைத்து அழுத்தியெடுத்து, விரலில் படிந்த கரித் துணுக்குகளைக் காட்டினேன். பிறகு ஆச்சாரியார் என்னை

மிகவும் பாராட்டிவிட்டு "ரொம்ப சந்தோஷம். சித்திரத் தொழிலில் நீங்கள் நன்ருகப் பிரகாசிப்பீர்கள். இந்தப் படத்துக்குப் பெயர் 'ஆத்மா' (**Soul**) என்றிருப்பதைக் காட்டிலும் 'அபூர்வமான ஆத்மா' (**Rare soul**) என்றிருக் கலாம்" என்று ஆங்கிலத்தில் சொன்ஞர். அதுதான் ஆச் சாரியாருடன் முதல் சந்திப்பு.

அவர் சொன்னபடியே அந்தப் படத்தின் பெயரை மாற்றி வரைந்து, சட்டம்–கண்ணுடி போட்டு என்னுடைய நாற்காலிக்கு நேராக மேஜையின் கோடியில் சுவரின்மீது சாய்த்து வைத்துக்கொண்டேன். (நான் பாடிய காந்தீயப் பாடல்களிற் பலவும் அந்தப் படத்தின்முன் எழுதப்பட் டனவே.)

1932–ம் ஆண்டில் நடந்த சத்தியாக்ருகப் போராட் டத்தில் கலந்துகொண்டு, நானும் ஸ்ரீ நாகராஜ ஐயங்காரும் ஒரே சமயத்தில் சட்டமறுப்புச் செய்து ஒரு வருடக் கடுங் காவல் தண்டனையடைந்தோம். இருவரும் ஒரே சிறையில் 'பி' வகுப்புக் கைதிகளாக இருந்துவிட்டு ஒரே நாளில் விடுதலையடைந்து வீடு வந்து சேர்ந்தோம். சிறையில் நான் நோயுற்று விட்டதனுல் என்னுடைய எடையில் இருபத் திரண்டு பவுண்டு நிறையை இழந்துவிட்டு மிகவும் பலவீன மடைந்திருந்தேன். குடும்பத்துக்கு வேண்டிய மற்ற வசதி களும் மிகவும் குறைவாக இருந்ததனுல் என்னுடைய தேகம் திடமுறுவதற்குப் பல மாதங்களாயின. அதன்பிறகு மீண்டும் காந்தீய பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டேன். 1932–ம் வருஷச் சட்டமறுப்பு இயக்கத்துக்குப் பின் மகாத்மா காந்தியவர்கள் 1940 வரையிலும் சத்யாக்ருகப் பேச்சேயில்லாமல் நிர்மாண திட்டங்களை மட்டும் கவனித் துக்கொள்ளும்படிக் கட்டளையிட்டிருந்தார்.

இப்படியிருக்கையில் நிர்மாண திட்டத்தைக் கூடச் சரிவரக் கொண்டு செலுத்தக் காங்கிரஸ்காரர்களிடத்தில் அதிகாரம் இருக்கவேண்டும் என்ற நியாயத்துடன் சட்ட சபைகளையும் ஜில்லா போர்டுகளையும் காங்கிரஸ் கைப் பற்றவேண்டும் என்ற எண்ணம் காங்கிரஸ் தலைவர்களுக் குள் ஏற்பட்டது. அதற்கு மகாத்மாவும் அனுமதியளித் தார். அடுத்து வந்த சட்டசபை தேர்தலுக்குக் காங்கிரஸ் காரர்களை நிறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. உடனே பதவி மோகம் பல காங்கிரஸ் வாதிகளைப் பற்றிக் கொண்டது. ஒவ்வொரு தொகுதியிலும் நல்ல காங்கிரஸ் காரர்களுக்குள்ளேயே பலமான போட்டி யுண்டாகி விட்டது.

நாமக்கல் தொகுதியிலும் இரண்டு வெகு நல்ல காங் கிரஸ் தலைவர்களுக்குள் போட்டி உண்டாகிவிட்டது. அட்–ஹாக் கமிட்டியார் அந்த இருவரையும் விட்டுவிட்டு அந்த இடத்துக்கு என்னை நிறுதத விரும்பினார்கள். நான் மறுத்து விட்டேன். அந்த இருவரில் ஒருவரான ஸ்ரீ நாகராஜ ஐயங்காருக்குத்தான் அந்த பதவி உரியதாகும் என்று வாதாடினேன். அதைக் கமிட்டியார் ஏற்றுக்கொண்டு ஐயங்காரையே நிறுத்தினார்கள். அவரும் எம். எல். ஏ. ஆனார்.

அடுத்தபடியாக ஜில்லா போர்டுகளின் தேர்தல் வந் தது. அதிலும் காங்கிரஸ்காரர்களுக்குள் வெகு பலமான போட்டிகள் உண்டாயின. நாமக்கல் தாலூகாவைச் சேர்ந்த ஓரு தொகுதியில் நான்கு மிகச் சிறந்த காங்கிரஸ் வாதிகளுக்குள் போட்டி வந்துவிட்டது; அவர்கள் நால் வரும் சமமான தகுதியுள்ளவர்கள். அவர்களில் யாரை எடுத்துக்கொள்வது என்பதில் மிகப் பெரிய தர்மசங்கடம்

உண்டாகிவிட்டது. எவ்வளவோ முயன்றும் அவர்களுக்குள் சமாதானம் உணடாகவில்லை. அவர்கள் நால்வரையும் ஒரு இட த்தில் கூட்டிவைத்துப் பேசி, அவர்களாகவே நால்வரில் ஒருவரை நிறுத்தச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் ஜில்லா, தாலூகா, அட்-ஹாக் கமிட்டிகளில் உள்ள பல தலைவர்களுடன் அந்தத் தொகுதிக்குப் போனோம். அந்த நால்வரையும் கூடடிவைத்து வெகு நேரம்வரை பேச்சுகள் நடந்தன. அவர்கள் நால்வரும் ஒரே பிடிவாதமாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார்கள். கடைசியில் அவர்களில் ஒருவர் "எங்கள் நாலு பேருக்கும் வேண்டாம். அந்த ஸ்தானத்துக்கு ராமலிங்கம் பிள்ளையைப் போட்டுவிடுங்கள், எனக்குச் சம்மதம்" என்றார். உடனே அங்கிருந்தவர்களெல்லாம் அதிசயிக்கும்படி மற்ற மூன்று பேரும் அதையே சொல்லித் தமக்கும் அது சம்மதம் என்றார்கள். வேறு பேச்சுக்கோ ஆலோசனைக்கோ இடங்கொடுக்காமல் கமிட்டிகளின் தலைவர்கள் அந்த ஸ்தானத்துக்கு என்னையே தேர்ந்தெடுத்துவிட்டதாகத் தீர்மானம் எழுதிவிட்டார்கள். என் சம்மதத்தைக்கூட கேட்கவில்லை. மறுக்க முடியாமல் அந்தத் தொகுதிக்கு நானே நின்றேன். அந்தப் பதவிக்கு ஆசையே காட்டாத என்னை நிறுத்தியதற்காகவோ அல்லது வேறு எதற்காகவோ என்மீது இரக்கங்கொண்டு சுயேச்சையாக அபேக்ஷை பத்திரங்கள் தாக்கல் செய்திருந்த இருவர் வாபஸ் பெற்றுக்கொண்டார்கள். நான் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஐம்பத்திரண்டு அங்கத்தினர்களைக் கொண்ட சேலம் ஜில்லா போர்டுக்கு நாற்பத்தாறு காங்கிரஸ்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மற்ற ஆறு பேரும் சுயேச்சையாக நின்றவர்கள். வேறு கட்சிக்காரர்கள் எவருமில்லை. இனி, ஜில்லா போர்டுக்குத் தலைவரைத் தேர்ந்

தெடுக்க காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திற்குத் தேதி குறிப் பிடப்பட்டது. ஜில்லா போர்டின் தலைவர் பதவி மிகவும் செல்வாக்குடையது. சுயநல எண்ணம் இல்லாமலும்கூட வெறும் பெருமைக்காக அந்தப் பதவி மிகவும் ஆசைமூட் டக்கூடியது. அந்தப் பதவிக்காக மூன்று பேர் முயன்றார்கள். அந்த மூன்று பேரும் அந்தப் பதவியைக் கருதியே காங்கிர சில் புதிதாகச் சேர்ந்தவர்கள். அந்த மூன்றுபேரும், பெரும் பணத்தைச் செலவு செய்தே தேர்தலில் வெற்றி பெற்றவர் கள். நான் காங்கிரஸ் கட்சியில் மிகுந்த செல்வாக்குள்ள வன் என்பதைக் கருதி அந்த மூன்று பேரும் தனித்தனியே என்னுடைய ஆதரவைக் கோரியவர்கள்.

கட்சிக் கூட்டத்தில் தலைவரைத் தேர்ந்தெடுக்க இன் னும் ஆறு நாட்கள் இருக்கும்போது ஒரு நாள் இரவு பத்து மணிக்கு மேல் எனக்கு மிகவும் அறிமுகமான ஒருவர் என்னிடம் வந்தார். என்னுடன் கொஞ்சம் ஏகாந்தமாகப் பேசவேண்டும் என்றார். உடனே நான் அந்த அறையிலி ருந்தவர்களைப் போகச்சொல்லிவிட்டு, கதவைத் தாளிட்டு விட்டு என் நாற்காலியைப் போட்டு அவரை உட்காரச் சொல்லி, அவர் பேச விரும்பிய விஷயத்தை சொல்லச் சொன்னேன்.

"ஒன்றுமில்லை நம்ம பரமசிவம் உங்களைப் பார்த்து வரச் சொன்னார்" என்றார். (பரமசிவம் என்ற பெயர் வெறும் புனைப் பெயர். பிறரை ஏளனத்துக்கு ஆளாக்கக் கூடாது என்பதற்காக மாற்றிச் சொல்லப் பட்டது) பரம சிவம் ஜில்லா போர்டு தலைமைப் பதவிக்காக முயற்சி செய் கிற மூவரில் ஒருவர், அந்தப் பெயரை சொன்னவுடனே நான் அவருடைய முயற்சிக்கு ஆதரவு தேடித்தர வேண்டு மென்பதைச் சொல்லத்தான் இவர் வந்திருக்கிறார் என் பதை அனுமானித்து,

"ஓ! அதைப் பற்றியா? அதைப் பற்றிப் பரமசிவமே என்னிடம் சொன்னுரே! நானும் விவரமாகச் சொல்ல வேண்டியதை யெல்லாம் அவரிடம் சொல்லியிருக்கி றேனே?" என்றேன். அதற்கு, வந்தவர்.

"அது தெரியும். ஆனால் நான் தங்களிடத்தில் சொல்ல வேண்டியது கொஞ்சம் இருக்கிறது. அவரைப் பற்றித் தங் களுக்கு அதிகமாகத் தெரியாது அதனல்" என்று அவர் முடிக்கு முன் நான் "அவரைப் பற்றி எனக்குத் தெரியும். ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு அவர் முற்றிலும் தகுந்த வர்தான். இருந்தாலும் இதில் நான் மட்டும் தனியே செய்து விடக்கூடியது ஒன்றுமில்லை. மற்றவர்களையும் கலந்து பேசித் தான் பார்க்க வேண்டும்" என்றேன்.

"அது தெரியும் எனக்கு. மற்றவர்களையும் கலந்து பேசியே செய்யுங்கள். நான் சொல்ல வந்தது அது வல்ல. பின் என்னவென்றுல் அவர் மிக நல்ல தமிழ் அபிமானி. நீங்கள் பாடியிருக்கிற பாட்டுகள்' எழுதியிருக்கிற கதை கள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் வெகு ஆசையோடு படித்திருக்கிருர், உங்கள் காந்திப் பாட்டுகளை அடிக்கடி பாடுகிருர். அது தெரியுமா உங்களுக்கு?..."

"தெரியாது" என்றேன்.

"உங்களிடத்தில் அபார அபிமானமுள்ளவர். காங்கி ரசுக்காக இவ்வளவு உழைத்து, இப்படித்தியாகம் செய்து. காந்தீயத்தைப் பற்றி இவ்வளவு அருமையான கவிதைகள் பாடியிருக்கிற உங்களுக்குச் சரியான ஆதரவு இல்லையே என்று அவர் அனுதாபப்படுவதுபோல் மற்ற யாரும் அனு தாபப்பட்டதில்லை" என்ருர்.

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்" என்றேன். மேலும் அவர்.

"சுப்ரமணிய பாரதியாரைத்தான், அவருடைய காலத்தில் தமிழ் மக்கள் அவரை சரியானபடி ஆதரிக்கவில்லை. உங்களையும் அப்படி ஆதரிக்காமல் இருந்துவிடக் கூடாது என்பது பரமசிவம் அவர்களுடைய விசாரம்" என்றார்.

சுப்ரமணிய பாரதி என்ற பெரும் பெயரோடு என்னைச் சேர்த்துப் புகழ்ந்து பேசி, என் புலமைக்கு ஆதரவு கொடுப்பதாகச் சொன்ன பேச்சைக் கேட்டு என் உச்சி குளிர்ந்து விட்டது. அந்தக் களிப்பில்,

"அப்படிப் புலவர்களை ஆதரிக்க வள்ளல்கள் இல்லையே என்றுதான் விசனிக்கிறேன். பாருங்கள் நான் சிறையிலிருந்து வெளிவந்த நாளாகத் திருக்குறளுக்குப் புது உரை எழுத வேண்டுமென்று அதற்காக ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறேன். பல இடங்களுக்குப் போய் ஏட்டுப் பிரதிகளைப் பார்க்க வேண்டும். அதற்கு வசதிகள் மிகவும் குறைவு..."

"அதற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் பரமசிவம் செய்து கொடுப்பார். அவருடைய "காரை" இந்த ஆராய்ச்சிக்காக நீங்கள் எப்போது வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகலாம். 'பெட்ரோல்' செலவும் அவரே ஏற்றுக் கொள்வார். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

அதைக் கேட்டு நான் என்னையே மறந்து மகிழ்ச்சியில் மயங்கி விட்டேன். அந்த சமயத்தில் அவர் தம்முடைய சட்டையின் உள் ஜேப்பிலிருந்து ஒரு பெருங் காகிதக் கத்தையை எடுத்து,

"பரமசிவம் உங்களிடத்தில் வைத்திருக்கும் அபிமானத்துக்கு அறிகுறியாக இதை உங்களிடம் தரச்சொன்னார். உங்கள் தமிழாராய்ச்சிக்கு எப்போது என்ன வேண்டு

மானாலும் அவர் தருவார். இதை எடுத்து வையுங்கள்'' என்று அந்தக் காகிதக் கட்டை என் கையில் வைத்து அழுத்தினார்.

அந்தக் கத்தையைப் பார்த்தேன். அது முழுதும் நூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய பெரிய கத்தை. அவ்வளவு நூறு ரூபாய் நோட்டுகளை நான் ஏககாலத்தில் பார்த்தது கூட இல்லை. சிறிது நேரம் அந்தக் கத்தையையே பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது என் மனதிலிருந்தது ஆசையா அதிசயமா என்பது எனக்கே தெரியாது.

தலையை நிமிர்த்தினேன். எதிரிலிருந்த காந்தியின் கூரிய பார்வை என்னைக் குத்துவதுபோல் இருந்தது. உடனே மயக்கம் தெளிந்துவிட்டது.

''என்னுடைய இலக்கிய முயற்சிகளுக்குப் பரமசிவம் போன்றவருடைய ஆதரவு கிடைப்பது பெரும் பாக்கியம் தான். அவர் என்மீது கொண்டுள்ள அபிமானத்துக்கு நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன். இருந்தாலும் இதை இப்போது நான் வாங்கிக்கொள்ளுவது ஜில்லா போர்டு தலைமைப் பதவி அவருக்குக் கிடைக்கச் செய்வதற்காக லஞ்சம்' வாங்கிக்கொண்டதாகத்தான் இருக்கும். இப் போது இதை ஏற்றுக்கொள்ள என் மனம் இடங்கொடுக்க வில்லை. தலைவர் தேர்தல் முடியட்டும். அதன் பின் நானே கேட்டு வாங்கிக்கொள்ளுகிறேன். அவரும் பகிரங்கமாக என் புலமைக்கு ஆதரவளிக்கலாம்'' என்று அந்தக் காகிதக் கத்தையை அவரிடமே திருப்பித் தந்தேன். அதை அவர் வாங்கிக்கொள்ள மறுத்து

''இது ஜில்லா போர்டு தேர்தலுக்காக அல்ல. சும்மா எடுத்து வையுங்கள்'' என்றார்.

"இது எதற்காகவானாலும் இப்போது ஏற்றுக்கொள் வது மாபெருங் குற்றமாகும்" என்று அந்தக் கத்தையை அவரிடமே தந்துவிட்டேன். மீண்டும் மீண்டும் பல நியா யங்களைச் சொல்லிப் பார்த்தார். நான் ஒப்புக்கொள்ள வில்லை. வருத்தத்தோடு போய்விட்டார். ஜில்லா போர்டு தலைமைப் பதவிக்குக் காங்கிரஸ் கட்சியில் பரமசிவத்துக்கு ஆதரவு கிடைக்கவில்லை. வேறொருவர் தலைவரானார்.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி அப்போது நான் யாரிடத்தும் சொன்னேனில்லை. ஆனால் பல மாதங்கள் சென்றபின் பரமசிவமே இரகசியமாகத் தம்முடைய நண்பர்கள் சில ரிடத்தில் அதைச் சொல்லி என்னைப் பாராட்டினதை அந்த நண்பர்களே வந்து என்னிடம் சொல்லிக் கேட்டு மகிழ்ச்சி யடைந்தேன். சிறுகச் சிறுக அது ஒரு பகிரங்க இரகசிய மாகி மங்கி மறைந்துவிட்டது.

இப்படியாகக் காந்திமகான் படம் என் மானத்தைக் காத்தது. அந்தப் பணத்தை நான் மறுத்துவிடாமல் ஏற்றுக் கொண்டிருந்தால் அதுவும் சிறுகச் சிறுக பகிரங்க இரகசிய மாகி என் பெருமையை அடியோடு அழித்திருக்குமே என் பதை எண்ணும்போதுதான் காந்தி பக்தியினால் நான் அடைந்த பலன் பன்மடங்கு தெளிவாகத் தெரிகிறது.

காந்தி மகான் நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்த இந்த நன்னாளில் நாமெல்லாரும் அவரை நினைத்து நம்முடைய எல்லா முயற்சிகளையும் அவர் வகுத்துக் கொடுத்த சத்திய சாந்த வழியிலேயே செய்தால், இந்திய நாடு உலக சமா தானத்துக்கு வழிகாட்டியாக இன்றுபோல் என்றும் விளங்கும்.

★